# தேர்ந்த கட்டுரைகள்

JPL
C3561

5

# 6 தேர்ந்த கட்டுரைகள்

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்ற
-8-2-1995
யாழ்ப்பாணம்

**வெளியீடு – 27**

PUBLIC LIBRARY
JAFFNA.
110424
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
35561 c.c

வெளியீடு:-

அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்,
ஜனவரி 1995.

110424CC.

உ
320.512

# வாசகர்களுக்கு

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இ
27 ஆவது வெளியீடாகும்.

இக்கட்டுரைகளில் வரும் தகவல்கள் சி
சரியானவை அல்ல. கட்டுரைகளை வாசித்
அதில் வரும் தகவல்கள், கருத்துக்களிலுள்
சரியானவற்றையும், தவறானவற்றையு
பகுத்தறிய வேண்டிய கடமை வாசகர்க
கிய உங்களைப் பொறுத்தது.

பல்வேறுபட்ட பத்திரிகைகள், சஞ்சி
களிலிருந்தும் இக்கட்டுரைகள் தொகுக்கப்ப
டுள்ளன.

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும், பே
வதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மே
ஊக்குவிக்கும்.

# உள்ளே...


| விடயம் | பக்கம் |
|---|---|
| 01. முன்னணிப் பாதுகாப்பு அணியிலுள்ள பதுங்கு குழியில் ஓரிரவு | 01—07 |
| 02. புலிகளை தம்வசப்படுத்த வல்லரசுகள் உதவலாம் | 08—10 |
| 03. வடபகுதியில் இன்று சந்திரிகா அலை வீசுகின்றது | 11—13 |
| 04. பிரபாகரன் அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் | 14—17 |
| 05. யாழ்பாணத்துக்கு ஒரு வழி | 18—20 |
| 06. யாழ்ப்பாணத் தேர்தல் ஒரு வெட்கக் கேடான கேலிக்கூத்து | 21—23 |
| 07. தற்கொடை அணியைச் சேர்ந்த பெண்புலிகள் பிரபாகரனுடன் கடைசி உணவருந்தினர் | 24—26 |
| 08. லண்டனில் இருந்து ஒரு தொலைநோக்கி | 27—35 |
| 09 மக்கள் முன்னணியின் வெற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் பதில் என்ன? | 36—41 |
| 10. ''றெயின்போ'' படை நடவடிக்கையின் மறுபக்கம் | 42—46 |
| 11. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 47—52 |
| 12. பிள்ளைப் பராயம் | 53—57 |
| 13. போரும் சமாதானமும் தமிழரின் சிந்தனையும் | 58—64 |
| 14. சேர்ச்சில் ட்ருமன் ஆகியோருடன் போற்றக்கூடியவர் மார்சல். | 65—70 |
| 15. சமாதானத் தீர்வென்ற வாக்குறுதி வேற்றுமைகளைத் தீர்க்குமா? | 71—76 |


110424

16. மகாநாட்டு அறையிலிருந்த ஈழக்கொடி 77—79

17. விடுதலைப் புலிகள் தமிழருக்கு தன்னாட்சி அதிகாரங்களை நாடுகின்றனர் 80—84

18. சமாதானப் பேச்சை முறிக்க சதி! 85—86

19. சூரிய அடுப்பால் மாசற்ற மின்னாற்றலை வழங்க முடியும் 87—93

20. உடற்பயிற்சியினால் ஆரோக்கியமான வாழ்வைப் பெறுங்கள் 94—99

21, தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைகளில் எவ்விதப் பொய்த்தோற்றங்களும் இல்லை 100—105

3561 cc

தேசிய நூலகப் பிரிவு
மா்நகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# முன்னணிப் பாதுகாப்பு அணியிலுள்ள பதுங்குகுழியில் ஓரிரவு

— நோமன் பாலிகாவதனா
(த ஐலண்ட் 24.09.1994)

*குளிரூட்டப்பட்ட அறைகளிலிருக்கும் சிலர் படையினரின் சிக்கல்களைப் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். பயங்கரவாதப் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களில் இருந்து தங்களை வடபகுதியிலுள்ள முன்னணிப் படையினர் பாதுகாத்துக் கொள்கின்றனரெனச் சிங்கள கிராமத்திலுள்ளவர்கள் வீரமாகப் பேசிக்கொள்கின்றனர். இந்தப் படையினர் முழுநேரமும் பதுங்குகுழிகளிலேயே வசிக்கின்றனர்.*

மற்றவர்கள் இவர்களின் பாவனைக்காகப் பலவிதமான பொருட்களை அனுப்பிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இவர்களுடைய உண்மையான நிலையை அறிய விரும்பும் ஒருவர் வடபகுதியில் இருக்கும் முன்னணிப் படையினரின் பதுங்குகுழியில் ஆகக்குறைந்தது ஓரிரவு தங்கி, அங்கு கேட்கும் வெடிச்சத்தங்களை ஓரிரவாவது கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்தைச் சேர்ந்த கப்டன் திலக்சேனநாயக்கா அவர்களின் தலையீட்டினால் அப்படிச் செய்வதற்கான ஒரு வாய்ப்பு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் நாள் வெள்ளிக்கிழமை எங்களுக்குக்

கிட்டியது. நாங்கள் நடுவராகப் படையினரின் பேருந்தல் பற்பகல் 2.30 மணியளவில் வவுனியாவில் பாதுகாப்பு முன்னணி அரணுக்குப் புறப்பட்டோம்.

''த ஐலன்ட்'' ''திவைன ஆகிய பத்திரிகைகளைச் சேர்ந்த திரு. சிறிமவல, கஸ்துரியாராச்சி படப்படிப்பாளர் திரு. சந்திரசிறி வீரசிங்கவும, நானும் ''லங்கா தீப'' பத்திரிகையைச் சேர்ந்த திரு. ரட்ணபால கயகே, படப்பிடிப்பாளர் திரு' சமண சந்திர ஆரியவன்சவும், ''தினமின'' பத்திரிகையைச் சேர்ந்த திரு. பிரேமலால் விஜேரட்ன, படப்படிப்பாளர் திரு. பத் சிறி கமகேயும், ''சண்டே லீடர்'' பத்திரிகையைச் சேர்ந்த திரு. மகிந்த சுபேசுந்தர, படப்பிடிப்பாளர் திரு. புத்திகா வீரசிங்க, ''சுமதி பிரசுரத்தை''ச் சேர்ந்தவர்களும் கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்தைச் சேர்ந்த வீடியோப்பகுதி மேலாளர்களும் கப்டன் திலக் சேனநாயக்கா அவர்களும் எங்களுடன் பயணம் செய்தனர்.

வானவூர்தியில் வசதியாகப் பயணம் செய்வதுபோல் பேருந்தில் பயணம் செய்வது சுலபமானது அல்ல, கடினமானதென்பதை அப்பயணம் நிரூபித்தது.

படையினரின் பேருந்து இரவு மதவாச்சியை வந்து சேர்ந்த போது குழுவின் தலைவரான கப்டன் சேனநாயக்கா ஏரிக்கரைக் குழுவைச் சேர்ந்த நாளேட்டின் எழுத்தாளர்களைப் பிரித்தெடுத்து மன்னார் வீதியால் செட்டிகுளத்திலுள்ள பதுங்குகுழிக்கு அனுப்பினார்.

திரு. சுரசேனவுக்குப் பிரதான குழுவிலிருந்து பிரிந்து செல்வதற்கு விருப்பமில்லாதிருந்தது. ஆனால் எல்லோரும் ஓரிடத்தில் இருக்க முடியாதென அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இன்னும் சிலர் வவுனியா மாவட்டத்திலுள்ள பதுங்குகுழிகளுக்குச் செல்ல வேண்டியவர்களாய் இருந்தனர். உபாலி குழுவைச் சேர்ந்த நாளேடுகளில் உள்ளவர்களாகிய எங்களை லெப்ரினென்ட் பி. ஜே. எஸ் பெர்னான்டோ அவர்களிடம் கப்டன் சேனநாயக்கா அவர்கள் மதவாச்சியில் வைத்து ஒப்படைத்தார்.

படையினரால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட தனியார் ஊர்தியில் நாம் மன்னார், மதவாச்சி வழியாகப் பயணம் செய்தோம். வீதிகள் மிகமோசமாய்ப் பழுதடைந்துள்ளமையால் எமது பயணம் மிகக் கடினமானதொன்றாய் இருந்தது.

அந்த ஊர்தி கஜசிங்கபுர படைத்தங்ககத்தை இரவு 9.15 மணிக்கு வந்தடைந்த போது, அந்தத் தங்ககத்திலுள்ள படையினர் எங்களை மகிழ்ச்சி, ததும்ப

வரவேற்று தேநீர் விருந்துக்கழைத்துச் சென்றனர். பதுங்குழியிலிருந்து கொண்டுதான் நாம் எமது இராப்போசனத்தையெடுக்க வேண்டுமென திரு. சுரசேன எனது காதுக்குள் இரகசியமாகக் கூறினார்.

அதன்பின் நாங்கள் பிரிந்து போக வேண்டுமென லெப்ரினென்ட் பெர்னான்டோ கூறினார். ஏரிக்கரை குழுவைச் சேர்ந்த இருவர் அடுத்த பக்கத்திலுள்ள பதுங்குகுழிக்குச் செல்ல வேண்டுமெனக் கூறினார். நாமிருவரும் செட்டிகுளத்திலிருக்கும் முசல்குட்டி பதுங்குகுழிக்குச் சென்றோம்.

நாமிருவரும் ஏரிக்கரை நாளேட்டு எழுத்தாளர் மற்றும் படப்பிடிப்பாளர் அவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டோம் நாங்கள் இவ்விடத்திலிருந்து இன்னும் தூரமான இடத்துக்குப் பொருட்கள் கொண்டு செல்லும் ஊர்தியிலும் (Van) உளவுயந்திர ஊர்தியிலும் (Tractor) செல்லவிருக்கின்றோம் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

பொருட்களை ஏற்றிச் செல்லும் ஊர்தியில் (Van) மோசமாய் பழுதடைந்த மன்னார், செட்டிகுளம் வீதியால் எமது பயணத்தைத் தொடங்கினோம். சிறிதுதூரம் சென்றபின் படையினரின் அரணான முசல்குட்டி பதுங்குகுழியை அடைந்து அங்கிருந்து ஒரு சிறு சரளைக்கற் பாதையூடாகச் சென்றோம்.

எங்களை முசல்குட்டி பதுங்குகுழி அரணுக்குச் சரளைக்கல் பாதையூடாகக் கொண்டு செல்வதற்கு வந்திருந்த ஊர்தியில் முசல்குட்டிப் பதுங்கு குழியைச் சேர்ந்த படையினரும் நானும் ஏறிக்கொண்டோம்.

லெப்ரினென்ட் கேணல் பெர்னான்டோ அவர்களிடம் விசாரித்தபோது முசல்குட்டிப் பகுதி வீடுகளோ அல்லது இருப்பிடங்களோ இல்லாத தரிசு நிலமென்றும், புலிகளின் பகுதியென்றும் எதிரி தன்னை மறைத்துக் கொண்டு தான் விரும்பிய மாதிரி எங்களைத் தாக்கலாமெனவும் நான் அவரிடமிருந்து அறிந்து கொள்ளக்கூடியதாயிருந்தது.

உழவுயந்திர ஊர்தியில் (Tra-cor) மூன்று மைல் தூரம் பயணம் செய்தபின் நாங்கள் முசல்குட்டி பதுங்குகுழி அரணில் இறங்கினோம்.

நல்ல நிலாவெளிச்சம் பரவிய அந்தத் தங்ககத்தில் கப்டன் டபிள்யு. எம். எ. குணசேகர அவர்கள் எங்களை மிக்கமகிழ்ச்சியுடன் வரவேற்று உங்களுக்கு இந்தப்பதுங்குகுழியில் விடியும் வரை இருக்க விருப்பமாவெனக் கேட்டபோது நாங்கள் நுளம்புகளுடன் போராடவேண்டியிருக்குமெனச் சிரித்துக்கொண்டு பதிலளித்தேன்.

லெப்ரினென்ட் பெர்னான்டோ அவர்கள் பதுங்குகுழிகளுக்குப்

போய்ச்சேர ஒரு மைல் தூர மென்றும் சாப்பிடாதிருப்பதனால் விரைவாகச் செல்லவேண்டுமெனவும் அங்கு பாம்புகளும் வேறுவகை ஊர்வனவும் இருப்பதாகவும் அவதானமாக நடந்து வரும்படியும் கூறினார்.

நான் பசியுடன் இருக்கிறேன் என்பதை என்னால் உணரமுடியவில்லை. பாதுகாப்பு முன்னணி அரண்களுக்கு முன் செல்ல எனக்குப் பொறுமையிருக்கவில்லை. எங்களின் பயணத்துக்கு உறுதுணையாய் இருந்தது நிலா வெளிச்சம் மாத்திரமே.

பாதுகாப்புப் படையினால்முன்னர் மேற்கொண்ட ''ஜயமன'' நடவடிக்கையின் பின் 1000 ஏக்கர்களுக்கு மேலான நெற்காணிகள் நாசமடைந்துள்ளன.

பதுங்குகுழி அரண்களை விட்டு வெளியேறும் போது பதுங்கு குழிக்குள் இருக்கும் காவலர் நிற்கும்படி கட்டளையிட்டது எங்கள் காதில் விழுந்தது. லெப்ரினென்ட் பெர்னான்டோ அவர்கள் நாங்கள் தோழர்கள் என அவர்களது குறியீட்டுமொழியின் மூலம் உடனேயே வெளிப்படுத்தினார்.

இந்தப் பதுங்குகுழிகள் 50 மீற்றருக்குகொன்றாய் அமைந்துள்ளதென்றும் அதன் அரண்கள் புத்தளத்திலுள்ள இலுவன்குளம் வரை இருக்கின்றனவென்றும் ஒவ்வொரு பதுங்குகுழிக்கும் மூன்று படையினர் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்களென்றும் லெப்ரினென்ட் பெர்னான்டோ கூறினார்.

லெப்ரினென்ட் பெர்னான்டோ அவர்கள் ''நாங்கள் முதலில் எதையாவது சாப்பிடுவோம்'' என்ற கருத்தைத் தெரிவித்தார்.

பதுங்குகுழிக்கு அண்மையில் 10×8 அடிகள் கொண்ட ஓலையால் வேயப்பட்ட ஓர் உறைவிடமிருந்தது. அது தான் லெப்ரினென்ட் பெர்னான்டோவின் இருப்பிடமாகும். அங்கு சில வலுமையான தூண்கள் நிலத்தில் நாட்டப்பட்டு ஒரு மெல்லிய படுக்கை அதில் கட்டப்பட்டிருந்தது. களைப்படைந்த பயணத்தின்பின் அங்கிருந்த ஒரு சிறிய பிளாஸ்ரிக் பாத்திரத்திலிருந்த தண்ணீரை நாமிருவரும் உபயோகித்தோம்.

அங்கிருந்த போத்தல் விளக்கை தனக்குச் சமீபத்தில் எடுத்து வைத்துக்கொண்டு இப்பொழுது சரியான நேரம் இரவு 12.10 என லெப்ரினென்ட் பெர்னான்டோ கூறினார்.

லெப்ரினென்ட் பெர்னான்டோ (Makeshift) அப்போதைக்கப்போது பயன்படுத்தக்கூடிய இருப்பிடத்துக்கு அண்மையிலுள்ள பதுங்கு குழியை வந்தடைந்தோம். அங்கு கடமையிலிருந்து காவலர் பதுங்கு

குழியிலிருந்த துவாரத்தின் மூலம் தனது ரி 56 துவக்கைக் காட்டிக் கொண்டிருந்தார்.

மேலும் இரண்டு படையினர் தூக்கிச் செல்லக்கூடிய கட்டில் களில் நித்திரை கொண்டனர். லெப்ரினென்ட் பெர்னான்டோ தான் ஒரு கிட்டிய இடத்துக்குச் சென்று வருவதாகவும் அதுவரை நீங்கள் இங்கு கடமையிலிருக்கும் படையினருடன் பேசிக் கொண் டிருக்கலாமெனக் கூறி வெளி யில் சென்று விட்டார்.

இதுவரை மிக அமைதியாக விருந்த அந்தப் படைவீரர் இன்று நல்ல நிலா வெளிச்ச மிருக்கிறதென்றும் இது அதி காலை 4.00 மணி வரை இப் படியே இருக்குமெனவும் கூறி னார்.

அந்தப் படைவீரர் நீங்கள் எங்களுடன் இங்கு வந்தது மகிழ்ச்சியைக் கொடுக்கின்ற தென்றும் அதனால் நாங்கள் எவ்வளவு துன்பப்படுகிறோம் என்பதையும் நீங்கள் அறியக் கூடியதாய் இருக்குமெனக் கூறி னார்.

எதிரிகளைக் கண்காணித்துக் கொள்வதற்காக முழு நாளும் நாங்கள் ஒருவர் மாறி ஒருவராய் கடமையில் ஈடுபட்டுக் கொண்டி ருக்க வேண்டுமென அவர் கூறி னார்.

நான் பதுங்குகுழியை அடைந் தபோது அங்கு நித்திரை செய்து கொண்டிருந்த படையினரில் ஒரு வர் நாங்கள் தேனீர் அருந்து வோமா எனக் கேட்டுக்கொண்டு வெளியே சென்ற அவர் கால் மணித்தியாலத்தின் பின் ஒரு கோப்பை தேனீருடன் வந்தார்

ஒரு (செக்கண்டு) நேரமாகுதல் நாங்கள் தூங்குவோமானால் அந்த வாய்ப்பைப் பயன்படுத் திப் புலிகள் எங்களைத் தாக்கு வார்கள். இப்பொழுது நாங் கள் விழிப்புடனிருக்க பழகிவிட் டோம்.

''உங்களுடைய சம்பளங்கள் யாவும் நல்லது தானே'' என நான் வினவியபோது அந்தப் படைவீரன் வாயிலிருந்து ஒரு நளினமான சிரிப்புத் தோன்றி யது. வசதிகளற்ற பகுதிகளில் கடமை புரிவதற்காக ரூபா 4500/- சம்பளமாகவும் மேலதிக படியாகவும் பெறுகின்றோமெ னக் கூறினார்.

அந்தப்படை வீரர் எனது தோழர் லெப்ரினென்ட் பெர் னான்டோ திரும்பி வந்தவுடன் அமைதியாகி விட்டார்.

லெப்ரினென்ட்பெர்னான்டோ வேறு பதுங்குகுழிகளுக்கு செல் வதைப் பற்றி கருத்தைத் தெரி வித்தார். நாங்கள் பதுங்குகுழி களைப் பார்க்கச் சென்றோம்.

''நாளேடுகளில்'' பணிபுரிபவர் கள் வந்துள்ளார்களென எங்க ளுக்கு அறிவிக்கப்பட்டது எனக்

கூறி ஒரு படைவீரர் மகிழ்ச்சியடைந்தார்.

இன்னுமொரு கோப்பை தேநீர் வழங்கப்பட்டது. துவக்குச் சத்தங்கள் சில கேட்டன. ''புலிகள் வந்துவிட்டார்களா'' என நான் கேட்டேன்.

''துவக்கு வெடிக்கு என்ன காரணம்'' லெப்ரினென்ட் பெர்னான்டோ செய்திகள் கேட்கவும் அனுப்பவும் வாய்ப்புள்ள கருவி மூலம் விசாரித்தார்.

பெரிய மிருகம் வந்து விட்டதாகப் பதில் கிடைத்தது'

யானையைத் தான் பெரிய மிருகம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. புலிகள் தரும் தொல்லைகளோடு யானைகளும் தொல்லைகள் தருகின்றன. ''நாங்கள் அவைகளைப் பயப்படுத்தி வெளியில் அனுப்புவதற்காக வானை நோக்கி சுடுவோம்' எனப் படைவீரர் விளக்கினார்.

நான் பதுங்குகுழியில் இருந்தபோது லெப்ரினென்ட் பெர்னாண்டோ வேறெங்கோ சென்றுவிட்டார்.

ஒரு படை வீரர் படுக்கையில் வேதனையால் கூனிக்குறுகிப் படுத்திருந்தார். நான் அவரிடம் சென்று ''ஏன் அழுது கொண்டிருக்கின்றீர்கள்'' என வினாவிய போது ''மலேரியா'' என இன்னுமோர் படைவீரர் நோயாளிக்காக பதிலளித்தார்.

என்னால் அதை நம்ப முடியவில்லை.

''நீங்கள் அதிர்ச்சியடையாதீர்கள். மலேரியா சாதாரண தடுமன் மாதிரி இடைக்கிடை வரும். கொழும்பை இருப்பிடமாக வைத்துக் கொண்டவர்களுக்கு இதுவொரு அதிர்ச்சி தருவதாயிருக்கின்றது.

இப்பொழுது அவரை எங்கெடுத்துச் செல்லலாம்? நாளைக்கு அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுவார்.

ஒரு படைவீரர் வேதனையைக் குறைப்பதற்காக மலேரிய நோயினால் பீடிக்கப்பட்டவரின் நெற்றியைத் தொட்டு அழுத்தி ஒரு குளிகையையும் கொடுத்தார்.

நான் பதுங்கு குழியிலுள்ள வெளிச்சத்தைக் கொடுக்கின்ற துவாரத்தினூடாக வெளியில் பார்த்தபோது மரங்களின் கிளைகள் ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்,

அங்கிருந்த படைவீரர், பதுங்கு குழிக்குப் புலிகள் வரும்போது அவர்கள் மேற்கொள்ளும் செயல்திறனைப் பற்றி விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

பயங்கரவாதிகள், பதுங்குகுழிகளுக்கு வரும்போது சிறு சிறு மரக்கிளைகளைத் தங்களுடன் கொண்டு வருவார்கள். சில வேளைகளில் நாங்கள் கவலையீனமாய் இருக்கும்போது இரு

புலிகளும் பதுங்குகுழிக்குள் வருவதுண்டு. புலிகளிடம இரவில தெளிவாகப் பார்த்து செயல் படக்கூடிய கண்ணாடிகள் இருக்கின்றன. அவை எங்களிடமில்லை எனவும அவர் கூறினார்.

பதுங்கு குழிக்குள் வரும் இரு பயஙகரவாதிகளும் குரல அலையில கேட்காதவாறு அங்கு நிற்கும் மூன்று படையினரின தொண்டைகளை நெரிப்பார்கள.

பதுங்கு குழிக்கு வரும் மற்றப் பயஙகரவாதிகள் அநத அரணில் இருககும கடைசிப் பதுங்குகுழியிலருந்து தொடர்ந்து வெடிதீர்ததுக் கொணடிருப்பார்கள.

இப்படியான தாக்குதல்கள் வடபகுதியல் இடம் பெற்றுள்ளன. நாங்கள் விழிப்புடனிருந்தால் எல்லாம் நனமையாகவே இருக்கும். ஆனால்

''சமாதானப் பேச்சுவார்த்தைகள்'' பற்றிய தனது கருதததை அவர் வெளிப்படுத்தினார். சமாதானத்தை வென்றெடுக்க போர் தான் செய்ய வேணடும் என்பதை நாம் விரும்பவில்லை ஆனால் புலிகளை எப்படி நம்பமுடியும் அது தான் சிககலாய் இருக்கினறது.

''தஜலண்ட் நாளேடு'' கொழுமபு இராணுவ தலைமையகத்தைச் சேர்நத பிரிகேடியர் சூரிய பண்டார மற்றும் லெபரினென்ட் கேணல் இடசரத் அவர்களுக்கும். கூட்டுப்படையகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் கெமுனு குலதுங்க அவர்களுக்கும், வவுனியா இராணுவ தலைமையகத்தைச் சேர்ந்த கேணல் சாலியாகுலதுங்க மற்றும் கப்டன் அசோகா வனசிங்க அவர்களுக்கும், எட்டாவது பீரங்கிப் பிரிவுக்கும், இரண்டாவது ''விஜயபாகு'' தரைபபடைக்கும் மூன்றாவது ''சிங்க'' படையணிக்கும் மற்றும் இக்கட்டுரையை ஆக்குவதில் பலவகையில் உதவி புரிந்த கப்டன் திலக் சேனநாயக்கா அவர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# உறுதியான மனோபாவம்

வெற்றி என்பது நம்முடைய திறமை, வாய்ப்பைப் பொறுத்து அமைவது அல்ல. நாம் எதிர்பார்க்கிறபடி அனைத்தும் நல்லபடியாகவே நடக்கும் என்று 90சதவிகிதம் ஆக்கபூாவமான மனோபாவத்துடன் செயல்படுகிறவர்களுக்கே கிடைக்கும். 'நல்லதே நடக்கும்' என்ற உறுதியான மனோபாவம் தான் உண்மையில் ஒவ்வொருவரும் வெற்றிபெற அடிப்படை ஆதாரமாக இருக்கிறது.

தேசிய ... பிரிவு
மாநகர ... சேவை
யாழ்ப்பாணம்.

# புலிகளை தன்வசப்படுத்த வல்லரசுகள் உதவலாம்

(த ஐலன்ட், 18.09.1994)

*தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு வார்த்தைகளில் ஈடுபடும்போது அது பின்பற்ற விருக்கும் வழிகாட்டலின் முறைபற்றி உதவிப் பாதுகாப்பு அமைச்சரான திரு. அனுருத்த ரத்வத்த அவர்கள் இந்து நாளேட்டுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.*

பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டால் அவை இரகசியமாக வைத்துக்கொள்ளப்படமாட்டாதென்றும், பேச்சுவார்த்தைகளின் போது வெளியான உரையாடல்கள் மக்களுக்கு வெளிப்படுத்தப்படுமென்றும், இச்செயற்பாட்டை சிங்கள, தமிழ் மக்கள் விரும்புவார்கள் என்றும், ஆனால் இவற்றை எளிதில் செய்து முடிப்பது கடினமெனவும் திரு. ரத்வத்த கூறுகின்றார். பேச்சுவார்தையில் அனுபவம் மிக்கவர்கள் திட்டமிட்ட பேச்சுவார்தையை ஆரம்பிக்கவே விரும்புவார்கள். ஆனால் சனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களின் ஆட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அண்மையில் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது பெற்ற அனுபவத்தைக்கொண்டு வெளிப்படையான பேச்சுவார்த்தைகள் மூலமே செயற்படுவது நல்லதெனத் தெரிகின்றது.

இனப்பூசல் விடயத்தில் அடிக்கடி கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டிருந்த தலையங்கம் எழுதுபவர்கள் பேச்சுவார்த்தைக்கான யோசனைகளை வெளிப்படையாகத் தெரிவித்துக்

கொள்ள முடியாதவர்களாய் இருந்தார்கள்.

இந்தச் சிக்கலுக்குத் தீர்வை எட்ட வேண்டுமானால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியையும் சேர்ந்த கருத்தொருமைப்பாடுடையவர்களை நேரிடையாக அழைக்கவேண்டும். பாராளுமன்றத் தெரிவுக்குழு மங்களமுனசிங்க அவர்களால் தலைமை வகிக்கப்பட்டபோது கருத்தொருமித்த அதிகாரப் பரவலாக்கம் இடம்பெற்றது. இரண்டு கட்சிகளும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மீளவும் இணைக்க விரும்பவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசை அப்பொழுது ஆதரித்த தமிழ்க்கட்சிகளும் இப்பொழுது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகளான புளொட், ஈழமக்கள்புரட்சிகர முன்னணி முதலியன கூட இரண்டு மாகாணங்களும் ஒன்று படுவதை வற்புறுத்தினார்கள். பிரதான கட்சியாக விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈழக் கோரிக்கையைத் தவிர இம்மியும் அதிலிருந்து விலகவில்லை.

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மீள வரையறுத்தல் சமஷ்டித்தீர்வு மற்றும் இந்தியாவில் இருப்பதைப் போன்ற பெரும்பாக அதிகார பரவலாக்கல் முதலான திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதாயிருந்தால் இவை போன்ற பல திட்டங்கள் ஒருவித ஐயப்பாடுமின்றி ஒன்று சேர்க்கப்பட வேண்டியதாயிருக்கும்.

திருமதி சந்திரிகாகுமாரணதுங்க தனது தீர்மானங்களை ஆரம்பித்தபின் ஆனையிறவுக்கு இருபுறத்திலும் நன்நிலையில் இருக்கின்றோம் என்ற மனநிறைவுடையவர்கள் இருக்கும்வரை தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் கொள்கையில் இருந்து இம்மியேனும் விலகி வேறெந்த ஆக்க வேலைகளிலும் செயல்படமாட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியிருக்கின்றது. உலக வரலாற்றில் சமரச இணக்கம் கண்ட குறிப்பாக தென்னாபிரிக்கா மற்றும் பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் இப்படியான பூசல்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்காதென அனைத்திலும் நன்மையே காண்பவர்கள் கூறுகின்றார்கள்.

உண்மையில் தென்னாபிரிக்காவிலும் பாலஸ்தீனத்திலுமுள்ள ஆட்சித் தலைமைப்பீடங்கள் உதாரணத்துக்கு மிக்க ஆற்றலுள்ளவர்களாய் இருக்கின்றன. எப்படி இருந்தபோதிலும் இவ்வேளையில் அங்கு நடக்கும் பூசல்களை முடிவுக்குக்கொண்டுவர வல்லரசுகளால் எடுக்கப்பட்ட முயற்சி கவனத்திற்கொள்ள வேண்டியதாயிருக்கின்றது.

இலங்கையில் நடக்கும் பூசல் பாலஸ்தீனம் மற்றும் தென்னா

KOHA JPL

ஃப்ரிக்காவில் நடந்த பூசல் மாதிரி யன்று. ஆனால் செல்வாக்குள்ள வெளிநாட்டு வல்லரசுகள் ஆற்றும் பங்கு அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஈழத்திலுள்ள குழுக்கள் தங்கள் நாடுகளில் இருந்து கொண்டு இலங்கையில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதைக் கண்டு மேற்குலக வல்லரசுகள் தங்கள் சட்டப்படி எதுவும் செய்யமுடியாதெனக் கூறி தப்பத்துக்கொள்ள முடியாது அவர்கள் உண்மையில் யுத்தத்தைக் கொண்டுநடத்தக் கூடிய ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்ததுடன் மற்றும் கடன் என்ற பெயரில் இலங்கை அரசுக்கு பங்களிப்பு செய்துள்ளார்கள். ஆனால் எந்தளவுக்கு அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது செலவாக்குச் செலுத்தக்கூடியவர்களாக உள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளை தாய்நாடான இந்தியா கைவிட்டமையால் அவர்கள் பாக்கு நீரிணைக்கு வெளியே செல்ல முடியாது இருக்கிறார்கள். ஆனால் ஐக்கியநாடுகள், கனடா, ஐக்கிய இராச்சியம்(பரித்தானிய)மற்றும் அவுஸ்ரேலியா முதலிய நாடுகளிலிருந்து நிதி மற்றும் ஏனைய உதவிகள் வந்துகொண்டிருக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் நிபுணர்கள் மீது அவர்களை ஆதரித்த அந்தந்த நாட்டு அரசுகள் நெருக்கடியான அழுத்தங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. தங்கள் நாட்டிலுள்ள மனித உரிமைக் குழுக்களும், தேவாலயங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்குமாறு இந்த அரசுகளுக்கு அழுத்தம் கொடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் இலங்கை அரசுக்காகக் கண்ணீர் சிந்துபவர்களாய் இருப்பார்களானால் தங்கள் சொந்த நாட்டிலிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்குபவர்களுக்கு ஈழுக்கோரிக்கையை கைவிட்டு அழுத்தக் கட்டுப்பாடு கொடுத்து பேச்சுவார்த்தையில் இறங்குமாறு அழைப்பு விடுக்க வேண்டும். து நிறைவேற வல்லரசுகள் உதவி புரிய முடியும்.

படையினரின் பலம் குன்றாமல் அரசு வலுவுடையதாய் இருக்கும்போ தான் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதைத் திருமதி. குமாரணதுங்க மனதிற் கொள்ள வேண்டும். அவர் ஏற்கனவே பல தைரியமான செயற்பாடுகளை படைத் தலைமைப் பீடத்தின் விருப்பத்துடன் செய்துள்ளார். அது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவியாக இருக்குமெனச் சில பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றார்கள். பேச்சுவார்த்தைகள் வெறறிபெறும் வகையில் நடைபெற நம்பிக்கையூட்டும் வழிமுறைகள் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஆனால எதிர்ச் செயற்ப்பாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து ஏற்படக்கூடும். குறிப்பாக தடுத்து வைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை விடுதலை செய்யும் விடயத்தில் அரசு மிக்க கவனமாய் இருக்கவேண்டும்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# வடபகுதியில் இன்று சந்திரிகா அலை வீசுகின்றது

— நீற்றா செபஸ்ரியான்
(சண்டே ரைம்ஸ் 8.09.1994)

*ஓரிரு தினங்களில் திருவிழா முடிவுறவுள்ள புகழ் வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி கோவிலைச் சூழவுள்ள மக்கள் கூட்டம் நிறைந்த தெருக்களில் நாம் சென்று கொண்டிருந்த வேளையில் வடபகுதியில் இன்று சந்திரிகா அலை வீசுகின்றது என எனது நண்பன் மோகன் கூறினார்.*

அங்குள்ள மக்களின் வாய்களில் சந்திரிக்காவின் பெயர் உச்சரிக்கப்படுவதையும், அங்குள்ள கடைக்காரர்கள் தங்கள் பொருட்களுக்கு சந்திரிக்கா கை வளையல்கள், சந்திரிக்கா பாய்கள் எனப் பெயரிட்டு விற்பனையில் ஈடுபட்டிருந்ததையும் கண்ட நாம் அந்தச் சூழல் சந்திரிக்கா மயமாக்கப்பட்டிருந்ததை உணர்ந்தோம். அமைதியை எட்டுவதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட சந்திரிக்கா எப்படி யாழ் நகருக்கு வருவார் என்பதை பிளாஸ்ரிக் உலங்கு வானூர்திகளை விற்பனை செய்துகொண்டிருந்த சிறுவன் ஒருவன் அங்குள்ள மக்களுக்குக் காட்டி அவர்களை மகிழ்வித்ததை நாம் கண்டோம்.

தங்க நகைகளுடனும், பட்டுச்சேலைகளுடனும் இந்தக் கோவில் திருவிழாவில் கலந்து கொண்ட பெருந்திரளான பெண்களையும், இரு தினங்களுக்குப் பின் அடைக்கலமாதா தேவாலயத்தில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தையும் காணும் எவரும் யாழ்ப்பாணம் யுத்தத்

தால் அழிவுற்றிருக்கும் பகுதி என்பதை நம்ப மாட்டார்கள்.

இருப்பினும் பல ஆயிரக்கணக்கான தங்கள் உடன் பிறப்புக்கள் கொல்லப்படவும், காயப்படவும் காரணமாகவுள்ள யுத்தம் தந்த வேதனையை இவர்கள் முகங்களில் காணக்கூடியதாகவிருந்தது.

படையினரின் தாக்குதல் காரணமாக 1993 ஆம் ஆண்டில் ஆயிரத்து நூற்றிப்பதினொரு பொதுமக்களும், விடுதலைப் புலிகளும் இறந்துள்ளதாக யாழ் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் கூறியுள்ளார்.

சில மருந்துவகைகளுக்கு விதிக்கப்பட்ட தடையும் போக்குவரத்து வசதி இல்லாமையால் கர்ப்பிணித் தாய்மாருக்கான சிகிச்சை நிலையம் செயற்படாமையும், அடிப்படை உணவுகளின் விலையேற்றமும் குழந்தைகளினதும், கர்ப்பிணித்தாய்மார்களின் இறப்பு விகிதமும் குடாநாட்டில் அதிகரித்துள்ளன.

சென்ற கிழமை காலைப்பொழுதில் வானூர்தி ஒன்று வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது அதைக் கண்ட பெண்கள் அந்த வானூர்தி குண்டுமாரி பொழியும் என அஞ்சி தரையில் குப்புறப்படுத்துக் கொண்டார்கள். ஆகவே அங்குள்ள மக்கள் இன்னும் வேதனையுடனேயே வாழ்கின்றார்கள்.

ஆனால் நாங்கள் இருந்த நண்பரின் வீட்டிலிருந்த சிறுவன் ராம், தான் இருந்த இடத்திலேயே இருந்தான். அது என்ன ரக வானூர்தி என்று எனக்கு அறியத்தர எண்ணிய ராம், அது புக்காரா எனக் கூறினான். பலாலி வான்படைத்தளத்திற்கு அணித்தாகவுள்ள கிராமம் ஒன்றைச் சேர்ந்த இச்சிறுவன், தன் உறவினர்களுடன் இடம் பெயர்ந்து வந்து இவ்விடத்தில் வாழ்கின்றான். இது அவனுக்குப் புதிய வீட்டையும் கல்லூரியையும், நண்பர்களையும் கொடுத்துள்ளது. மாறி வரும் சூழ்நிலைக் கேற்ப வாழ இவனைப் போன்ற பலர் பழகிக் கொண்டார்கள்.

யாழ்ப்பாண மக்கள் சென்ற நாலு ஆண்டுகளாக மின்சாரம் இன்றி வாழ்கின்றார்கள். மாணவர்கள் விளக்கு வெளிச்சத்தின் உதவியுடன் படிக்கின்றார்கள். அங்குள்ள தெருக்கள் இருள் சூழ்ந்தவையாகவுள்ளன.

எரிபொருளுக்கு விதித்த தடை போக்கு வரத்துச் சேவையை முற்றாகப் பாதித்துள்ளதால், குடாநாட்டிலுள்ள இளைஞர்களாக இருந்தாலும் சரி, முதியவர்களாக இருந்தாலும் சரி ஈருருளிகளையே தங்கள் போக்குவரத்துக்கான சாதனமாக உபயோகிக்கின்றார்கள்.

மூன்று பிள்ளைகளுக்குத் தாயான என் சிநேகிதி நாலு மைல்களுக்கு அப்பாலுள்ள சந்தைக்குப் போவதானாலும் சரி அயல் கிராமத்திலுள்ள சிநேகிதியைச் சந்திப்பதானாலும் சரி தனது ஈருருளியிலேயே போய் வருகின்றார்.

பொருண்மியத்தடை விதிக்கப்பட்டுள்ள இந்த நாலு ஆண்டுக் காலப்பகுதியிலேயே மக்கள் பல இழப்புக்களைச் சந்தித்துள்ளார்கள். தடை விதிக்கப்பட்ட பொருட்களில் ஒன்றான சொக்கலேற்றின் தடை நீக்கப்பட்டு அவை குடாநாட்டை வந்தடைந்ததும், புதிதான ஒன்றைப் பார்ப்பதுபோல் குடாநாட்டு மக்கள் அதைப் பார்க்கின்றார்கள் பாணியதும் மண்ணெண்ணெயினதும் விலைகள் இப்பொழுது குடாநாட்டில் குறைந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் நிர்வாக கட்டமைப்பை நாம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் காணக்கூடியதாக விருக்கின்றது குடாநாட்டு மக்களது வாழ்வின் இன்றியமையாத பொருளாகத் தமிழீழம் விளங்குகின்றது. விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடமே தீர்மானங்களை மேற்கொள்கிறது. இந்திய திரைப் படங்களைத் திரையிடக் கூடாது என இது சென்ற வாரம் தடை விதித்திருந்தது.

இந்திய திரைப்படங்களில் இழிவான காட்சிகளும், வன்செயல்களைத் தூண்டி விடக்கூடிய காட்சிகளும் மலிந்துள்ளதால் இந்தத் தடையைக் கொண்டு வந்ததாக இதற்கு விளக்கமளித்த விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படவிருக்கும் திரைப்படங்களே இனிமேல் அங்கு திரையிடப்படும். விடுதலைப்புலிகள் ஏற்கனவே இரண்டு திரைப்படங்களைத் தயாரித்துள்ளார்கள். அவை இரண்டும் விடுதலைப்போராட்டம் பற்றியதாகும். ஒவ்வொரு மாதமும் திரைப்படங்களைத் தயாரிக்க அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.

குடாநாட்டிலுள்ள எவரும் விடுதலைப்போரை மறுக்கமுடியாது. கற்களிலும் அழிக்கப்பட்ட கட்டிடங்களிலும் மாத்திரமின்றி, இயற்கை வடிவள உரு மாதிரிகளிலும், தொங்க விடப்பட்டிருக்கும் புகைப்படங்களிலும், வீரத்தியாகம் செய்த விடுதலைப்புலிப் போராளிகளின் வர்ணம் தீட்டப்பட்ட படங்களிலும் இதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. இதன் மூலம் குடாநாட்டை வீரத்தியாகிகள் தங்கள் நினைவாலயமாக ஆக்கியுள்ளனர்.

எது எப்படி இருப்பினும் சமாதானம் எட்டப்பட வேண்டும் என்ற விருப்பு மக்களுக்கு உண்டு. சமாதானம் எட்டுவது மிகவும் கடினமான விடயம் என்பதை அரசும், விடுதலைப்புலிகளும் நன்கறிவர். இருப்பினும், அதை எட்ட வேண்டும் என இருபகுதியினரும் விரும்பின் அதை எப்படியும் எட்ட முடியும்.

# பிரபாகரன் அவர்களுடன் பேச்சுவார்த்தைகள்

— ஹேவா விதாரண
(த ஐலண்ட் 26.09.1994)

*இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் பிரபாகரன அவர்களுடன் பேச்சு நடத்தப்போவதாகச் சொல்லப்படுகிறது. அரசாங்க அறிக்கையின்படி இனப்பிரச்சனை சிங்கள மக்களால் தான் உண்டாக்கப் பட்டது என வெளிப்படையாகக் கூறப்படுகின்றது. எல்லோரும் அல்லாவிடினும் பல சிங்கள மக்கள் தாங்கள் உண்டாக்கிய இனப்பிரச்சனை என்ன என்று அறிய ஆவலாக உள்ளனர்.*

அதிகமான சிங்களவர் தாங்கள் தமிழருக்கு என்ன தீங்கு செய்து விட்டோம் என்று தெரியாத நிலையில், படித்த சிங்களவர் எனச் சொல்லப்படுவோர் சிங்களவர்களால் உண்டாக்கப் பட்ட இனப்பிரச்சினை உள்ளதாகக் காட்டிக் கொள்கிறார்கள். இந்த ஆலோசகர்களின் கூற்றை கண்மூடித்தனமாக ஏற்றுக் கொண்ட அரசாங்கம் இப்பொழுது தாங்கள் செய்த பிழையைத் திருத்துவதற்கு தென்ஆபிரிக்காவில் இனஒதுக்கல் கொள்கையின் பேரில் நடைபெற்ற சம்பவங்களைக் காட்டிக் கொண்டு இங்குள்ள தமிழர் பிரச்சனையை தீர்க்க முன்வந்துள்ளது.

இதை தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளார்கள். சந்தேகமில்லாமல் விடுதலைப் புலிகள் தக்க வியூகத்தை அமைத்திருக்கும் இதே

வேளையில் அரசாங்கம் நிகழ்ச்சி நிரல் கூட இல்லாமல் அவ்விடம் செலகின்றது நிகழ்ச்சி நிரல் ஒரு புறம் இருக்க பரிவினை வாதி களின் குறைகள் என்ன என்று தெரியாமல் அரசாங்கம் அவர் களை சந்திக்கச் செல்வதை எங்களால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. இவர்கள் குறைபாடுகள் என்ன என்று அரசாங்கத்திற்குத் தெரி யாத நிலையில் விடுதலைப் புலிகள் தங்களுடைய குறைபாடு கள் என்ன என்று உலகத்திற்கு கூறியதை நான் அரசாங்கத் திற்கு எடுத்துக் கூறுகின்றேன்.

கடந்த பல ஆண்டுகளாக புலி கள் அமெரிக்க ஐரோப்பிய தொலைக்காட்சி சேவைகளை யும், அரசாங்கத்தின் பலதரப் பட்டவர்களையும், அரசாங்கங் களையும், மற்றும் மேற்கு நாடு களையும் பாவித்து அந்த நாடு களில் உள்ள மக்களை தமிழ் மக்களுக்கு சிங்களவர்களால் இழைக்கப்படும் காட்டுமிராண் டித்தனத்தைப்பற்றி வெற்றிகர மாக நம்பவைத்துள்ளார்கள். இதேவேளை இந் நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரக அதி காரிகள் தமிழீழ விடுதலைப்புலி களின் பரப்புகை பற்றி ஒன்றும் செய்யாது இருக்கின்றனர்.

இக் குற்றச் சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவிக்காது இருந்த படியால் மேலை நாடுகள் விடுத லைப் புலிகள் கூறுவனவற்றை யெல்லாம் உண்மை என ஏற்றுக் கொண்டுள்ளன. இக் கூற்றுக்கள் பின்னர் வெளிநாடுகளுக்குச் சுற்று லாவில் சென்ற அமைச்சர் எஸ் தொண்டமான் அவர்கள் அவ் விடங்களில் வெளியிட்ட அறிக் கைகளினால் மேலும் பலப்படுத் தப்பட்டன.

இலங்கைத் தூதரக அதிகாரி கள் எல்லோரும் வரியற்ற பென்ஸ் கார்களிலும், மதுபானப் பங்கு களிலும், விருந்துபசாரங்களிலும் நாட்டு மக்களின் செலவிலேயே காலத்தைக் கழிப்பதிலும் அக் கறை செலுத்தினார்கள். இவ்வித மான போக்கு இலங்கையைத் தவிர வேறு நாடுகளில் கடைப் பிடிக்கப்பட்டால் அந்த அதிகாரி கள் உடனே இனம் காணப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்பட்டோ அல்லது பதவி குறைக்கப்பட்டு தரம் குறைந்த வேலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர். எதிர்ப் பாரில்லாத தமிழீழ விடுதலைப் புலிகள் பரப்புகை நீண்ட தூரம் சென்று சிங்களவர், தமிழருக்குச் செய்யக் கூடிய காட்டுமிராண்டி தனங்கள் பற்றி மற்ற நாடுகளில் நம்ப வைத்து விட்டனர். உலகத் திற்குத் தெரிந்த காட்டுமிராண் டித்தனம் அரசாங்கத்திற்கோ, சிங்கள மக்களுக்கோ தெரிய வில்லை. இதை அரசாங்கம் அறிய வில்லை என்றால் அதன் ஆலோ சகர்கள் அரசாங்கத்தைத் தவ றானவழியில் இட்டுச் செல்கிறார் கள்என்பதாகும்.

விடுதலைப்புலிகளைத் தங்கள் குறைகள் என்ன என்ன என்று பட்டியல் தரும்படி கேட்பதன்

மூலம் அரசாங்கம் வெளி நாடுகளில் ஏற்பட்ட தப்பபிப் ராயததைப் போக்குவதற்குகடைசிச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் தங்களது குறைகள் என்னென்ன எனறு பட்டியல் தரும்படிக் கேட்டால்,வட அமெரிக்கா,ஐரோப்பா முதலிய நாடுகளுக்கு மிதமிஞ்சிய தகவல்களை அவர்கள் கொடுத்த மையால் தருமது. குமாரணதுங் காவறகு ஒழுஙகான பட்டியலைக் கொடுபபதறகுக் கஷ்டப்படுவார்கள்.

அரசாங்கத்தின் குறிப்புகளுடன் விடுதலைப் புலிகளுடைய மனக்குறைகள அடங்கிய பட்டியலை வெளிநாட்டு தகவல் நிலையங்களுக்குக் கொடுககாமல், நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தை நடத்த முற்பட்டால் விடுதலைப் புலிகளால ஐரோப்பிய, அமெரிக்கத் தொலைக் காட்சி மூலமும் அங்குள்ள அரசியல் வாதிகள் மூலமும், அரசாங்க மட்டத்திலும் மேற் கொண்ட குற்றச் சாட்டுக்களை ஊர்ஜிதம் செய்கிறது எனற கருத்தாகும் என்பது அரசாங்கத்திற்கு தெரிந்திருக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. வெளிநாட்டில் இயஙகும் தூதரகங்கள் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பரப்புரைகள் எப்படிப்பட்டவை எனபதுபற்றி ஒன்றும் அறிவிக்காதபடியால் புலிகளின் பொய்ப்பரசாரங்கள் என்ன எனபது அரசாங்கத்திற்கு ஒன்றும் தெரியாது.

இந்தக் குறிப்பிடப்படாத இனப் பிரச்சனை பற்றி பேச்சு வார்த்தைகள் தொடங்கு முன் அரசாங்கம் பொது மக்களுக்கு இரண்டு பதில்கள் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளது.

1) புலிகளால் கொடுக்கப்படும் குறைப்பட்டியலை அரசாங்கத்தின் குறிப்புடன் உலகத் தகவல் சாதனங்களுக்கு கிடைக்கத்தக்கதாகச்செய்ய வேண்டும்.

2) யாழ்ப்பாணத்தில் உள்ள சுமார் எத்தனை வீதமான மக்கள் விடுதலைப் புலிகளைத் தங்கள் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த இரண்டு முன் நிபந்தனைகளின் முக்கியத்துவத்தை அரசாங்கம் ஏற்கத் தவறி பேச்சு வார்த்தைகள் தொடங்கினால் புலிகள் கோரிக்கை சரியென்றும் அரசாங்கம் குற்றவாளியாகவும் உலகத்தின் கண்களுக்குத் தெரியும்.

அரசாங்கம் சிங்கள மக்களுக்கு தமிழர்களுடைய சட்டபூர்வமான மனக்குறைகள் என்ன என்று சொல்வதுடன் எத்தனை வீதமான தமிழ் மக்கள் பிரபாகரன் அவர்களைத் தலைவனாகக் கொள்கிறார்கள் என்ற இரண்டாவது கேள்விக்குப் பதிலாக 10% மான மக்கள் பிரபாகரன் அவர்களைப் பின்பற்றினால்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



இந்தப் பேச்சு வார்த்தைகளில் என்ன பயன் அது தமிழருக்கு நியாயமாகுமா? விடுதலைப் புலிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட குற்றச் சாட்டுப் பட்டியலை நான் அறிய ஆவலாக இருக்கிறேன்.

எவ்வளவு பிழையான தகவல்கள் கொடுக்கப்பட்டிருப்பினும் எவ்வளவு நல்லெண்ணத்துடன் யாழ் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கச் செய்தும், யாழ் மக்களின் வாழ்க்கையைச் சீரமைப்பதற்காக இதய பூர்வமான சமாதான முயற்சிகள் எடுத்திருக்கும் இவ்வேளையில் கடற்படைக்கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தைப் பிரதமர் திருமதி குமாரணதுங்க ஒருபோதும் எதிர்பார்த்திருக்கமாட்டார் என்பதை நான் நிச்சயமாகக் கூறுகிறேன்.

அவருடைய ஆலோசகர்கள் அவரை இந்நிலைக்கு ஆளாக்குகிறார்கள் என்பது தற்பொழுது அப்பட்டமாகத் தெரிகின்றது. எனவே நிலமை கட்டுக்கடங்காமல் போகுமுன் அவர் தனது ஆலோசகர்களை மாற்றுவதே சிறந்த புத்திசாலித்தனமாகும்.

# பிரான்ஸ் குழந்தைகள் அகதிகளுக்கு உதவி

ருவாண்டா நாட்டுப் படுகொலையால் பல இலட்சம் பேர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். அவர்களுக்கு உதவிட 25 டன் உணவுப் பொருட்களை பிரான்ஸ் நாடு அனுப்பி வைத்தது. அத்துடன். 'பள்ளிக் குழந்தைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு கிலோ அரிசி கொண்டு வந்து தரமுடியுமா?' என்ற வேண்டுகோளையும் பிரான்ஸ் நாட்டுக் குழந்தைகளிடம் அரசு வைத்தது. அவ்வளவுதான் பள்ளிக் குழந்தைகள் அரிசியைக் கொண்டு வந்து குவித்து விட்டனர். இதனால் மேலும் பத்து டன் அரிசி ருவாண்டாவுக்கு அனுப்பப்பட்டது. தாங்கள் சேகரித்த அரிசியைப் பள்ளிக் குழந்தைகள் சின்னஞ் சிறு கைகளால் பெரிய பைகளில் அடைக்கவும்உதவினர்.

# யாழ்ப்பாணத்துக்கு ஒரு வழி

(சண்டே ரைம்ஸ் 18.09. 994)

**கிளிநொச்சிக்கு செல்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் அபாயகரமான வடக்கு நோக்கிய பயணத்தை மேற்கொண்டோம். வவுனியா முதலாவது தடைவேலியாக அமைந்தது பாதுகாப்புப் படையினரின் காவல்த்துறைப் பகுதியினர் எமது பொதிகளையும். நாம் தலைமை தாங்கி கிளிநொச்சிக்குக் கோதுமை மா எடுத்துச் சென்ற இருபத்தைந்து வாகனங்களையும் (லொறி) சோதனை செய்தனர்.**

தாண்டிக்குளம் தடுப்பு நிலையத்தில் சோதனைகள் பூர்த்தியாகி கொடி அசைக்கப்பட்டவுடன் மூன்று கிலோமீற்றர் தொலைவிலான நொச்சிமோட்டைக்கு பிரயாணத்தைத் தொடர்ந்தோம்.

''இவ்விடத்தை தாண்டிச் செல்வது உனது சொந்தப் பொறுப்பாகும்'' என்ற எச்சரிக்கை காணப்பட்டது. நாம் துணிச்சலாக அவ்வெச்சரிக்கையைக் கடந்து பாதுகாப்புப்படையினரின் இறுதிப் பாதுகாப்பு அரண்களைக் கடந்து மனித சஞ்சாரம் (நடமாட்டம்) அற்ற நான்கு கிலோமீற்றர் அளவிலான பரப்பல் நுழைந்தோம்.

மத்தியான வெய்யிலில் பொதிகளைத் தமது தலைகளிலும் கைகளிலும் சுமந்தவாறு நூற்றுக் கணக்கான ஆடவர், பெண்டிர், சிறார்கள் துடிதுடித்துச் செல்வதை எமது பயணத்தின்போது கண்ணுற்றோம்.

எமது அடுத்த தடை புலிகளின் பிரதேசத்திற்குள் இட்டுச் சென்றது மற்ற மூலையில் நடந்தது போன்று அதே மாதிரியான நடைமுறைகள் இடம்பெற்றன. எமது பொதிகளும், பத்திரங்களும் பரிசோதனை செய்யப்பட்டன. தென்னங்கீற்று கிடுகுகளினால் சுற்றியடைக்கப்பட்டு மரங்களின் நிழல்களின் கீழ் வாங்குகளில் அமர்ந்திருந்த ஆண் பெண் அடங்கிய தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் நாங்கள் குடாநாட்டுக்குள் நுழைவதற்கான அனுமதிச் சீட்டுக்களை எமக்களித்தனர். மேடு பள்ளமான, பிரயாணம் செய்யத் தகுதியற்ற குன்றுகுழி நிரம்பிய பாதையூடாக இரண்டு மணித்தியால பிரயாணத்தின் முடிவில் கிளிநொச்சி சென்றடைந்தோம். அன்று ஞாயிற்றுக்கிழமை ஒரு ஒழுங்கான வள்ளச்சேவை நடைபெறும் நாளல்ல. ஆகவே மற்றைய ஆயத்தங்களைச் செய்து மாலையில் நேரத்துடன் மணற்பரப்பிற்கூடாக மாற்றுப் பாதைகளைப் படிப்படியாகத் தேடிப் பிடித்து இடைவிடா முயற்சியினால் நல்லூர்த் துறையைச் சென்றடைந்தோம்.

கரையோரப் பகுதிகளின் குறிப்பிட்ட பகுதிகளில் அநேகமாகக் குடா நாட்டிற்குள் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் குடாநாட்டிலிருந்து பொருட்களைக் கொண்டு வருவதற்கும் உபயோகப்படுத்தும் பாதை ஒன்றினூடாக சூரியன் சாயும் நேரத்தில் புலிகளின் துறைமுகத்தைச் சென்றடைந்தோம்.

இருள் எம்மை வேகமாகக் கௌவிப்பிடிக்கும் வேளையில் கடலேரியினூடாக எம்மைக் கொண்டு செல்லும் படகினுள் நாம் ஏறி அமர்ந்தோம். நாம் செல்லும் இடத்தைச் சென்றடையும் வரை நம்பிக்கையற்றிருந்த இந்தப் பயணத்தை நாங்கள் எட்டுப்பேர் தொடங்கினோம்.

மண்ணெண்ணையில் இயங்கும் வள்ளத்தின் இயந்திரங்கள் இரண்டும் தன்னிபக்கநிலையை அடையும் (விருத்தியடையும்) வரைக்கும் படகு மனித வலுவினால் ஐநூறு மீற்றர் தூரம் கடலில் தள்ளப்பட்டது.

நாம் இப்போது படையினரால் தடைசெய்யப்பட்ட இடத்தில் இருந்தோம். அமைதி நிலவும் காலத்தில் படகில் செல்லும் போது கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் (விண்மீன்கள்) ஒளிர்கின்ற வனப்பு அழகாகவிருக்கும். இப்போதைய போர் நேரத்தில் பயங்கரமாக இருந்தது. ஏனெனில் நாங்கள் படையினரால் சுடக்கூடிய இடத்தில் இருந்தோம்.

படகோடும் நாட்களில் வட பகுதியில் கிளாலியிலிருந்து நல்லூர் வரைக்கும் கடற் பிரயாணிகளுக்கு கடற்புலிகள் வழங்கும் பாதுகாப்பு எங்களுக்கில்லை. சொல்லப்போனால் எமது வள்

ளம் தனிமையாகச் சென்றதால் நான் அச்சமடைந்தேன் என்பது சொல்லவேண்டியதல்ல.

கடலேரியூடாக வள்ளம் நேரடியாகச் செல்லவில்லை. வலது புறத்தில் ஆனையிறவிலும் இடது புறத்தில் பூநகரியிலுமிருந்து வரும் ஆயுதப்படையினரின் தேடுதல் வெளிச்சத்தைத் தவிர்ப்பதற்காகப் படகு வளைந்து வளைந்து சென்றது.

என்நேரமும் என்னைச் சுற்று வட்டமாக நான் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த வேளையில் பூநகரிக்கு மேலாக விண்மீன் வெளிச்சத்தை விடப் பிரகாசம் கொண்டதான ஒரு வெளிச்சம் வானில் தோன்றியது. ஒரு பயங்கரமான விநாடிக்குள் அது ஓர் உலங்கு வானூர்தியென நான் ஊகித்தேன். என்னுடன் கூடவந்த ஒரு சகபிரயாணி அப்படி இல்லையென்றும் அது ஒரு வான் பந்தம் (பராலைட்) என்றும் விளக்கினார். இவ்வெளிச்சம் சிதைவுற முன் சில நிமிடங்களுக்கு நிலையாக நிலைகொண்டிருந்தது.

தண்ணீருக்கூடாக (கடல்நீருக்கூடாக) இவ்வெளிச்சமானது வெளிச்ச வீடு போன்று, தொலைவை (தூரத்தை) அண்மைப்படுத்தி கரை கிட்டிய தூரத்தில் இருப்பது போல் காட்டியதால் எனது உயிர் சந்தோசமடைந்தது. ஆனால் எமது பிரயாணம் பயங்கரமான இரண்டு மணித்தியாலங்களை எடுத்தது. எங்களது ஆடைகள் நனைந்தும் உப்பு நீர் எமது முகங்களில் தெளிக்கப்பட்டும் மற்றும் உவர் மணல் எமது தலைமயிர்களில் ஒட்டியும் குளித்தது போன்று எமது பயணம் முழுவதும் அமைந்தது. கடைசியாக கணுக்காலளவிலான நீருக்குள் நடந்து சென்று பாதுகாப்பாகக் கரை சேர்ந்தோம்.

நனைந்த துணிகளை எமது முதுகுப்புறங்களில் உலரப் போட்டவண்ணம் கிளாலியில் கிடைத்த ஒரு வாகனம் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு இருபத்தைந்து மைல் தூரம் இருளில் பயணம் செய்தோம். என்னைப் போன்று பயந்தவாறு ஆயிரக்கணக்கான மக்கள் குடாநாட்டிற்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்குமான ஒரேயொரு பாதையை உபயோகிக்கின்றனர்.

கடற்படையினரின் பீரங்கிக் கப்பலினால் நாம் தாக்கப்பட்டால் நீந்தும்தகமை அற்ற என்னால் நீரில் மூழ்குவதன்றி வேறென்ன செய்யமுடியும். இல்லை நான் பயப்படத் தேவையில்லை. இதற்கான விடையை ரமேஸ் விடுதலைப் புலி போன்ற போராளி கொண்டிருந்தார். நீந்தக்கூடிய அவர் என்னைப் பாதுகாப்பாகக் கரை சேர்த்திருப்பார். அவ்வெண்ணத்துடன் ஒரு கிழமையின் பின்பு நான் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பினேன்.

# யாழ்ப்பாணத் தேர்தல் ஒரு வெட்கக் கேடான கேலிக்கூத்து

(சண்டே லீடர் 11.09.1994)

**5**460C0 வாக்காளர் உள்ள இடத்தில் 23 வீதம் வாகசளித்த நிலையில் யாழ்ப்பாணத் தேர்தல் முடிவடைந்துள்ளது. இதன் மூலம் பாராளுமன்றத்திற்கு 10 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தெரிவு செய்யப்பட்டவர்களுள் ஒன்பது பேர் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிட்ட ஆதயும் தாங்கிய ஈழ மக்கள் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்தவர்களாவா.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத்தொடர்ந்து அநேகமான தமிழ்க்குழுக்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடக்கப் போகும் தேர்தல் ஒரு கேலிக் கூத்து என்பது தெரியும். ஏனெனில் 20 வீதத்திற்கு குறைந்த நிலப்பரப்பைத்தான் ஆயுதப் படையினர் தங்கள்கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். அவ்விடங்களில் அருமையாக சிலபொது மக்களே வசிக்கிறார்கள்.

தேர்தல் ஆணையாளர் தீர்மானத்திற்கு எதிராக மனுத்தாக்கல் செய்த மிதமான கொள்கையுடைய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகள் தங்களுடைய அங்கத்தவர்கள் யாரையாவது பாராளுமன்றத்திற்கு அனுப்பலாம் என்ற நோக்கத்தோடு முயற்சி செய்து பார்க்கத் தீர்மானித்தார்கள்.

இந்தப் பந்தயத்தில் பாதித் தூரம் சென்றதும் பலஸ்தீனத்தில் பயிற்றப்பட்ட ஆயுதபாணியாகிய டக்ளஸ் தேவானந்தா தலைமையில் உள்ள ஈழமக்கள் ஜனநாயக முன்னணியைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் போட்டியைக் கைவிட்டு தோல்வியை ஒப்புக் கொண்டார்கள். அந்தக் கட்சிகள் தங்கள் தேர்தல் பிரச்சார முயற்சிகளுக்கு போதுமான பாதுகாப்பு வசதிகள் அளிக்கப்படவில்லை என்று அரசாங்கத்தைக் குற்றஞ் சாட்டினார்கள்.

மேலும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஈழ மக்கள் ஜனநாயக விடுதலை முன்னணிக்குச் சார்பாக தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டதாக குற்றமும் சாட்டினார்கள். தேர்தல் கடமைகளுக்கு இணைப்பு மையமாக விளங்கிய பலாலி படைமுகாமில் ஐக்கிய தேசியக் கட்சி பிரதிக் காரியதரிசி சமூகம் கொடுத்தமை பற்றி மற்றத் தமிழ்க் குழுக்கள் கேள்விகள் எழுப்பின.

இவ்விடங்களில் மிகவும் குறைந்தளவு வாக்குப்பதிவே நடைபெற்றதாக அவ்விடத்தில் நின்ற மற்றக் கட்சிகளின் தேர்தல் முகவர்கள் கூறினார்கள்.

அதிகமான வாக்களிப்பு நிலையங்களில் நெருக்கமாகவும் பெரும் பாலான வாக்குப் பெட்டிகள் காலியாகவும் இருந்தன. இதே நேரத்தில் கொழும்பில் இருந்து வந்த தேர்தல் உத்தியோகத்தர் வாக்குச் சாவடிகளை முழு நேரமும் திறந்து வைத்திருந்தும் ஒரு வாக்காளர் கூட அந்தப்பக்கம் தலை காட்டியதாக இல்லை.

யாழ்ப்பாணத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு 263 வாக்குகள் கிடைத்தன. அதே நேரம் முஸ்லீம் காங்கிரசிற்குக் கிடைத்த வாக்குகள் 2096 ஆகும். இதில் கூடியளவு வாக்குகள் வெளி மாவட்டங்களில் இடம் பெயர்ந்து வாழும் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டமையால் கிடைத்த வாக்குகளாகும்.

பெரும்பாலான வடபகுதி மக்கள் கொழும்பில் இருந்தார்கள். இடம் பெயர்ந்தவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து அனுமதி பெற்று தங்களது பிரதிநிதிகளைத்தெரிவு செய்யலாம் என்ற சரத்துகள் இருந்த போதிலும் அதைப் பாவிக்காமலும் அதைப் பற்றித் தெரியாமலும், தாங்கள் தொடர்பிழந்த மாவட்டத்திலிருந்து உறுப்பினரைத் தெரிவு செய்வதில் அக்கறை செலுத்தாமலும் இருந்தார்கள்.

தமிழ்க் குழுக்கள் விடுதிகளில் உள்ள இடம் பெயர்ந்த மக்களைக் கொண்டு வாக்களிப்பதற்கு அனுமதி கோரும்படி பிரச்சாரம் மேற்கொண்டிருந்

3561cc
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



தும் அது பெரும்பாலும் புறக் ணிக்கப்பட்டது.

ஈழமக்கள் ஜனநாயக விடு தலை முன்னணியின் ஆதரவுடன் சுயேட்சைக் குழு வெற்றி பெற்றதன் காரணம் என்ன வென்றால் வடபகுதியின் பொது நிர்வாகத்தில் உற்சாகமாகச் செயற்படும். ஈழமக்கள் ஜன நாயக விடுதலை முன்னணியினர் பழி வாங்குவார்கள் எனப் பயந்தே மக்கள் வாக்களித்தனர் எனக் கூறப்படுகின்றது. இல்லை யேல் அவர்கள் வாக்களித்தி ருக்கமாட்டார்கள்.

எவ்வாறேனும் ஈழமக்கள் ஜனநாயக முன்னணியினர் தாங் கள் பொது நிர்வாகத்தில் கொண்ட ஈடுபாடுதான் தங் களுக்கு பாராளுமன்ற அங்கத் துவம் கிடைப்பதற்கு உதவியது என்று கருதுகிறார்கள்.

கூடியளவு யாழ் மாவட்டத் திற்குரிய வாக்குப் பதிவு யாழ் மாவட்டத்திற்கு அப்பால் தான் நடந்தது. ஏனெனில் முதல் முறையாக இம்முறைதான் வெளிமாவட்டத்திலுள்ள வட பகுதி வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட் டார்கள்.

யாழ் மாவட்டத்திற்கு அப் பால் மன்னார். முல்லைத்தீவு, வவுனியாவை அடங்கிய வன் னித் தேர்தல் மாவட்டத்தில் 1,78,000 பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களில் 25.3 வீதமானவர்களே வாக்களித்த னர். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவுப் பகுதியில் எவ்வித வாக்களிப்பும் நடை பெறவில்லை என தமிழ்க்குழுக் கள் கூறிக் கொள்கிறார்கள்.

வடமாகாணத்தில் 1986 ஆம் ஆண்டுத் தேர்தல் இடாப்பின் படிய வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தார்கள் இதற்குப் பின்னர் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படவில்லை. புலிகள் உள்ள திருகோணமலை யில் சில இடங்கள் உட்பட கிழக்கு மாகாணத்தில் பிரச்சார முயற்சிகள் பாதுகாப்பு நிலை கருதி முழு அளவில் நடக்க வில்லை.

## சிகரெட் முதிர்ச்சியாக்கும்

சிகரெட் பிடிக்கிறவர்கள் ஒவ்வொரு சிகரெட்டின் போதும் தங்கள் உடலில் 25 மில்லிக் கிராம் அளவு விட்டமின் 'சி' யை இழக்கிறார்கள். இதனால் தான் நுரையீரல் புற்றுநோய்வந்து விடு கிறது. மற்ற விட்டமின்களும் வேகமாக அழிவதால்முப்பது நாற் பது வயதிலேயே ஐம்பது அறுபது தோற்றத்தில் காட்சியளிக்கிறார்.

# தற்கொடை அணியைச் சேர்ந்த பெண் புலிகள் பிரபாகரனுடன் கடைசி உணவருந்தினர்

(டெயிலி நியூஸ் 21.09.94)

*தமிழர்களின் இதய பூமியில் ஒரு தனிநாட்டுக்காக நடந்து வரும் கரந்தடிப்போராட்டத்தில் முன்னணிப் போர் வீரர்களாக விருப்பதோடு தற்கொடைத் தாக்குத லிலும் தங்கள் உயிரைப் பெண்கள் அதிகளவு கொடுத்து வருகின்றார்கள்.*

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறப்புமிகு கருங் கடற் புலிப் படையைச் சேர்ந்த லெப்டினட் கேர்ணல் நளாயினி செவ்வாய் கிழமையன்று இலங்கைக் கடற் படையின் பீரங்கிப்படகுமீது தற் கொடைக் குண்டுத் தாக்குதல் ஒன்றை மேற் கொண்டதில் 27 கடற்படையினர் சாவடைந்துள் ளனர் அல்லது காணாமற் போயுள்ளனர்.

இன்னொரு பெண்ணான அங்கயற்கண்ணி கடந்தமாதம் காங்கேசன்துறையிலுள்ள கடற் படைத் தளத்துள் ஊடுருவிச் சென்று அங்கு நின்ற 4,000 தொன் எடையுள்ள கப்பலொன் றைக் குண்டு வைத்துத் தகர்த் துள்ளார். படையினருக்கெதி ரான பெரும் தாக்குதல்களில் அதிகளவிலான பெண் போராளி கள் ஈடுபட்டுள்ளனர்.

தங்களது கடைசிப் பணிக் குச் செல்லு முன்னர் அவர்கள் தலைவர் பிரபாகரன் அவர்களு டன் தங்கள் கடைசிஉணவை உட் கொள்கின்றனர் எனத் தமிழீழ

PUBLIC LIBRARY
JAFFNA.

விடுதலைப் புலிகளைச் சேர்ந்த டி. வரதராசா கூறினார்.

1991 ஆம் ஆண்டின் முன் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைக் கொன்ற பெண்ணும் கூட தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுப் படையைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்பட்டார். விடுதலைப் புலிகள் அதில் ஈடுபடவில்லை என மறுத்தாலும் இந்தப் படுகொலை இந்தியப் பொது மக்களின் அபிப்பிராயத்தை அந்தப் போராளிகளுக்கு எதிராகத் திருப்பியுள்ளது.

''ஒரு செய்தியை அனுப்பி வைக்கும் வழிமுறையாக அவர்கள் அழிப்பதையும், கொல்வதையுமே தேர்ந்தெடுத்துள்ளனர். அரசியல்மேதாவிகளைக் கொலை செய்வது போன்ற பெருந்தவறுகளை அவர்கள் செய்துள்ளனர்'' எனத் தன்னை இனங்காட்டிக் கொள்ள விரும்பாத ஒரு குடியானவர் கூறினார்.

ராஜீவ் காந்தி அவர்களையும் 1993–ஆம்ஆண்டு மே மாதத்தில் இலங்கை சனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அவர்களையும் கொலை செய்ததாகக் கூறுவதை மறுக்கும் விடுதலைப் புலிகள், இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த வேளை, 1989–ஆம் ஆண்டில் மிதவாதியான தமிழர் தலைவர் அ. அமிர்தலிங்கம் அவர்களையும், வேறுஇருவரையும் கொலை செய்ததை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழ்ப் பொது மக்களைப் புலிகளின் மடியில் இருக்கவைத்த பொறுப்பு சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தில் மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினதாகும் எனத் தமிழ் குடிமகன் ஒருவர் கூறினார்.

''சமாதான அணுகுமுறைகளில் ஈடுபடாமையாலும், தனது செருக்காலும் அரசாங்கம் எங்களைத் தள்ளி விட்டது'' எனக் கூறிய அவர் இப்போது விடுதலைப் புலிகள் தங்களை, ''நச்சுத் தன்மையான ஆயுத மேந்திய தீவிரவாதக்குழு'' எனக் காட்ட முனைந்ததாகக்கூறினார்.

கோடிட்ட நீளக்காற்சட்டைகளும், சாம்பல்நிறச்சேட்டுகளும், அரையில் அகலமான தடித்த பட்டிகளும் அணிந்தவாறு சண்டைக்கு யாழ்ப்பாண நகரில் பெண்புலிப் போராளிகள் ஈரிருளிகளில் செல்வதைக் காணக்கூடியதாக விருக்கிறது. அவர்கள் தானியங்கித் துப்பாக்கிகளையும் கொண்டு செல்கின்றார்கள்.

எட்டு இலட்சம் மீனவர்களையும், விவசாயிகளையும் பெருமளவில் கொண்ட அந்தப் பிராந்தியத்திலுள்ள ஒன்பது காவல் துறைப்பணிமனைகளிலுள்ள தங்களது சொந்தக் காவல்துறையின் மூலம் விடுதலைப் புலிகள் அங்குள்ள பொது மக்களுடன் மிக நெருங்கிப் பழகி வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள முதன்மை வாய்ந்த காவல்

துறைப் பணிமனையின் பொறுப்பாளராக 23 அகவையுடைய பெண்ணான கௌரி இருக்கின்றார். தலைமைப் பரிசோதகர் தரத்திலுள்ள இவர் ஆண்களும் பெண்களுமான 50 காவல் துறையினருக்குத் தலைமை தாங்குகின்றார்.

விடுதலைப் புலிகளின் சின்னம் தாங்கியகொடி பன்வணியலிருக்கிறது. அழகுபடுத்தப்பட்டுள்ள ஒருசிறிய அறையில் கௌரி இருக்கின்றார்.

அவர் கடும்நீலநிற காற்சட்டையும்,சுமாரான நீலநிறச் சேர்ட்டும் அணிந்திருந்தார். அத்துடன் சீவத்தயாரிப்பான ஒரு கைத்துப்பாக்கியும் காணப்பட்டது. அவரது தொப்பயல் நீல, மஞ்சள் கோடுகள் காணப்பட்டன.

''மக்கள் எங்களோடு ஒத்துழைப்பதால் நாங்கள் பலாத்காரம் பிரயோகிக்கத் தேவையல்லை. அதிகளவில் குடும்பத் தகராறு பற்றிய முறைப்பாடுகள் வருகின்றனவே தவிர வேறு கடுமையான குற்றச் செயல்கள் எதுவும் இங்கில்லை'' எனச்செய்தியாளருக்குக கௌரி கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடாத்தப்பட்டு வரும் புதன்மையான நீதிமன்றில் கௌரி வழக்குகளைத் தொடுக்கின்றார். அங்கும் வெள்ளை நிறச் சட்டைக்கு மேலாக கறுப்பு நிற அங்கியும் கறுப்பு நிறக் கழுத்துப் பட்டியணிந்த பெண் பேராளி நீதிபதியாகவிருக்கின்றார்.

இலங்கை அரசாங்கத்தின் ஆணையை நிறுத்தியுள்ளதுடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு வெளியேயுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த மக்களும் கூட தனித் தாயகம் கோரும் விடுதலைப்புலிகளினால் நடாத்தப்பட்டு வரும் நிறுவனங்களிலிருந்தே தமது பரிகாரங்களைத் தேடும் நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

படையினரை பொறுத்த வரை கடந்த நாலு ஆண்டு காலத்தில் தளர்ச்சி ஏற்பட்டாலும் இடையிடையே கடும் மோதல்கள் நடைபெற்றுள்ளன.

தாங்கள் ஏற்கனவே அனுபவித்து வருபவைகளுக்கு அனைத்துலக அங்கீகாரம் பெறுவதுடன் சுயாட்சிக்கு இணையான ஒன்றைப் பெறுவதுதான் கொழும்புடன கடைசியாக மேற்கொள்ளப்பட்டுள்ள சமாதான முயற்சிகளின் நோக்கம் என விடுதலைப் புலிகளின் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் செய்தியாளருக்குக் கூறினார்.

தேசிய ... பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# லண்டனில் இருந்து ஒரு தொலைநோக்கி

— திலக் எஸ். பெர்னாண்டோ
(லண்டன் டயறி 17.09.1994)

*அண்மையில் வீசிய அரசியல் சூறாவளி ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பலமான சலனங்களைத் தோற்றுவித்தது எனலாம். அது நாடு முழுவதிலும் பரவி 1956 ஆம் ஆண்டின் பின் இக்கட்சி எதிர்கொண்ட வலுவான அழிவைக் கொண்டுவந்த அரசியல் புயல் எனக் கருதலாம்.*

1978 ஆம் ஆண்டு ஜே ஆர் ஜெயவர்த்தனாவால் கொண்டு வரப்பட்ட புதிய சக்தி வாய்ந்த அரசியலமைப்பும் அதற்கு உதவியாக விகிதாசாரப் பிரதிநிதித்துவம் எனப்படும் புதிய தேர்தல் முறையுடனும் 17 வருட தொடர்ச்சியான ஆட்சியின் பின் எந்தக் கட்சியாவது தங்களைத் தோற்கடிக்க முடியும் என்று எப்போதாவது நினைத்திருப்பார்களா?

ஆடியில் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்ததில் இருந்து அரசியல் அரங்க நாடகம், சாதிக் கும்பலும், கதாநாயகர்களும், வில்லன்களும் உள்ள உணர்ச்சியூட்டும் நாடகமாகி விட்டது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நடந்த பிழைகள் காரணமாகக் கொழும்புக் கச்சேரிக்குள் தொடங்கிய மின்னலும், இடி, முழக்கமும் ஹேமா பிரேமதாசா ஒரு கோமாளி ஆக்கப்பட்ட நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் நாடகம் முடிவுற்றது. இது பயங்கரத் தொற்றுநோய் போல் நாடெங்கும் பரவியது.

ஐக்கிய தேசியக் கட்சி தானே வருவித்துக் கொண்ட அதிகார துஷ்பிரயோகம், காடைத்தனம். ஒரு பக்கச்சார்பான உத்தியோகம் வழங்கல், முன் எப்போதும் இல்லாத ஊழல் எல்லாம் எதிர்க் கட்சியினரால் நாட்டு மக்கள் முன் கொண்டு வரப்பட்டது. பல கோடி டொலர் ருபாவுடன் பேச்சும், புழக்கமும் வைத்திருக்கும் ஒரு சிலரைத் தவிர ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் நசுக்கப்பட்ட சாதாரண மக்களுக்கு வருங்காலம் சூனியமாகத் தோன்றியது.

## பிரதமரின் மகள் பிரதமர்

இயற்கையாகவே வசதி உள்ளவர்களுக்கும் இல்லாத வறியவர்களுக்கும் உள்ள இடைவெளி விரிவடைந்து கொண்டிருக்கும் நேரத்தில், தாக்கத்திற்கு உள்ளானவர்கள் தங்கள் வாக்குரிமை மூலம் பழிவாங்க நினைத்தது இயற்கையே. இரும்புச் சீமாட்டி என வர்ணிக்கப்படும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் மாக்கிரெட் தட்சர் போன்று இச் சந்தர்ப்பத்தைப் பாவித்து திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா ராட்டினம் போன்று தனதுபிரச்சாரத்தை முகமலர்ச்சியுடனும் புதிய உத்வேகத்துடனும் நடத்தினார். இலங்கையில் 2 ஆவது பெண்பிரதமராக வந்து சந்ததி அரசியலாளராகவும் உலகத்தின் முதல் பெண் பிரதமரின் மூத்த புதல்வி என்ற வகையிலும் இன்று உலகில் அவர் தன்னைத் தானே உயர்த்திக் கொண்டார்.

தாயார், மகள், மகன் ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் ஒரே பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதன் மூலம் பண்டாரநாயக்கா குடும்பம் மீண்டும் ஒருமுறை உலக சாதனைகள் இடம்பெறும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுவிட்டது.

இந்தியாவின் பரம்பரை அரசியல் நேரு குடும்பத்தில்இருந்து காந்தி குடும்பத்திற்கு மாறியது. அரசியல் கொலைகள் பாகிஸ்தானில் பெனாஸிர் பூட்டோவும் பங்களா தேசத்தில் பேகம் காலிதாசியாவும் பரம்பரை அரசியலுக்கு வந்தார்கள். ஆனால் சந்திரிக்காவின் விடயத்தில் கொலை செய்யப்பட்ட அவரது கணவனின் ஆதரவாளர்கள் கணிசமான அளவு இருந்த போதிலும் இலங்கையின் பிரபல்யமான இரு பிரதமர்களின் மகள் என்ற ரீதியில் இன்று அனைத்துலகத்தாலும் அங்கீகரிக்கப்பட்டுவிட்டார். (புகழ் பெற்று விட்டார்)

## துணிச்சல் மிக்கவர்

லண்டன் ரைம்ஸ் போன்ற பிரபல்யமான பத்திரிகை தனது அரசியல் தலையங்கத்தின் கீழ் ஒரு அரசியல் வாதியைப் புகழ்ந்து முன்னணிக் கட்டுரையாக எழுதுவது அபூர்வமாகும். இலங்கைக்கு ஒரு துணிச்சல் மிக்க தலைவர் தேவை. இத்தேவை திரு. பண்டாரநாயக்காவின் மகள் மூலம் கிடைத்தது எனலாம். அத்துடன் அப்பத்திரிகை மேலும்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



கூறியதாவது தனது அரசாங்கக் கொள்கைகளுக்கும் தாயாருடைய கொள்கை முறைக்கும் உள்ள இடைவெளியை எவ்வளவு தூரம் வைத்திருக்க முடியுமோ அவ்வளவு தூரம் நாட்டுமக்களின் நன்மை கருதி வைக்கவுள்ளார்.

பிரித்தானிய பத்திரிகைகள் சந்திரிக்கா குமாரணதுங்காவை ஓர் இளம் வல்லமை பொருந்திய தலைவியாகவும், அரசியல்வாதியாகவும், பிரதமர் பதவிக்கு மதிநுட்பம் கூடிய ஒரு புதிய, வரைவிலக்கணத்தையும் படைப்பார் எனக் கூறியுள்ளது.

பிரதமமந்திரி பதவிக்கு ஒரு புது வரைவிலக்கணம் படைக்கக் கூடிய அரசியல்வாதியாக வரக் கூடிய திறமையுள்ளவராக ஒரு ஆய்வு கூறியுள்ளது. இவ் ஆய்வு பிரான்சிலுள்ள சோபோன் பல்கலைக் கழகத்தில் அரசியல் பொருளாதாரத் துறையில் அவர் பெற்ற கல்வியை அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்பட்டவையாகும். வெளிநாட்டில் இருந்து கல்வி கற்ற தன்மையால் அவருடைய சர்வதேச மதிப்பு குறிப்பாக அரசியலில் அவருக்குள்ள உள்ளார்ந்த விருப்பு அனைத்துலக ஆலோசகர்களைக் கவர்ந்துள்ளது.

## தடைகளும் தடங்கலும்

பிரிட்டனில் மாக்கிரெட் தட்சர் போன்று அண்மையில் தேர்தல் பிரச்சாரத்தின் போது அவர் ஆற்றிய கவரக் கூடிய பேச்சுக்களும் அவரது கவர்ச்சிகர தலைமைத்துவமும் இல்லாவிடில் மக்கள் முன்னணி தோல்வியைத் தழுவியிருப்பது நிச்சயம். அத்துடன் திருமதி. குமாரணதுங்கா மக்கள் முன்னணிக்கும் சிறீ லங்கா சுதந்திரக்கட்சிக்கும் மேல் நிற்கும் ஒரு கோபுரமாக இருந்தார் என பிரித்தானிய பத்திரிகை மேலும் கூறியது.

இப்போது காட்சியின் ஒரு பகுதி முடிவுற்றாலும் இலங்கையின் நாடகம் இன்னமும் முற்றுப் பெற்றதாக இல்லை. தேர்தல் முடிந்து வெற்றி அறிவிக்கப்பட்ட பின் புது அரசாங்கம் ஆரம்பத்தில் பெரிய தடைகளையும், தடங்கல்களையும் தாண்ட வேண்டியுள்ளது. மக்கள் முன்னணி அரசாங்கம் மிகவும் நுணுக்கமாகச் செயல்பட வேண்டும் என்று வெளிநாட்டு அவதானிகள் நம்புகிறார்கள்.

குறிப்பாக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற பலம் மிகவும் குறைவாக இருப்பதாலும் எல்லாவற்றிற்கும் சிறுபான்மைக் குழுக்களின் ஆதரவில் தங்கியிருக்க வேண்டி இருப்பதாலும், கிட்டத்தட்டச் சமபலத்துடன் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக் குழுக்களுடனும், அக்கட்சியைச் சேர்ந்த ஒத்துழைப்பு நல்காத ஜனாதிபதியுடனும் திருமதி. குமாரணதுங்கா ஆட்சி ஆரம்ப காலத்தில் பெரிய தடைகளை எதிர்நோக்கிறார். காமினி திச

நூலகம் ... (faint library stamp)



நாயக்கா எதிர்க் கட்சித் தலைவராக வந்தபடியால் பிரதமரது பணி மேலும் கடினமாக இருக்கும் என்று மேலும் அவதானிகள் கூறுகிறார்கள்.

மக்கள் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும், தேர்தல் பிரச்சாரத்தையும் ஆராயும் போது திருமதி. சந்திரிக்கா குமாரணதுங்காவிற்கு மிகப் பெரிய எதிர்ப்புக்கள் இருப்பதைக் காட்டுகின்றன. ஊழல் யாவற்றையும் ஒழித்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டப் போவதாக அறிவித்துள்ளார்.

எப்படி இவர் இவற்றைச் செயல்படுத்தப் போகிறார்? வசதி படைத்த சிலர் மத்தியில் இந்த ஊழல் நிறைந்திருப்பதாலும் நீதிபரிபாலனமே அசுத்தப் படுத்தப்பட்டிருக்கின்றபடியால் எப்படி இவற்றைச் சீரமைக்கப் போகிறார்? முன்னைய அரசாங்க நிர்வாகத்தில் உள்ள சீர்கேடுகள் எல்லாவற்றையும் நீக்குவதில் தான் இக் கேள்விக்குப் பதில் தங்கியுள்ளது. துரிதமாகத் தீர்மானித்தது. நடவடிக்கை எடுக்கும் சந்திரிகா குமாரணதுங்காவின் ஆற்றல், அவர் சொன்னதைச் செயற்படுத்தக்கூடிய தலைவர் என மக்கள் நம்பிக்கை வைக்க இடமளிப்பதாகும்.

## கல்விச் சீர்கேடுகள்

மந்திரிசபையின் எண்ணிக்கையைக் குறைத்து அதனால் கிடைக்கும் சேமிப்பைக் கொண்டு உணவுப் பொருட்களின் விலையைக் குறைப்பதாக வாக்களித்திருந்தார். புது அரசாங்கம் அமைத்து ஒரு வாரத்திற்குள் தான் முன்னர் அறிவித்தபடி பாணின் விலையை ரூபா 3.50 சதம் ஆகக் குறைத்துள்ளார். இதை அவர் நிலைநாட்ட முடியுமா? இதுவும் அவருக்கு ஒரு பெரிய சவாலாக இருக்கப் போகின்றது.

அனுபவம் வாய்ந்த தலைமை ஆசிரியர் ஒருவர் கல்வி மந்திரிப் பதவியை ஏற்றுள்ளார் என்பதில் சந்தேகம் இல்லை. எப்படி இந்தச் சவாலை ஏற்பார் என்பது, இலங்கைச் சிறார்களுடைய மனச் சஞ்சலத்தை எப்படித் தான் தீர்ப்பாரோ என்பதில் தங்கியுள்ளது. இன்று 12 – 14 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் பாடசாலை வகுப்பு நேரங்களில் தங்களது பாட விதானங்களை முடிக்க முடியாமையால் தங்களுடைய குழந்தைப் பருவ விளையாட்டுக்களையும் இழந்து 16 மணி நேரம் மேலதிக வகுப்புக்களால் துளைத்தடுக்கப்படுகிறார்கள். இதன் காரணமாகத் தனியார் கல்வி நிறுவனங்கள் பெருகி அவை பாடசாலையின் பின்பாடசாலையாகி அளவிலும், பாடபோதனையிலும் உருமாறியுள்ளன.

பல்கலைக்கழக வசதியின்மையால் தேவையான தகுதிபெற்ற மாணவர்களும் பல்கலைக்கழக

அனுமதி பெறுவதற்கு இரண்டு வருடம் பொறுத்திருக்க வேண்டியது அடுத்த முக்கிய ம்சமாகும். இங்குதான் இப்போது இருக்கும் கல்வி முறையில் அடிப்படையான பிழைகள் ஏற்பட்டுள்ளன. இந்தத் துறையிலும் அரசாங்கம் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

## வைத்திய சேவை

வைத்திய கலாநிதிகளின் பிரத்தியேக சேவை பற்றி அரசாங்கம் என்ன நினைக்கின்றது? ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கு சுகாதாரம் மிகவும் முக்கியமான தொன்றாகும்.

தற்போது சில தனியார் வைத்தியசாலைகள் பெரும் செலவைத் தாங்கக் கூடியவர்களுக்குத் தான் சேவையாறுகின்றன. ஆனால் இதே இடத்தில் பொது வைத்தியசாலை இங்குள்ள பொது மக்களுக்கு அவர்களுடைய தரத்திற்கும், தேவைக்கும் ஏற்ப அந்தச் சேவையை வழங்க முடியவில்லை. ஒரே மாதிரியான சுகாதாரத் திட்டச் சேவை இருந்தால் அவசரமான அல்லது சிக்கலான கடும் நோயாளிகள் ஒவ்வொருவரும் கொழும்பிற்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்படாமல் எல்லா வைத்தியசாலைகளிலும் சமதரத்திலுள்ள வைத்திய வசதிகள் இருக்க வேண்டும்.

## போக்குவரத்து

அரசாங்கம் எதிர்நோக்கும் சவால்களில் முக்கிய திட்ட நிரலின்படி போக்குவரத்துச் சேவையும் பிரதானமானதொன்றாகும் வருடாவருடம் இலங்கையில் கூடிக்கொண்டு போகும்விபத்துக்களும் அதன்விளைவாக ஏற்படும் மரண விகிதமும் பெருகிக் கொண்டே போகின்றது.

இன்று இலங்கையில்ஓடும் வாகனங்கள் வீதியில் போக்குவரத்துச் செய்வதற்குத் தகுதியற்றவையாகவும் மரணப்பொறி எனவர்ணிக்கக் கூடியவையாகவும் இருக்கின்றன. இப்படிப்பட்ட வாகனங்கள் கழிவுப்பட்டடைக்கு அனுப்பவே தகுதியுடையவையாகும். புது அரசாங்கம் எப்படி இந்தச் சிக்கலைச் சமாளிக்கப் போகின்றது? ஒருவேளை போக்குவரத்து அமைச்சரின் முன்னைய அத்தாட்சிப் பத்திரத்துடனும் சுற்றாடல் அசுத்தப்படுவதைத் தடுக்க முன்னைய அரசாங்கத்தால் பல கோடி ரூபா செலவில் இறக்குமதி செய்யப்பட்டு; தற்போது அரசாங்க இலாகாக்களில் கிடந்து துருப்பிடிக்கிறதாகக் கூறப்படும்; சுற்றாடல் அசுத்தப்படுத்துவதை தடுக்கும்பொறிகளைப் பாவித்து வீதிப்பாதுகாப்பைச் சமாளிப்பார்களோ?

நெடுந்தூரம் பிரயாணம் செய்யும் பொழுது ஆடுமாடுகளைப் பட்டியில் அடைப்பது போலோ அல்லது குரங்குகள் மரங்களில்

110424

தொங்குவது போலோ பிரயா ணம் செய்ய மக்களை அனு மதிக்காமல் அவர்களுடைய வச திகளையும் குறைக்காது தனி யார் துறையினரும் சேவை வழங்க வேண்டும் என்பது பற்றி மந்திரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

உயிர்களைக்காப்பாற்றபொது சுகாதாரத்திற்கும் பாதுகாப்பிற் கும் ஒரு கொள்கை இதுவரை இலங்கையில் இருக்கவில்லை. அண்மையில் தீயணைக்கும் படை யினரின் அறிக்கைகளின்படி சுகா தாரப் பாதுகாப்புச் சட்டக்குறை பாட்டினால் வீட்டுச் சமையல் எரிவாயு தாங்கிகள் வெடிப் பினால் கொழும்பில் சராசரி 1 மாதத்தில் 3-4 பேர் மரணமடை கிறார்கள் எனச்சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. மனித உயிர்களை மதிக்கும் வளர்ச்சிஅடைந்த நாடு களில் இப்படியான சட்டங்கள் முக்கியமானதாகக் கருதப்படுகி றது.

## வெளிநாட்டுச் செலாவணி

இன்று வெளிநாடுகளில் குறிப் பாக மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்யும் இலங்கையர் களால் பெருந் தொகையான அந் நியநாட்டு செலாவணி கிடைக் கின்றது. இலங்கையில் நிலவும் திறந்த பொருளாதாரக் கொள் கையின் விளைவாக அனைத்து லக வியாபார நிறுவனங்களும் திறைசேரிப் பொக்கிஷத்திற்கு அந்நியநாட்டுச் செலாவணியைக் கொண்டுவருகின்றது. இந்தநாட் டின் ஜீ. என் பி (உன்னத) நிலை யில் உள்ளதாகக் கூறப்படுகின் றது. இப்படியிருந்தும் இன்னமும் சிலமுக்கிய கேள்விகளுக்கு விடை காண முடியாமல் இருக்கின்றது. வாழ்க்கைச் செலவை குறைப் பதற்கு ஏன் இப்படிப்பட்ட நன் மைகள் தகுந்த வழிமுறை மூலம் பெறப்படவில்லை.

வியாபாரக் கடனுக்காக வட்டி விபரம் ஏன் இன்னமும் பிரமிக்கத் தக்க நிலையில் இருக்கின்றது? வீட்டு அடைமான வட்டி விகிதம் ஏன் வானளாவப் போய்க்கொண் டிருக்கின்றது? இப்படிப்பட்ட நிலையில் சிறுவர்த்தகம் எப்படித் தப்பப் போகின்றது. யாராவது வீட்டை வாங்கவோ கட்டவோ முடியுமா? பொதுமக்கள் அல்லா மல் நிதிநிறுவனங்கள் மாத்திரம் நன்மையை அறுவடை செய்வ தற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. சந்திரிக்கா குமாரணதுங்கா உட னடியாக அவரது புது அரசியல் கொள்கைகளில் சம சந்தர்ப்பம் அளிக்க முன்னுரிமை கொடுப் பாரா? இவைகள் தான் விடைய ளிக்க வேண்டிய கொந்தளிக்கும் கேள்விகளாகும்.

## அரசியல் அமைப்பு மாற்றம்

அரசியல் அமைப்பு விடயத்தில் 1978ம் ஆண்டு வெஸ்ட் மின்ஸ் டர் பாராளுமன்ற முறையில் இருந்து ஜே ஆர் ஜெயவர்த்த னாவால் கொண்டு வரப்பட்ட ஆற்றல் மிக்க நிறைவேற்று ஜனா

திபதித்துவம் தற்போது பிழைகள் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை வாக்குகள் இன்றி உண்மையான சனநாயக விதிமுறைக்குக் கொண்டு வருவது இனிய கனவுபோலுள்ளது. தற்செயலாக இவ் விடயத்தின் விவாதத்தின்போது ஐ. தே கட்சியானது அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தால் சனாதிபதி முறையை நீக்குவதால் விநம்பத்தக்க ஆச்சரியமான நிகழ்ச்சி நடக்க இடம் உண்டு.

மக்கள் முன்னணி அரசாங்கத்திற்கு வசதிசெய்வதற்காக பாராளுமன்றத்தில் இப்படிப்பட்ட மசோதாக்களுக்கு தாம் ஆதரவளிக்கப் போவதாக திரு. காமினி திசநாயக்கா வாக்குறுதியளித்துள்ளார். இருந்தும் சனாதிபதி தேர்தலுக்கு முன்னுள்ள குறுகிய கால இடைவெளிக்குள் அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டு வந்து செயல்படுத்த முடியுமா?

அஷ்ரப் மக்கள் முன்னணியின் மந்திரியாக வந்தமையால் ஐக்கிய தேசியக் கட்சியும், திருமதி. குமாரணதுங்காவும் திட்டமிட்டது போல் சனாதிபதி முறை அல்லாமல் ஜேர்மனியில் இருப்பது போல் சனாதிபதி முறை என்றால், அதை இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் பரிந்துரைக்கும் எனச் சுட்டிக் காட்டியுள்ளார். இது முழுச் செயற்பாடுகளையும் தடுத்துத் தாமதிக்க வைக்குமா?

புலிகளினதும் மற்றும் தமிழ்க் குழுக்களினதும் மனக் குறைகளுக்கு ஒரு தீர்வு காணப்படாது விட்டால் அரசியல் அமைப்பு மாற்றமோ அன்றி திறந்த பொருளாதாரக் கொள்கையோ நாட்டின் சமூகநிலையை நிலைநாட்ட முடியாதென அரசியல் ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர். இது பகீரதப் பிரயத்தனமாக இருக்கக்கூடிய பணி என்றாலும் திருமதி. சந்திரிக்கா குமாரணதுங்கா தேர்தல் பிரச்சாரத்தின் போது வெளிப்படையாகவும் துணிச்சலாகவும் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்குத் தான் தயாராக இருப்பதாகக் கூறிவிட்டார். இதுதான் சரியான அணுகுமுறை என்று மேற்கு நாடுகள் கருதுகின்றன.

## தமிழ் அமைச்சர்

வெளிநாட்டு அமைச்சராக ஒரு தமிழர் நியமிக்கப்பட்டமை தமிழ்ச் சமுதாயத்திற்கு மற்றும் ஒரு ஆறுதல் தரக்கூடிய விடயமாகும். திரு. கதிர்காமர் முன்னைய சட்டத்தரணி என்பதுடன் முன்னாள் ''ஒக்ஸ்போட்'' (Oxford)பல்கலைக்கழகத்தின் மாணவருமாவார் அவரை அனைத்துலக சமுதாயமும் இந்த நாட்டு அரசாங்கமும் (இந பகுதியினரும்) அவரில் பெருமதிப்பு வைத்துள்ளார்கள்.

இலங்கையின் வெளிநாட்டுச் சேவை ஊழல்கள் நிறைந்ததாகவும் முன்னைய வெளிநாட்டுத்

தூதுவர்கள் உறவினருக்கு சலுகைகள் செய்வதாகவும் பத்திரிகைகள் தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டி வந்துள்ளன வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள் உதாரணமாக லண்டனில் இருப்பதைப் போன்று (பல வேளைகளில் ஒரு தொழில் பார்ப்பதற்கு இருவரும் புது உத்தியோகங்களை உண்டாக்கி தேர்தலுக்கு முதல் நாள் கூட புது நியமனங்கள் செய்யப்பட்டது போன்று) புது வெளிநாட்டுக் கொள்கையால் இந்த நியமனங்களைக் குறைக்க முடியுமா? இதே போன்று புது நியமனங்களுக்கும் அதற்கேற்ற விசேட படிகளுக் நம் துந்த மாதிரியான புதுப் பரபுகளும் அவர்களுடைய எடுபிடிகளும் தங்களுடைய அரசியல் பலத்தைப் பாவித்து படித்த அனுபவமுள்ள, மதிப்பான வெளிநாட்டுத் தூதுவர்களை பொம்மைகளை ஆட்டுவது போல் ஆட்டி வைப்பவர்களை வைத்துப் பராமரிக்க எவ்வளவு பாரிய அந்நிய நாட்டுச் செலாவணி விரயமாகும். செலவு வரையறுக்கப்பட்ட ஒரு வெளிநாட்டுத் தூதுவரின் வதிவிடம் சம்பந்தமான செலாவணி குறிப்பாக முக்கியமான இடமாகக் கருதப்படும். லண்டனில் கணிசமான பெரும் தொகைப்பணம் வீட்டு வாடகையாகக் கொடுக்க வேண்டியுள்ளது. லண்டனில் வீட்டு வாடகைக்கு 90,000 தேவைப்படுகிறதாக நம்பப்படுகிறது. ஆகவே வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் புதிய உத்தியோகத்தர்கள் நேர்மையாகவும் கண்ணியமாகவும் விருப்புடனும் இருந்து சேவை செய்வார்களா? தங்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பதிலும் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதிலும் காலத்தைப் போக்காது விருப்பமுடன் சேவை செய்ய முன் வருவார்களா?

ஆகவே புது வெளிநாட்டமைச்சருக்கு பயங்கரமான பணி முன் வைக்கப்பட்டுள்ளது. முன்னரே விதைத்து வேரூன்றி உள்ளூர உழுத்துப்போன மரக்கட்டைகள் போன்றவற்றைத் துப்புரவு செய்வது போன்ற பெரும் அச்சம் தரக்கூடிய பணி அவர்கள் முன்னால் வைக்கப் பட்டிருக்கிறதென அஞ்சப்படுகிறது.

லண்டனிலுள்ள இலங்கையர் புதிதாகத் தெரிவான அரசாங்கத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. அத்துடன் அவர்களில் அதிகமானோர் வலிமையும், திறமையும், கவர்ச்சியும் மிக்க இளம் தலைவரை அவர்கள் விரும்புகிறார்கள்.

இலங்கை பல காலமாக எதிர்பார்த்திருந்த புது விதமான தலைவர் திருமதி. குமாரணதுங்கா என பொதுவாக அபிப்பிராயப்படுகிறார்கள்.

கொழும்பில் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா பிரதம

3561cc



ராகச் சத்தியப் பிரமாணம் எடுத்த அதே நேரத்தில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்துலக விடயங்களுக்கும், வளங்களுக்கும் இணைப்பதிகாரி யான சரத் விஜயசிங்க மற்றும் அனுதாபிகளுடன் 1994 ஆம் ஆண்டு புரட்டாதி 19 ஆம் நாள் காலை மதவைபவங்களில் கிழக்கு லண்டனில் உள்ள பௌத்த கலாச்சார மண்டபத்தில் பங்கு பற்றினார். இதன் பின்னர் இலங்கையில் சனநாயகத்தை நிலை நாட்டும் இயக்கம் பிரித் ஓதல் வைபவத்தை நடத்தியது. இதைத் தொடர்ந்து சிறி சதா திஸ்ஸ சர்வதேச பௌத்த நிலையத்தில் புதியபிரதமருக்கும் அவரது அரசாங்கத்திற்கும் இலங்கை நாட்டு மக்களுக்கும் மும்மணிகளிடம் ஆசீர்வாதம் வேண்டி பிரார்த்தனை நடை பெற்றது.

# ஓட வேண்டாம் நடவுங்கள் போதும்

தேகப்பயிற்சி செய்வதன் மூலம் உடலுக்குப் பலன் உண்டு என்பதில், எவ்விதமான சந்தேக மும் இல்லை. ஆனால் எந்த அள வுக்கு அதைச் செய்ய வேண்டும், எவ்வளவு கடினமான தேகப்பயிற் சியை மேற்கொள்வது நலம் என் பதில் சில ஆராய்ச்சிகளைச் செய்து அமெரிக்கன் விளை யாட்டுப் பயிற்சி மருத்துவக் கல்லூரி (American College of Sports medecine) முடிவுகளை வெளியிட்டிருக்கிறது. இப்பரிசோ தனையின் முடிவில் தேகப்பயிற்சி என்றபெயரில் ஓடுவது அவசியம் இல்லை; வேகமாக நடந்தாலே போதுமானது என்று முடிவெடுத் திருக்கிறார்கள். இப்படி வேக மாக நடப்பது என்பது 27 நிமி டங்களில் மூன்று கிலோமீட்டர் நடப்பதாகும். இதைப பெண் ணானால் 30 நிமிடங்களில் நிகழ்த்தலாம். நடுத்தர வயதின ரும் அதற்கு மேற்பட்டவர்களும் தினமும் 3 கி. மீ. நடைப்பயிற்சி செய்தால் போதுமானது என்கி றது இந்த ஆராய்ச்சியின் முடிவு

# மக்கள் முன்னணியின் வெற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் பதில் என்ன?

— தாரகி

(த ஐலன்ட் 13.11.94)

*சனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் ஆகக் குறைந்தது ஒன்பது இலட்சம் வாக்குகளையாவது பெற்றுக் கொள்ளலாம் என மக்கள் முன்னணி நம்பி இருந்தது. ஆனால் அவர்கள் அதனிலும் பார்க்கக் கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ளார்கள். சந்திரிகாவினாலேயே சமாதானத்தைக் கொண்டுவர முடியும் எனத் தமிழர்கள் தாங்கள் வாக்களித்த இடங்களில் எல்லாம் சமாதானத்துக்காக வாக்களித்துள்ளனர்.*

யாழ்ப்பாண மாவட்டத்தைத் தவிர கூடுதலான தமிழ் மக்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே வாழ்ந்து வருகின்றார்கள். நாங்கள் அதிகம் குறைந்தளவான 2.97 வீதம் வாக்குகள் அளிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தை விட்டு வாக்களிக்கப்பட்ட மற்ற மாவட்டங்களை நோக்கினால், மட்டக்களப்பு மாவட்டத்தில் 87 வீத வாக்குகளை மக்கள் முன்னணி பெற்றுள்ளது. இவை நாட்டில் அது பெற்ற வாக்குகளில் மிகக் கூடுதலானவையாகும். ஆனால்யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட செல்லுபடியான 17,500 வாக்குகளில் 96.35 வீத வாக்குகளும் சந்திரிகாவிற்கே அளிக்கப்பட்டுள்ளன.

வவுனியா, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் முன்னெருபோதும் இல்லாதவாறு தமிழ் மக்களின் ஆதரவை அவர் பெற்றிருக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டிருப்புத் தொகுதியில் அளிக்கப்பட்ட வாக்குகள் தமிழ் மக்களின் மனோநிலையை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இந்தத் தேர்தல் தொகுதியில் மிகவும் குறைந்தளவிலேயே சிங்கள, முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆயுதப் படையினரால் விடுவிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள தேர்தல் தொகுதிகள் எல்லாவற்றிலும் அரசியலில் முக்கியத்துவம் வகிக்கக்கூடியளவில் சிங்கள முஸ்லிம் வாக்காளர்கள் இருந்து வருகின்றனர். சில வேளை திருகோணமலை, அம்பாறைத் தேர்தல் தொகுதிகள் அவர்களில் எவராலோ ஆதிக்கம் செலுத்திவரப்படுகின்றது. பட்டிருப்புத் தேர்தல் தொகுதி 95% தமிழ் வாக்காளர்களைக் கொண்டது. இங்கு இந்தத் தேர்தலில் காமினிக்குச் சார்பாக இருந்த ஒரேஒரு இந்திய சார்புக்குழுவான தமிழீழ விடுதலை இயக்கத்தின் உதவியுடன் சிறிமா திசநாயக்கா 631 வாக்குகளை மட்டுமே பெற்ற வேளை சந்திரிகா 40 489 வாக்குகளை, கிடைக்கப்பெற்ற வாக்குகளில் 94.16 வீதத்தைப் பெற்றுள்ளார்.

வடக்குக் கிழக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமிழர்கள் மக்கள்முன்னணிக்கு அளித்த முன்னெப்போதுமில்லாத இந்த ஆதரவை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத அரசியலுக்கு ஏற்பட்ட ஒரு பின்னடைவு எனக் கொள்ளமுடியுமா?

தமிழர்கள் மக்கள் முன்னணிக்கு வாக்களித்ததர்வது ஒரு ஐக்கிய இலங்கைக்குள் நட்டணக்கமான முறையில் தங்கள் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்கு இன்னமும் ஒரு சிங்களத் தலைவர் மீது அவாகள் நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றது என்ற அடிப்படையில் இந்தக் கேள்வி பல பக்கங்களிலுமிருந்தும் எழுப்பப்பட்டுள்ளது.

மக்கள் முன்னணியில் தலைமைப் பீடம் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காகப் பலமாக உழைத்து வருகின்றது என்ற நோக்கில் பட்டிருப்பு வாக்காளர்கள் அதற்குத் தமது முழுமையான ஆதரவை அளித்துள்ளனரென்பதை வெளிக்காட்டுவது தமிழ் மக்களின் பொதுவான மனோநிலையானால், அது தமிழீழ விடுதலைப் புலிகள் தாங்கள் எந்த மக்களைப் பிரதிநிதிப்படுத்தி வருகின்றார்கள் எனக் கூறுகின்றார்களோ அந்த மக்களின் நன்மை கருதி அவர்கள் தங்கள் பக்கத்தைச் சமா

தான நடைமுறைகளைச் செய்து முடிப்பதற்கு எவை தேவையோ அவைகளைச் செய்வதையும், அதனது அடிப்படைக் கொள்கையை மீளாய்வு செய்வதையும் கட்டாயப்படுத்துமா?

இல்லை என்பதே இதற்கான பதிலாகும்.

எனது கருத்தைப் பொறுத்தவரை இப்போது சந்திரிக்காவிற்கு அளிக்கப்பட்ட தமிழர்களது வாக்குகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவினை வாதத்திற்கு ஏற்றதாக இரு மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வருவதற்காகச் சிங்களத் தலைமைப் பீடத்திற்குத் தமிழ் மக்களால் வழங்கப்பட்ட இன்னொரு சந்தர்ப்பமாகவே அவர்கள் அதைப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளனர் என்பதாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் ''எங்கள் குறிக்கோள் தமிழீழம். ஆனால் அதற்கு இணையாக ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு மாற்றுத் திட்டத்தை தாங்கள் பரிசீலிப்போம்'' என எப்போதும் கூறி வந்துள்ளனர்.

ஆகவே இந்தக்கட்டத்தில் விடுதலைப் புலிகளின் நிலையானது யுத்தநிறுத்தம் இல்லாதவரையிலும் ஈழத்துக்கு மாற்றீடாக ஒரு ஒப்பேறக்கூடிய யோசனை இல்லாத வரையிலும் அவர்கள் தங்களது தலையான கருத்தைத் தொடர்ந்து விடாது கைக்கொண்டு அதன் மூலம் தமது குறிக்கோளான போரையே நடத்திவருவர்.

மக்கள் முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கிய காலத்திலிருந்து விடுதலைப் புலிகள் தாங்கள் மேற்கொண்டு வரும் ஒவ்வொரு படை நடவடிக்கையின் போதும் இந்த நிலையை மீண்டும், மீண்டும் கூறிவருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய வெளியீடான ''எரிமலை'' தனது ஆசிரியத் தலையங்கத்தில் முன்னைய அரசின் இராணுவத் தீர்வின் அடிப்படையிலான முயற்சி வெற்றி பெறவில்லை. மக்களின் துணிவினால் பொருண்மியத் தடை தோல்வி உற்றது. அது தமிழர்களின் அனுதாபத்தை மேலும் இழக்கச் செய்துள்ளது. இது தேக்கநிலை என அழைக்கப்படுகிறது. சிலர் இதை இருபக்கத்தாருக்கும் பயன்படுத்தி இருபகுதியினரும் வெல்ல முடியாது என வாதிட்டனர்.

அரசின் நிலையை மட்டுமே தேக்க நிலை எனக் கூறலாம். ஆனால் விடுதலைப் புலிகளின் நிலையைத் தேக்க நிலை எனக் கொள்ள முடியாது. அவர்கள் ஆர்வத்துடன் விடுதலைக்கான போராட்டத்தில் ஈடுபட்டவர்கள். தேக்க நிலை இரு பகுதியினருக்கும் பொதுவானதல்ல அது அரசாங்கத்திற்கே உரியது.

KOHA

அது சட்ட ரீதியிலோ, யாப்பு ரீதியிலோ, நிருவாக ரீதியிலோ, இன அழிப்பிலோ, படை ரீதியிலோ, பொருண்மிய ரீதியிலோ, தமிழ் மக்களை ஒடுக்குவதில் தோல்வியடைந்து விட்டது. முழுமையான இன அழிப்பில் ஈடுபட அதனால் முடியாது. இந்த ஒடுக்குமுறையானது எதிர் விளைவுகளை மட்டுமே தரும். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் இவைகளை எதிர் கொள்ள வில்லை. ஆனால் அவர்கள் இலங்கை அரசுக்குச் சமத்துவமாகப புதிய அரச கட்டமைப்புக்களை விருத்தி செய்துள்ளனர். அவர்கள் தங்களுக்கென ஒரு நிலபபரப்பு, பாதுகாப்பு, பொருண்மியம், சட்டம், உள்ளூர் நிர்வாகம், வங்கி போன்றவைகளை அமைப்பதில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்திலேயே புதிய அரசு பதவிக்கு வநதது. அது யதார்த்த நிலையை உணர்ந்துள்ளது. அது மேலும் தோல்விகளைத் தடுக்கும் வழிகளைத் தேடுகின்றது. தமிழீழம் ஒரு தனி நாடாக வராது தடுக்கும் வகையில் அது தமிழர்களின் தாய்நாடாகிய கிழக்கில் கைப்பற்றப்பட்ட சில பகுதிகளை வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தை மூலம் சிக்கலுக்குத் தீர்வுகாண முன்வந்துள்ளது.

ஆகவே தனது படைநோக்கிலிருந்து பின்வாங்குவதைவிட அரசாங்கத்துக்கு வேறு வழி ஒன்றுமில்லை. எப்படியாயினும் புதிய அரசானது படைவழிவகைகளினாலும், போரினாலும் ஒரு தீர்வைக் காணலாம் என்னும் ஒரு சிறிய நம்பிக்கையை மனதில் ஒருபக்கத்தில் வைத்துக்கொண்டு யுத்தநிறுத்தம் ஒன்றைச் செய்யாமல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்தவிரும்புகின்றது.

அண்மையில் பெரிய கடற்படைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. இந்த நம்பிக்கையை ஓரளவு சிதறடித்துவிட்டது என நாம் கருதலாம். தமிழர்களைப் படை வலிமை மூலம் கட்டுப்படுத்தலாம் என்ற நம்பிக்கை இல்லாது போனால் மட்டுமே இந்தச் சிக்கலை சமாதானமாகத் தீர்க்கலாம்.

தமிழர்களின் விடயத்தில் இந்தியாவின் போக்கைப்பற்றிச் சிறிது விமாசித்த பின்னர் அத்தலையங்கம் ''புதிய அரசானது சிக்கலை நியாயமாகவும், கௌரவமாகவும் தீர்த்து வைக்குமா என்பது நிச்சயமற்றதாயுள்ளது'' என முடித்துள்ளது.

தங்கள் படை வலுவில் மேலாதிக்கம் செலுத்துவதன் மூலமே புதிய அரசாங்கத்தைத் தமிழர்களுடன் ஒரு உண்மையான சமாதானத்திட்டத்தைக் கட்டியெழுப்பச் செய்யக் கட்டாயப்படுத்தலாம் என்னும் ஊகத்துடனேயே மக்கள் முன்னணியின் சமாதான நோக்கத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் அணுகு

கின்றனர் என்பதை எம்மால் கண்டு கொள்ள முடிகின்றது. இது அவர்கள் இந்த ஆண்டுக்கும் அடுத்த ஆண்டுக்கும் திட்டமிட்டு வைத்துள்ள எந்தப் படை நடவடிக்கையையும் தொடர்ந்து மேற்கொள்வர் என்பதைக் காட்டுகின்றது. அந்தத் திட்டத்தில் வடக்கிலுள்ள படைத்தளங்களுக்கான கடல்வழிவிநியோகஞ் செய்யும் முக்கிய பாதைகளைத் துண்டிப்பது என்பது முதன்மையான விடயமாகும்.

நவம்பர் மாதம் 27ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் நினைவு கூரவுள்ள மாவீரர் தினத்தின் போதோ அல்லது அதற்குப் பின்னர் ஒரு கிழமைக்குள்ளோ நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் படை யோசனை எப்படி இருக்கும் என்பதை உறுதிப் படுத்துவோம். அரசானது அந்தச் சிக்கலைக் கவனமாக ஆராயாதுவிடின் விடுதலைப் புலிகளின் மனப்பான்மை அதைப் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளிவிடும். அந்தத் தர்மசங்கடமான நிலைமை இதுவாகும். யுத்த நிறுத்தம் இல்லை என்ற காரணத்தினால் விடுதலைப் புலிகள் சில பாரிய தாக்குதல்களை நடத்துவார்களானால் அரசாங்கமும் மீண்டும் போரை நடத்தத்தொடங்கிவிடும். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் திரு. பிரேமதாசா இரண்டாவது ஈழப்போரில் ஈடுபட்டு வடக்கில் நடைபெற்ற போரினால் துன்பங்களை ஏற்படுத்தி சிறுபான்மையினரின் வாக்குகளை இழந்தது போன்ற தர்மசங்கடமான நிலைமையே இது. அதனது தலைமைப் பீடத்திற்கும் உண்டாகும்.

சிக்கலைத் தீர்ப்பதற்கான ஏற்றுக்கொள்ளக் கூடிய கடைசித் தீர்வுடன் வருவதாக அவரது அரசாங்கத்தின் மூலம் வெளிப்படையாக முயற்சிகளை மேற்கொண்டு தட்டிக் கழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டதனால் பிரேமதாசா அவர்களைப் பொறுத்தவரை இது மேலும் எரிச்சலையூட்டுவதாயிருந்தது.

சமாதான நடைமுறைகளை அனுசரித்துச் செல்வதற்குச் சந்திரிக்கா உறுதி கொண்டுள்ள போதிலும் இரண்டு விடயங்கள் அவரைப் போர்ப் பொறியில் தவிர்க்க முடியாது மாட்டிவிடும் அவை நிச்சயமாக விடுதலைப் புலிகளுக்கு படை ரீதியிலும், அரசியல் ரீதியிலும் பொருத்தமானவையாகும்.

முதலாவதாக வடக்கில் தனது கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளில் சனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அனுமதிக்க விடுதலைப் புலிகள் மறுப்பது வெளிப்படையாகவே மக்கள் முன்னணிக்கு அந்தப் பகுதிகளில் இருக்கும் தமிழ் மக்களின் ஆதரவை இந்த சனாதிபதி தேர்தலின் போது பெறு

PUBLIC LIBRARY
JAFFNA.

வதற்கு அது இப்போது படைகளினால் மீட்கப்பட்ட பகுதிகளில் இருந்து செய்யப்பட்டு வரும் விடுதலைப் புலிகள் அல்லாத குழுவினரின் ஒத்திசைவையே நாடவேண்டியிருப்பதை உணர்த்தியுள்ளது. மற்றும் இப்போது மக்கள் முன்னணிக்கு ஆதரவாகவுள்ள 03 இலட்சத்திற்கும் கூடுதலாகவுள்ள தமிழர்களது வாக்குகளைப் பெறுவதற்கு ஏற்ற துணைசாதனமாகவுள்ள தமிழ்க் கட்சிகளின் நல்லெண்ணத்தை விட்டு அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நட்புறவுகொள்ள முடியாது.

இரண்டாவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாத தமிழ்க் குழுக்களும், தமிழ்க்கட்சிகளும் திருத்தங்கள் செய்யப்பட்ட அதிகாரங்கள் கூடுதலாக வழங்கப்படும் பதின்மூன்றாவது திருத்தத்திற்கு இணங்குவதாகவும் அது ஒரு திறமையான அதிகாரப் பரவலாக்கல் கொண்ட அமைப்பை உருவாக்கும் நோக்கில் மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்தக்கூடியதான அடிப்படையில் நேர்மையாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும் எனவும் ஏற்கனவே மக்கள் முன்னணிக்குத் தெரிவித்துள்ளன. இந்தச் சூழ்நிலையைப் பார்க்கையில் இது அரசாங்கத்திற்கும் நன்றாகப் பொருத்தமாக உள்ளது. ஆனால் பதின்மூன்றாவது திருத்தமோ அல்லது அதைப் போன்ற ஒன்றோ தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வெறுப்பையூட்டுவதாக உள்ளது.

இங்கு விரித்துக் கூறப்பட்ட இரு விடயங்களும் மேலும் ஒரு முறை விடுதலைப் புலிகளை அரசாங்கத்தின் செயற்றிட்டங்களில் படைச் சிக்கலுக்கு்க மாறச் செய்யும். படை ரீதியில் மட்டும் தங்களைக் கையாண்டால் அவர்கள் திறமையாகச் செயல்ப்படுவர் என்பதை விடுதலைப் புலிகள் காட்டியுள்ளனர்.

வடக்கு கிழக்கிலுள்ள நிச்சய மற்ற நிலப்பரப்பிலுள்ள இடறு குழிகளை எப்படிக் கெட்டித்தனமாக அவர் தவிர்த்துக் கொள்வார் என்பதிலேயே சந்திரிக்காவின் எதிர்காலம் தங்கியுள்ளது.

---

## சாவுக்கு டிமிக்கி

மூன்று முறை பெரிய கப்பல் விபத்திலிருந்து தப்பிய ஒருவரின் கதை இது. பிரான்சைச் சேர்ந்த காஸிமெர் பாலிமஸ் என்ற மனிதர் 'ஜீனி காதரைன்' 'டிராம்ப்ஸ் ஃபிரட்ஜ்' 'ஆல ஒடியன்' ஆகிய கப்பல்களில் பயணம் செய்தார். இந்த மூன்று கப்பல்களும் விபத்துக்குள்ளாகி முற்றிலுமாக நீரில் அமிழ்ந்து போய் விட்டன. இவர் மட்டும் எந்தவித பாதிப்பும் இன்றி நீந்தியே கரையை அடைந்து உயிர் பிழைத்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# றெயின் போ படை நடவடிக்கையின் மறுபக்கம்

— இக்பால் அத்தாஸ்
(சண்டே லீடர் 09.10.1994)

*ஆறு கிழமைகளுக்கு மேலாகத் தங்களைத் தயார் செய்து கொண்டிருந்ததன்பின் ஆனையிறவுக்குத் தெற்கேயுள்ள முன்னணிப் பாதுகாப்பு எல்லைகளிலிருந்து சுமார் 10000 படையினர் ஒக்டோபர் 1ஆம் நாள் காலை வேளையில் விலகிச் சென்றனர்.*

இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படவிருந்த இந்தப் பாரிய தாக்குதல் நடவடிக்கைக்கு ''ஒப்பரேசன் றெயின்போ'' (Operation Rain-bow) எனப் பெயரிடப்பட்டிருந்தது. ஆனையிறவிலிருந்து தெற்கை நோக்கி 8 மைல் சென்று கிளிநொச்சியைக் கைபற்றுவதே இந்தப் படை நடவடிக்கையின் குறிக்கோளாகும். இந்தத் தாக்குதல் நடவடிக்கை வெற்றிகரமாக நடைபெற்றிருந்தால் கிளிநொச்சிக்கு இருமருங்கிலுள்ள 16 கிலோ மீற்றர் நிலப்பரப்பைக் கைப்பற்ற படையினர் திட்டமிட்டிருந்தனர்.

### படுதோல்வி யாழ்தேவி நடவடிக்கை

படுதோல்வி கண்ட யாழ்தேவி படை நடவடிக்கை இடம்பெற்ற 1 ஆம் ஆண்டுக்குப்பின் நடாத்தப்படவிருந்த இந்தத் தாக்குதல் நடவடிக்கை, மக்கள் முன்னணி தேர்தலில் வெற்றி பெற்று அரசை அமைக்கவிருந்த சில நாட்களுக்கு முன் கைவிடப்பட்டது. மக்கள் முன்னணி அரசு அமைதியைக்காண விரும்புகின்றது. ஆகவே அமைதியை எட்டுவதற்கு பேச்சுவார்த்தையில் ஈடுபட குழு ஒன்று யாழ்ப்பாணம்

செல்ல ஆயத்தமாக இருந்த வேளையில் பாரிய தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டால் அது பேச்சுவார்த்தையைப் பாதிக்கும் என அரசு கருதியிருந்தது.

இலங்கை இராணுவத்தின் இரண்டாம் படைப்பிரிவின் தளபதியான மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செலவிரத்ன அவர்களின் தலைமையில் நடாத்தப்படவிருந்த இந்தத் தாக்குதல் நடவடிக்கையை படை மூத்த மேலாளர்கள் பலர் இணைந்து தயார்படுத்தியிருந்தனர். சென்ற மாதத்திலேயே இவர் இந்தப் பகுதியில் அமர்த்தப்பட்டிருந்தார் தாக்குதல் நடாத்தப்படவிருந்த ஒரு கிழமைக்கு முன்பே தாக்குதலுக்கான உத்தரவு அரசிடமிருந்து கிடைக்குமெனப் படையினர் எதிர்பார்த்திருந்தனர். மாரிகாலம் ஆரப்பமாவதற்கு முன் இந்தப் பணியை நிறைவேற்ற அவர்கள் ஆவலாகவிருந்தனர்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையைக் கைவிடுமாறு அரசிடமிருந்து உத்தரவு கிடைத்ததும் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகளிலுள்ள படைத்தளங்களிலிருந்து பெறப்பட்ட தரைப் படையினரையும், பீரங்கிப் படைப் பிரிவினரையும் ஆனையிறவு மற்றும் வெற்றிலைக்கேணி ஆகிய படைத்தளங்களிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது.

றெயின்போ தாக்குதல் நடவடிக்கையை நிறுத்துமாறு அரசு பணித்திருந்தபோதிலும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போரை நிறுத்துமாறு அது பணிக்கவில்லை. அத்துடன் போர் நிறுத்தத்தையும் அது கொண்டு வரவில்லை. தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தடை ஏதும் இல்லை எனக் கட்டளையிடும் தளபதிகளுக்கும், அதிரடிப் படைக்குப் பொறுப்பாகவுள்ள தளபதிகளுக்கும், உயர் மட்ட மேலாளர்களுக்கும் அரசு அறிவுறுத்தியுள்ளது.

## அரசின் குழு

இருப்பினும், நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைக்குப் பங்கம் விளையாதவாறு அவர்கள் பார்த்துக் கொள்ளுகின்றார்கள். பிரதமரின் செயலாளர் திரு. பாலபெத்தபெண்டி, சுற்றுலாத் துறை தகவல் மற்றும் வான் போக்குவரத்துத்துறை அமைச்சின் செயலாளர் திரு லயனல் பெர்னாண்டோ இலங்கை வங்கியின் தலைவர் திரு. ராமன் ஆசீர்வாதம், அமைதிக்காகக் குரல் எழுப்பிவரும் திரு. நவின் குணரத்ன ஆகியோரைக் கொண்ட அரச குழு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் பிரதித் தலைவரான கரிகாலன் அவர்களின் தலைமையிலான குழுவை அடுத்த வாரம் சந்திக்கவிருக்கின்றது. யாழ்குடாவிலுள்ள நாளேடுகள் இந்தப்பேச்சு

வார்த்தையைப் பற்றி நல்ல அபிப்பிராயத்தை உருவாக்கி வருகின்றன. பிரதமர் சந்திரிக்காவின் தலைமைத்துவத்திற்குப் புகழாரம் சூட்டும் இவ் நாளேடுகள், விடுதலைப் புலிகளின் கோரிக்கையான யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றன. ஆனால் அரசு இந்த விடயத்தில் மிகவும் கவனமாகவிருக்கின்றது. பிரபாகரன் அவர்களுக்கும், பிரதமர் சந்திரிக்கா அவர்களுக்குமிடையே நேரடியான பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன்னோடியான வழிவகைகளை ஆராய்ந்து கண்டதன்பின் யுத்தநிறுத்தம் பிரகடனப்படுத்துவது தொடர்பாக ஆராயப்படும் என அரச வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. இது அநேகமாக சனாதிபதி தேர்தலுக்குப் பின்பே நடைபெறும்.

தங்கள் கோரிக்கையான யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்த அரசுக்கு விடுதலைப் புலிகள் நெருக்குதல் கொடுத்து வருவதைப் பாதுகாப்பு வட்டாரங்கள் உணர்கின்றன. யாழ்குடாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளிலுள்ள நாளேடுகள் மூலம் மாத்திரமின்றி பல தாக்குதல் நடவடிக்கை மூலமும் இந்த நெருக்குதல் கொடுக்கப்படுகின்றது.

## தாக்குதல்கள்

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் அவர்கள் சென்றவாரம் ஊடுருவியுள்ளதாக அறியமுடிகின்றது. பாதுகாப்புப்படையினருக்குத் தகவல் கொடுத்தவர்களையும், வன்னியில் வாழும் மக்களுக்காக வவுனியாவிலிருந்து தமிழில் ஒலிபரப்பாகும் சேவையின் ஒலிபரப்பாளரையும் விடுதலைப் புலிகள் கொன்றதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதியிலிருந்து அவர்களின் கட்டிப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குப் பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம் பெயர்ந்ததைக் காணும் பொழுது இந்தத் தாக்குதல்கள் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. இந்தச் சேவையில் ஒலிபரப்பப்படும் விடயங்கள் அனைத்தும் பொய்யானவை என யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் வானொலி நிலையமான ''புலிகளின் குரல்'' கூறி வந்துள்ளது.

பெரும் எண்ணிக்கையான விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்துள்ளும் ஊடுருவிச் செல்வதாக அறியமுடிகின்றது. யுத்த நிறுத்தத்தை அரசு கொண்டுவர நிர்ப்பந்திப்பதற்காக திடீர்த் தாக்குதல்களை விடுதலைப்புலிகள் மேற்கொள்ளக்கூடும் எனப் புலனாய்வுத்துறையினர் பாதுகாப்பு மேலாளர்களை எச்சரித்துள்ளனர். வவு

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
PUBLIC LIBRARY

வான நிலையிலிருந்து பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதாகக் காட்டிக் கொள்வதற்கே இப்படியான தாக்குதல்களை விடுதலைப்புலிகள் மேற்கொள்ள விருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

## பொருண்மிய மேம்பாடு

விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களிலிருந்து தொகுக்கப்பட்ட அவர்களுடைய பொருண்மிய மேம்பாட்டுக்கான திட்டம் பற்றிய அறிக்கையை புலனாய்வுத் துறையினர் பாதுகாப்பு மேலாளர்களுக்குச் சென்ற வாரம் அனுப்பியிருந்தனர். விவசாயம், நீர்ப்பாசனம், கைத்தொழில் ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டத்தை இது கொண்டிருந்தது.

பேச்சுவார்த்தை மூலம் அமைதியைக் காண வேண்டும் என விடுதலைப் புலிகள் முன்வைத்த யோசனையிலுள்ள நேர்மையைச் சிலர் கேள்வி கேட்பதற்கு இது இடமளித்துள்ளது. யாழ் குடாவின் உள்ளகக் கட்டமைப்பை, அதாவது பெருந் தெருக்கள், போக்குவரத்துச் சேவை, மின்சாரம் போன்றவற்றை அரச செலவில்புதிப்பிப்பதற்கான கால அவகாசம் தேவை என்பதால் இந்த யோசனையை விடுதலைப்புலிகள் முன்வைத்தார்களா? என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

ஆட்களைச் சேர்ப்பதில் விடுதலைப்புலிகள் தீவிரமாகச் செயற்படுவதாகவும், கரந்தடிப் போருக்கான பயிற்சியை அவர்கள் தொடர்ந்தும் வழங்கி வருவதாகவும் வெளிவந்த செய்திகள் இந்தச் சந்தேகத்தை மேலும் அதிகரிக்கின்றன. தொழில் சார்ந்த பல துறைகளில் பொதுமக்களுக்குப் பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகள் நன்மையைத் தரும் என மக்கள் முன்னணி அரசின் மேலாளர் ஒருவர் கூறியுள்ளார். "விடயங்கள் அப்படியிருக்கும் இப்படியிருக்கும் என அனுமானித்துக் கொண்டு அமைதியை எட்டும் வாய்ப்பை நாம் இழந்து விடக்கூடாது. திறந்த மனத்துடன் செயற்படும் நாம் அதைக் கருத்தில் கொண்டே எல்லா விடயங்களையும் அணுகுவோம்" என அவர் கூறியுள்ளார்.

யாழ்குடாவில் விதிக்கப்பட்ட சில பொருட்களுக்கான தடை நீக்கப்பட்ட பின் அங்கு பொருட்கள் விரைவாகச் சென்றடைகின்றன. ஒவ்வொரு வாரமும் 7000பைகள் கொண்ட சீமெந்து தாண்டிக்குளம் சோதனைச் சாவடி ஊடாக அனுப்பப்படுகின்றது. மற்றைய பொருட்களுடன் கையில் தூக்கிச் செல்லக்கூடிய ஜெனரேற்றர்களும், பற்றறிகளும் எடுத்துச் செல்லப்படுகின்றது.

[stamp]

பேச்சுவார்த்தையை நடாத்துவதற்காக கொழும்பிலிருந்து வருகைதரும் குழு பற்றிய நல்லெண்ணத்தைத் தொலைத்தொடர்பு சாதனம் மூலம் கட்டி எழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப்புலிகள், அந்தக்குழுவுடன் பேச்சுவார்த்தையைநடாத்துவதுடன், வேறு பல பணிகளிலும் ஈடுபடத்தக்க வகையில் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

**மக்கள் மகிழ்வு**

போர் நடவடிக்கை எதுவும் இடம்பெறாத பகுதிபோல் காட்சியளிப்பதும், துப்பாக்கிகளை ஏந்தியவர்கள் நடமாடிக்திரியாததுமான பகுதிகளுக்கு இக்குழுவினரை விடுதலைப்புலிகள் அழைத்துச் செல்லவிருப்பதாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்த ஒருவர் கூறியுள்ளார். விடுதலைப்புலிகளால் நியமிக்கப்பட்ட காவல் துறையினரைக் கொண்டுள்ள இந்தப்பகுதிகளில் இயல்புநிலை நிலவுவதாகவும், இங்குள்ள மக்கள் மகிழ்வுடன் வாழ்வதாகவும் கூறப்படுகின்றது.

பணயக் கைதிகளாக விடுதலைப்புலிகள் வசமுள்ள படையினரையும், காவல்துறையினரையும், விடுதலைப்புலிகளால் மன்னார்க்குடாவில் மூழ்கடிக்கப்பட்ட சாகரவர்த்தனா (கடல் அரசன்) என்ற கப்பலின் தலைவரையும் இவர்கள் சந்திக்கவுள்ளதாகவும் அறிய முடிகின்றது. இந்தக் கப்பலின் தளபதியான அஜித் போயாகொட அவர்களைக் கைது செய்தவுடன் மடுவிலுள்ள கடற் புலிகளின் தளத்திற்குக் கொண்டு சென்ற விடுதலைப்புலிகள் அதன்பின் அவரைப் படகு மூலம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு சென்றிருந்தனர்.

போயாகொட அவர்களும், அவருடன் கூடவே கைது செய்யப்பட்ட மற்றவர்களும் அன்புடனும், பண்புடனும் நடாத்தப்படுவதாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் மூலம் பாதுகாப்பு மேலாளர்கள் சென்ற வாரம் அறியக் கூடியதாகவிருந்தது.

# பெண்ணின் உலக சாதனை

சைக்கிள் பந்தயப் போட்டிகளில் எட்டு முறை உலகச் சம்பியன் பட்டத்தை வென்ற ஒரே பெண் பிரான்ஸைச் சேர்ந்த ஜென்னிலாங்கோ என்ற வீராங்கனையாவார். இவர் 1987ம் ஆண்டு உள்ளரங்கு 10கி.மீ. போட்டி தூரத்தை 12நிமிடம் 54.56 வினாடிகளில் கடந்து உலகச் சாதனை புரிந்தார் இந்தச் சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை.

# விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

பேராசிரியர் வி. கே. சமரநாயக்கா
(ஐலண்ட் 07.07.94)

*தற்போது பல்வேறு அரசியல் கட்சிகள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களை தயாரிப்பதனால், விஞ்ஞானிகளும் மற்றும் தொழில் சார்ந்த குழுக்களும் இவர்களுடன் சேர்ந்து தங்கள் பகுதி நன்மைகளைக் கருத்தில் கொண்டு இந்தக் கொள்கை அறிக்கைகளில் தங்களுடைய பகுதிகளையும் இணைத்துக் கொள்ள தொடங்கியிருக்கிறார்கள்.*

கடந்த காலங்களில் விஞ்ஞானிகள் தங்களது தேவைகளையும், முதன்மைகளையும் கொள்கை அடிப்படையில் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியவில்லை. அவர்களுக்கு அப்படிச் செய்வதற்கு வருகின்ற பொதுத்தேர்தல் ஒரு புதுச் சந்தர்ப்பம் என்று நம்பப்படுகிறது.

இக் கட்டுரையில் மூத்த விஞ்ஞானப் பேராசிரியரான வி. கே. சமரநாயக்கா என்பவர் 1990 ஆம் ஆண்டுக்குரிய விஞ்ஞானமும் தொழில்நுட்ப முதன்மை பற்றியும் சுருக்கமாக விமர்சிக்கின்றார். பேராசிரியர் சமரநாயக்கா இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் தலைவராகவும், கொழும்பு பல்கலைக்கழக கணனி தொழில் நுட்ப நிறுவனத்தில் இயக்குனராகவும் இருக்கிறார். இக்கட்டுரை இவ்வருட முற்பகுதியில் கண்டியில் நடைபெற்ற 8வது வருடாந்த விஞ்ஞான மகா நாட்டில் பேராசிரியர் சமரநாயக்கா ஆற்றியமுக்கிய உரையின்சாராம்சமாகும். 1994ஆம் ஆண்டு சித்

KOHA JPL

திரை மாத 'பிரக்கா' என்ற சஞ்சிகையில் இருந்து இக்கட்டுரை பெறப்பட்டது.

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், திறமையும் பொறுப்பும் என்னும் பொருள் பற்றி இந்திய விஞ்ஞானக் காங்கிரசின் வருடாந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக அண்மையில் இந்தியாவிற்குச் சென்றேன். எங்களுக்கும் இவ்விடயம் பொருத்தமான தாகும். திறமையும்பொறுப்பும் தான் நாங்கள் எந்த நாளும் எதிர்நோக்கும் சிக்கலாகும். இந்தியப் பிரதமர் முன்னிலையில் இந்திய விஞ்ஞானக் காங்கிரஸ் தலைவர் பேராசிரியர் சிறிவர்தனாவின்பேச்சைக்கேட்டபொழுது அவர் கூறியது எங்கள் நாட்டு நிலைக்கும் ஏற்றதாக உள்ளதை உணர்ந்தேன். அவர் எழுப்பிய சில விடயங்களினூடாக எங்கள் நாட்டுத் தேவைகளையும் இனம் காண முடியும்.

எந்த ஒரு மனிதனும் ஆராய வேண்டிய ஒரு விடயம் இருக்குமானால் அது மனிதவளம் என்பது தான் எனக்கு முக்கியமாகத் தெரிகிறது. 1940 ஆம் ஆண்டு முதல் 1950 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் எங்களிடம் திறமையான கல்வி முறை இருந்தது. பெரும் பணவசதி இல்லாதவர்களுக்கும், உயர் வகுப்பு அல்லாதவர்களுக்கும் கல்விக்கான சந்தர்ப்பம் கிடைத்தது. தொடர்ச்சியாக இலவசக்கல்வி சுயமொழியிலும் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் இன்று விஞ்ஞானக்கல்வி நாங்கள் விரும்பியது போல் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். எங்களுடைய கல்விமுறை பள்ளிக்கூட மட்டத்தில் மட்டுமல்லாமல் உயர்கல்வி மட்டத்திலும் சிக்கல்கள் உண்டு. எனவே எங்கள் நாட்டில் விஞ்ஞானக் கல்வியை எப்படிச் சீரமைக்கலாம் என்று பார்க்க வேண்டியுள்ளது.

இந்தியாவைத் திரும்பிப் பார்க்கும்பொழுதுவிஞ்ஞானத்தை முன்னேற்ற வேண்டும் என்ற பண்டிட் ஜவகர்லால் நேருவின் நோக்கம் அவருடைய சீவிய காலத்தில் அவர்களுடைய ஆலோசகர்களால்கூட கடைப்பிடிக்க முடியவில்லை. மேற்கத்தைய மாதிரியைப் பின்பற்றி பலஆய்வு நிலையங்களை நிறுவ இந்தியா தீர்மானித்தது. இவை இந்தியப் பல்கலைக் கழகங்களுடன் நெருக்கமான தொடர்புள்ளவைகளாக இருக்கவேண்டும் என நேரு விரும்பினார். கெட்டகாலமாக அவரது எண்ணம் பலனளிக்கவில்லை. பல்கலைக்கழகங்களும், விஞ்ஞான நிறுவனங்களும், விஞ்ஞானகூடங்களும் ஒன்றிச்சென்று நெருக்கமான தொடர்புடனும் ஒத்துழைப்புடனும் இருக்கவேண்டும் என்ற அவரது மற்ற எண்ணமும் பலனளிக்கவில்லை. ஆய்வாளர்கள் ஆய்வுகளை நடாத்துவதும் பல்கலைக்கழகத்தில் உள்ளவர்கள் கற்பிப்பதும் வேறு வேறாக இருந்ததே தவிர இரண்டும் ஒன்றுடன்ஒன்று செயல்பட

இல்லை. இந்தநிலையில்தான் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானத் தேவைகளை பூர்த்தி செய்யாத விதத்தில் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைப்போல் கலாநிதிகள் உட்பட பட்டதாரிகளை உருவாக்கியமையால் இப்படிப்பட்ட விஞ்ஞான நிறுவனங்களை நடத்துவதற்கு தகுந்த மனிதவளம் இல்லாத நெருக்கடியை எதிர்நோக்குகின்றது. இதனால் விஞ்ஞான நிறுவனங்களை ஏற்று நடத்துவதற்கு தகுந்த மனித வளம் இல்லாமல் போகின்றது. காரணம் இவ்விதமான பல்கலைக்கழக உற்பத்திக் கலாநிதிகள் விஞ்ஞானக்கூடங்களுக்குத் தகுதியானவர்களாக இல்லை. இதிலிருந்து நாங்கள் நல்லபாடம் படிக்க வேண்டும். எனது கருத்துப்படி மனித வள மேம்பாட்டை விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் எய்துவதற்கு சரியான வழிமுறைகள்மூலம், சரியான உள்ளகக் கட்டமைப்புகள், சரியான நிறுவனங்கள் மூலம் விஞ்ஞானிகளை உருவாக்குவதற்கு முன்னுரிமை கொடுப்பது தான் தகுந்த நடவடிக்கையாகும்.

எனது அபிப்பிராயப்படி பல்கலைக்கழகமும் ஆய்வு நிறுவனங்களும் நெருக்கமாக செயல்பட வேண்டும். பல்கலைக்கழகம் நாட்டிற்குத்தேவையான செயல்முறை ஆய்வுகளை நடத்த ஆய்வுநிறுவனம் நாட்டிற்குத் தேவையானது பற்றி கூடிய கவனம் செலுத்த வேண்டும். அப்போது தான் இரு பகுதியினரும் நாட்டின்முன்னேற்றத்தில் சேர்ந்து செயல்ப்பட முடியும். வெளியிடங்களில் நடத்தப்படும் ஆய்வுகளில் தொடர்புகள் வைத்திருக்காமல் எங்கள் சொந்தப் பிராந்திய விடயங்களை கவனித்துக் கொள்ளலாம். தற்போதைய நாட்டின் போக்கு என்னவென்றால் வெளி நாடுகளில்இருக்கும் விடயங்களை அதிக அளவில் ஆய்வு செய்வது அல்லது 2 ஆம் தரமாக செய்வதற்கு தகுதியைக் கொடுக்கக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதாகும். அத்துடன் உத்தியோக உயர்ச்சிக்கும் இவை தேவைப்படுகின்றன. நீண்டநோக்கு இல்லாமலே கலாநிதிப்பட்டங்களை வழங்கியமை இந்தியாவில் காணக்கூடியதாக இருக்கின்றது. தேசியதேவைகளுடன் தொடர்புடைய விடயங்களையே நாங்கள் ஆராய வேண்டும். இதற்கானநிதியை எப்படிப் பெறுவதென்ற கேள்வி எழும்.

எனவே நிதித்தேவைகள் எழுகின்றன. விசேடமாக வெளிநாட்டு நிதிஉதவி சில குறிப்பிட்ட விடயங்களுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் நாங்கள் விரும்பியபடி ஆய்வில் ஈடுபட அனுமதிக்கப்படுவதில்லை. ஆய்வு நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் இணைந்து மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்குதவன் மூலம் தங்களுடைய நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஐக்கிய அமெரிக்கா போன்ற தர்ம நிதியங்கள் நிதியுதவி செய்யமுடியும். ஆனால்

அவர்கள் நிதியுதவி செய்யும் பொழுது தங்களுடைய திட்டங்களுக்கு எங்களை ஆலோசகர்களாகப் பாவிப்பார்கள். பிறநாட்டிலிருந்து வரும் ஆலோசகர்கள் மூலம் எங்களுக்கு பிறநாட்டு உதவிகள் நிறையக் கிடைக்கின்றன. எல்லா ஆலோசனை வேலைகளும் இந்த நாட்டிலுள்ள விஞ்ஞானிகளிடம் கையளிக்கப்படுமானால் அரசாங்கத்தின் நன்கொடைகளையோ தர்ம நிதியங்களையோ எதிர்பார்க்காமல் எங்களுடைய ஆய்வுகளை மேற்கொள்வதற்கு தாராளமான நிதியுதவி கிடைக்கும்.

இந்த ஆய்வு நிறுவனங்கள் கட்டாயமாக மற்றைய நிறுவனங்களுடன் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாக இருத்தல் வேண்டும். ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாத விதத்தில் நாங்கள் ஆய்வு நிறுவனங்களை வைத்திருக்கமுடியாது. தற்பொழுதுள்ளவர்கள் மிகவும் திறமையுள்ள ஆய்வாளர்கள். ஆனால் அவர்கள் பரந்துபட்டு இருக்கிறார்கள். அவர்களை சென்றடைய முடியாது. அவர்களை உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளவைத்து அவர்களுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இத்தப் பரந்த சமுதாயத்தில் எங்களுடைய திறமையைக் காட்டிய விதத்தில் பாவிக்கமுடியும். விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் வேண்டும். புதுக்கண்டுபிடிப்புக்கள் செய்யப்படும் பொழுது தவிர்ந்த ஏனைய விடயங்களில் இது ஒரு குறிப்பிடப்பட்ட கூட்டத்தினருக்கு பயன்படக்கூடிய விடயமாக இருக்கக் கூடாது.

இந்தியா கலாநிதிப்பட்டம் பெற்றவர்கள் தொகைபற்றி கவலைப்படுவதுபோல் கவலைப் படக்கூடாது. நாங்கள் தரத்தைப் பற்றியே அதிகம் கவலைப் படவேண்டியுள்ளது. எங்களுடைய நிறுவனத்தில் இருந்து வெளியேறும் பட்டதாரிகள் நல்ல தரத்தில் இருக்கிறார்களா என நாங்கள் கவனித்துக் கொள்ளவேண்டும். உயர்தரம் என்பது மேலை நாடுகள் செய்வது போல் ஒரே ஆய்வு செய்வது என்று அர்த்தம் இல்லை. ஆய்வு விடயம் எங்கள் நாட்டிற்கு ஏற்றதாக இருக்கவேண்டும். அத்துடன் ஆய்வு முறைக்கு தக்கபதிலளிக்கும் விதத்தில் தரமானதாக இருக்கவேண்டும்.

செலவுமிக்க ஆய்வுகள் நடத்தும்பொழுது நாங்கள் எங்களுடைய வருமானத்திலும் பங்களிப்பு செய்ய வேண்டும். மேற்கிலும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. உதாரணமாக சக்திமிக்க பௌதிகத்திற்கு செலவு கூடுதலாக உள்ளது. எல்லா ஐரோப்பிய சமுதாய நாடுகளும் ஐக்கிய நாடுகள் நிறுவனமும் சேர்ந்து பகிர்ந்து பிரமாண்டமான ஆய்வு

கூடத்தை நிறுவியதற்கு சேன் (SHANE) ஒரு உதாரணமாக அமைகின்றது. நாங்களும் கூட மற்றவர்களுடன் சேர்ந்து எங்களுடைய வருமானத்தை சில குறிப்பிட்ட ஆய்வு நிறுவனங்களில், சேகரிக்க வேண்டும். எல்லா நிறுவனங்களிலும் எல்லாக் கலைகளையும் போதிப்பது உகந்தது அல்ல. எந்தெந்தத்துறை, எந்தெந்த ஆய்வு நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தெரிந்து கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும்.

ஆயுள்வேத வைத்திய முறையில் ஈடுபாடு கொண்டமையால் மேற்கத்தைய வைத்தியமுறையைக் குறைக்கக்கூடியதாக இருந்தது. தொகையான மருந்து வகைகள் மறைந்துவிட்டன. ஏனெனில் ஆயுள்வேத வைத்தியர்கள் பலர் தங்களுடைய வைத்திய அறிவில் ஒரு துளிதானும் வருங்காலச் சந்ததிக்கு விட்டுச் செல்லவில்லை. அதிகமாக அவர்களது பிள்ளைகளே பரம்பரை வைத்தியத்தை கைவிட்டுவிட்டார்கள். நாங்கள் நாட்டு வைத்தியம் பற்றிய உண்மையான தகவல்களை இழந்துவிட்டோம். உண்மையில் தற்போது உள்ள இளம் ஆயுள்வேத வைத்தியர்கள் ஆயுள்வேத மருந்துக்கள் கொடுப்பதை விட்டு பெரும்பாலும் மேற்கத்தைய மருந்துகளைத்தான் கொடுக்கிறார்கள். மறுபுறத்தில் சில மேலைநாட்டு மருத்துவர்கள் ஆயுள்வேத வைத்தியத்தைப் பரிகாசம் செய்பவும் கூடும் இரு வைத்திய முறைகளுக்கும் ஒரு தொடர்பும் இருக்கவில்லை சில சந்தர்ப்பங்களில் சில இரசாயனவியலாளர் உள்ளூர் மூலிகைகளை பரிசோதித்து மேலைநாட்டவர்களுக்கு தகவல் கொடுக்கிறார்கள். அவர்கள் மருந்து வகைகளை உற்பத்தி செய்து திரும்பவும் எங்களுக்கே விற்கிறார்கள். அந்த மருந்து வகைகளை பதனிடுவதும் தயாரிப்பதும் முக்கியமானதல்ல அதை எமது ஆயுள்வேத முறைக்கு ஏற்றவாறு மேற்கத்தைய மருந்துவகைகளுக்கு பதிலாக பாவிப்பதுதான் முக்கியமானதாகும். ஆனால் நாங்கள் என்ன செய்கின்றோம் என்றால் இரண்டையும் வேறுவேறாகப் பாவிக்கின்றோம். ஒன்றுடன் ஒன்று கலந்து பாவிக்க எத்தனிக்கின்றோமா இல்லை.

ஆரம்பத்தில் இருந்த விவசாய முறையைப் பார்த்து பரம்பரையாக என்னென்னத்தைக் கற்றுக் கொள்ளலாம் எனத் தெரிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானத்தை ஏற்றுக் கொண்டதாக கூற முடியாததொன்று இருக்குமானால் அது பௌத்த சித்தாந்தமே. கணனி விஞ்ஞானத்தில் நாங்கள் செயற்கை புத்திசாலித்தனத்தை பாவிக்க முற்படும் பொழுது நாங்கள் பௌத்த வாழ்க்கை முறையையும், பௌத்த சித்தாந்தத்தையும் கற்க முயலலாம்.

பிறநாடுகளில் நாங்கள் பட்டப்படிப்பிற்காக மேற்கொண்ட ஆய்வுகளைக் கைவிட்டு முக்கியமாக நம்நாட்டின் குறுகிய வழிவகைகளை ஆராய்ந்து நம் நாட்டு மக்களுக்கு தேவையான பரிகாரத்தைக் காணவேண்டும். அனைத்துலக அங்கீகாரம் பெற்ற ஆய்வு நிறுவனங்களில் ஆய்வு செய்வதும் தொழில் பார்ப்பதும் எங்கள் நாட்டிற்கு உபயோகமானதல்ல.

முகாமைத்துவத்தில் விஞ்ஞானிகள் அதிகம் பின்தங்கியுள்ளார்கள். இந்த நிலையை நாங்கள் இல்லாமல் செய்யவேண்டும். அவர்கள் கட்டாயம் முகாமைத்துவம் பயில வேண்டும். அப்படி என்றால்தான் அவர்கள் தங்கள் கற்கை நெறிகளைக் கவனிக்கவும் தங்களது நிறுவனங்களைப் பராமரிக்கவும் செயலக சம்பிரதாய தாமதங்களை தவிர்ப்பதற்கும் உதவும். இந்நிலை எங்களை ஒரு முக்கியமான சூழலில் நிறுத்துகிறது. அங்கு எங்களால் விஞ்ஞான நோக்குடன் செயல்பட முடியாமல் அதிகாரத்தில் உள்ளவர்களுடைய சொல்லிற்கு கட்டுப்பட வேண்டிய சூழலிற்கு எங்களை இட்டுச் செல்கிறது. அங்கு எம்மால் எங்களுடைய அறிவிற்கும் அனுபவத்திற்கும் உணர்வுகளுக்கும் ஏற்ற முறையில் ஆம் என்றோ இல்லை என்றோ சொல்ல முடியாமல் உள்ளது. இதில் முக்கிய முன்னுரிமை என்னவென்றால் விஞ்ஞானத்தை எங்களுடைய சுயநலத்திற்கில்லாமல் நாட்டிற்காகவும், வருங்கால சந்ததிக்காகவும் பயில வேண்டும். நாங்கள் ஒரு நாடாக முன்னேற வேண்டும் என்றால் எங்களுடைய நிறுவனத்தையும் நாட்டையும் எங்களுடைய சுய நலத்திற்கு முன்னால் வைக்க வேண்டும்.

# விண்கலம் ஒன்றின் சாதனை

*சமீபத்தில் ஜப்பானிய வீராங்கனை ஒருவரையும் ஏற்றிக் கொண்டு சென்ற கொலம்பியா விண்கலம் ஒன்று (Space Shuttle) 14½ நாட்கள் பூமியின் சுற்றுப்பாதையில் சுற்றிவந்தது. இது ஓர் உலக சாதனை. இதில் ஆறு அமெரிக்க வீரர்களும் சென்றார்கள். இந்த விண்வெளிக்கலம் 236 தடவைகள் பூமியைச் சுற்றி வந்தது. மிருகங்களையும் உடன் கொண்டுசென்று விண்வெளியில் ஆராய்ச்சிகளை நடத்திவிட்டு இந்த ஏழு பேர்களும் வெற்றிகரமாகத் திரும்பியிருக்கின்றார்கள்.*

KOHA JPL

# பிள்ளைப் பராயம்
## (06 வயது முதல் 11 வயது வரை)

(ஐலன்ட் 1.10.94)

பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அதிக அன்பையும் பாசத்தையும் ஊட்டி வளர்க்கின்றனர். குழந்தைகள் செய்வதையெல்லாம் சரியென்று கணித்துப் பெருமிதம் கொள்கின்றனர். குழந்தையின் மழலைப் பேச்சுக்கேட்டு மகிழ்கின்றனர்.

மூன்றுதொடக்கம் ஐந்துவயதுக் கிடையேயான காலத்தில் அவன் சற்றுச் சுதந்திரம் பெற்றவனாகக் காட்சியளிக்கின்றான். அவனுடைய செயற்பாடுகளில் எல்லாம் மாற்றந் தோன்ற ஆரம்பிக்கின்றன. அவர்கள் பொதுவாகத் தமது செயற்பாடுகளைப் பெருமையுடன் கூறிக்கலந்துரையாடுபவர்களையே பெற்றோருக்கு அடுத்தபடியாக விரும்புகின்றனர். பெண்குழந்தை எனில் தன்னை வியந்து பாராட்டும் அன்னையைப் போல் இருப்பதற்கே நாள் முழுதும் விரும்புகின்றாள். தாயைப் போலவே அவளும் தந்தையுடன் விசித்திர பாசம் கொண்டவளாக இருக்கின்றாள். ஆனால் ஆண் குழந்தைக்கோ இது மறுவிதமாக இருக்கும்.

ஆறு வயது வந்ததும் பிள்ளைகளில் பெரும் மாற்றங்கள் காணப்படுகின்றன. பெற்றோருடன் பொறுமையற்று அவர்கள் ஓரளவு சுதந்திரத்தைப் பெறுகின்றனர். மற்றச் சிறுவர்கள் என்ன சொல்லுகின்றார்கள், என்ன செய்கின்றார்கள் என்பதைப் பற்றியே அவர்களின் கருத்துக்களெல்லாம் அமைகின்றன. மிக முக்கியம் எனக் கருதுபவற்றை அவர்கள் பெரும்

பொறுப்புணர்ச்சியுடன் விருத்தி செய்கின்றனர். அவர்களின் மன உறுதி கண்டிப்பானதாக இருப்பதால் சீனவெடிகளை உளக்குவது போன்ற விவேக மற்ற விடயங்களில் அவர்கள் ஈடுபடுவதில்லை. எவரையும் சுட்டிக்காட்டாத பாடங்களான கணக்கு இயந்திரங்கள் என்பவற்றிலே தான் நாட்டம் கொள்கின்றனர். சுருங்கக் கூறின் குடும்பத்திலிருந்து தம்மை விடுவிக்கக் கூடிய தொழில்களையே ஆரம்பிக்கின்றனர். அத்துடன் வெளியுலகிற்குத் தம்மைப் பொதுப் பிரஜைகள் ஆக்கிக் கொள்கின்றனர்.

## பெற்றோரை நேசித்தல்

ஆறு வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் தமது பெற்றோரை அதிகமாக நேசிக்கின்றனர். ஆனால் அனேகமாக இதை அவர்கள் வெளிக்காட்டமாட்டார்கள். அதே நேரத்தில் மற்றைய வயது வந்தவர்களுடன் அவர்கள் பற்றி நிச்சயமில்லையெனக் சருதினால் சாந்தமாகவே இருப்பர். தம்மை உரிமையுடனோ, மனத்தை உருக்குபவரென்றோ விரும்புவதை அவர்கள் மேலும் விரும்ப மாட்டார்கள். தாங்கள் தனிப்பட்டவர்கள் என்னும் கௌரவ உணர்வு தோன்றுவதால் அவர்கள் அவ்வாறே வாழவிரும்புவர்.

தமது பெற்றோரில் குறைந்த அளவே தங்கியிருக்க விரும்புவதனால் அவர்கள் தமக்குத் தேவையான எண்ணங்களுக்கும் அறிவிற்குமான விடயங்களை தாங்கள் நம்பும் குடும்பத்திற்கு வெளியேயான வயது வந்தவர்களிடம் சொல்லுகின்றனர். வெண்குருதி உயிரணுக்களிலும் பார்க்க செங்குருதி உயிரணுக்களே பெரியன என அவர்கள் விரும்பும் விஞ்ஞான ஆசிரியரொருவர் தவறுதலாகக்கூறினால் அவர்களுடைய மனம் அவ்வாறே மாற்றமடையுமே தவிர அவர்களின் பெற்றோரினால் இதற்குச் சொல்லக் கூடியது எதுவும் இல்லை.

தமது பெற்றோர் கற்பித்த சரியானதும், பிழையானதுமான கருத்துக்களை அவர்கள் மறந்து விட மாட்டார்கள். உண்மையில் அவற்றி ் நன்கு மூழ்கி விட்ட அவர்கள் அவற்றை இப்போது தமது எண்ணக் கருத்தாகக் கொண்டிருப்பர். பெற்றோர் அவற்றை மீண்டும் நினைவூட்டும் போது பொறுப்பானதெனக் கருதப்பட வேண்டியதை அவர்கள் ஏற்கனவே தெரிவித்திருப்பதால் அவர்கள் அமைதி இழக்கின்றனர்.

## மாற்றங்கள்

அனேகமாக இந்தப் பருவத்தில்தான் பிள்ளைகள் தீயசெயல் முறைகளிலும் ஈடுபடுகின்றனர். அவர்களை மேலதிகமாக வளர்ச்சி தரக்கூடிய பேச்சுக்க

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

ளைக் கைவிட்டு மற்றச் சிறுவர்களைப் போல ஆடைகள் அணியவும், தலை முடிகளை வெட்டிக் கொள்ளவும் விரும்புகின்றனர். அவ்வாறான தீர்மானத்துடன் அவர்கள் தமது பாதணிகளைக் கூடக் கட்டாமல் இருக்க நேரிடலாம். அதன் மூலம் அவர்கள் குழுக்களுடன் சேரச் செல்லும் வேகத்துடன் இருக்கின்றனர் எனப்பொருள்படும்.

அவர்கள் தாங்கள் சந்திப்பதற்கான இடமொன்றை நிச்சயிக்கின்றனர். அனேகமாக அது ஒரு மறைவிடமாக இருக்கும். அங்கு தமக்கான விதிகளை நிர்ணயிக்கின்றனர். அவர்கள் தமது இரகசியங்களை ஒரு போதும் சொல்லப்போவதில்லை. ஆனால் இந்த இரகசியத்தின் கருத்து தம்மைத் தாமே ஆட்சி செய்யப் போகின்றனர் என்பதை நிரூபிக்கின்றது. வயது வந்தவர்களினால் இடையூறு செய்யப்படாமலும் மற்றைய சிறுவர்களினால் தடையுண்டாகாமலும் இருப்பதற்காகவே இவ்வாறு செய்கின்றனர் என்பதை அது நிச்சயிக்கின்றது.

இது வளர முயற்சிக்கும் பிள்ளைகளை அவ்வாறான கொள்கை உடையவர்களுடன் ஒருங்கிணைப்பதற்கு உதவுகின்றது. பின்னர் தனித்துவிடப்பட்டவர்கள், வயதில் குறைந்தவர்கள் என்பதை வெளியிலுள்ள மற்றவர்களுக்கு உணர்த்தி, அவர்களையும் தம்முடன் இணைக்க முயல்கின்றனர்.

இது அகந்தையானதாகவோ துன்பமூட்டுவதாகவோ பெரியவர்களுக்குத் தோற்றும். ஆனால் இது பிள்ளைகளுக்குச் சமூக ஒழுங்குமுறையான இயற்கைச் சுபாவத்தை உணரச் செய்கின்றது.

## பெற்றோரின் உதவி

பிள்ளைகள் சமூகரீதியாகப் பிரசித்தி பெற்றவர்களாக இருப்பதற்கு உதவக்கூடிய முன் நடவடிக்கைகளைப் பெற்றோர் எடுக்கலாம். அதாவது பிள்ளைகளுக்கு முன்னைய வருடங்களில் வீண்சந்தடிகளை ஏற்படுத்தாது அந்த வயதுள்ள பிள்ளைகளுடன் இருப்பதற்கு இடமளித்து அவர்களின் சுதந்திரத்தை அநுபவிக்க இடமளித்தலாகும். இளமையில் மற்றச் சிறார்களுடன் எவ்விதம் இருந்தார்களோ அவ்விதமே அவர்கள் வயதுவந்தவர்களாகித் தொழில் புரியும் போதும், சமூக குடும்ப ரீதிகளில் இருக்கும்போதும் மகிழ்வுடன் இருப்பர். பிள்ளைப் பராயத்தின் மத்தியபகுதியில் கூடாத மொழிகளைப் பேசிக்கடுமையாக நடந்துகொள்ளும் போதிலும் பெற்றோர் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் உயரிய தன்மைகளும், இலட்சியங்களும் அவர்களது நீண்ட வாழ்வில் குணத்தின் ஒரு பகுதியாகத் திகழும்.

ஒரு சிறுவனுக்குத் தொந்தரவுகளைக் கொடுக்கும் நண்பர்கள் சிலர் இருந்தால் அநேகமானவர்களை அது பாதிக்கமாட்டாது.

நூலகம் ...

ஏனென்றால் அச்சிறுவன் பாடசாலைக்குச் சென்று அத்தகைய திட்டங்களெல்லாம் மழுங்கிப் போகக்கூடிய வகுப்பொன்றில் இருப்பான். பின்னர் ஆசிரியர் அவனது திறமைகளைப் பயன்படுத்தக் கூடிய வகுப்புத்திட்டங்களில் அவனைப்பங்கு கொள்ளச் செய்வார். இதன்மூலம் மற்றைய சிறுவர்கள் அவனது நல்ல தன்மைகளைப் பாராட்டி அவனை விரும்புவர்.

## மனச் சாட்சி

ஒன்பது வயதாக இருக்கும் போது ஒரு சிறுவன் நிர்ப்பந்தங்களைச் சமயோசிதமாகக் காட்டக் கூடியவாறாகஇருப்பது முன்னரைவிட அவனது எண்ணங்கள் கெட்டவைகளாக மாறுவதனாலல்ல. அவனது மனச்சாட்சி இயற்கையாகக் கண்டிப்பு அடைவதனாலாகும். சகோதரனோ, தந்தையோ, பெரியதாயாரோ அவனை எரிச்சலூட்டும் போது அவர்களைப் புண்படுத்த முடியாமல் தான் அடக்கப்பட்டதை எண்ணி அவன்இப்போது கவலையடைகின்றான்.

எட்டு, ஒன்பது, பத்தாம்வயதுகளில் அடக்கமான கட்டாயப்படுத்தல்கள் சாதாரணமாகவே இருக்கின்றன. அவற்றைச் சாதாரண ஒன்றாகக் கொள்வதா அல்லது பயத்தின் காரணமாக ஏற்பட்டதாகக் கொள்வதா என்னும் பிரச்சனை எழுகின்றது. பாடசாலையில் நன்றாகக் கற்கும் சிறுவர்கள் மகிழ்வுடன்இருப்பவர்களாகிய ஒன்பது வயதுச் சிறுவர்களைப்பற்றிப்பெற்றோர் கவலைப்படத் தேவையில்லை.

கண்முழிகளைப் பிரட்டுதல், தோள்பட்டையை உதறுதல், வரண்ட இருமல்கள் போன்றவை நரம்பு சம்பந்தமான வியாதிகளாகும். கட்டாயப்படுத்தல்கள் போலவே இவையும் சாதாரணமாக ஒன்பது வயதுவரையில் ஏற்படுகின்றன. ஆனால் இரண்டு வயதின் பின்னர் அவை எப்போதும் ஏற்படலாம். இதன் அசைவுகள் விரைவானவையாக இருக்கும். அத்துடன் அதேமுறையில் ஒழுங்காகவும் செய்யப்படுகின்றன. பிள்ளை உணர்ச்சிவசப்பட்டிருக்கும் போது இது அடிக்கடி ஏற்படும். நரம்பு வியாதிகள் சில நாட்களுக்கோ, வாரங்களுக்கோ, மாதங்களுக்கோ இருக்கலாம்அல்லது இல்லாமலே போய்விடலாம். சில வேளைகளில் அதற்குப் பதிலாக வேறொன்றும் வரலாம்.

## கண்டிப்பும் – நோயும்

கண்டிப்புமிக்க பெற்றோரிடம் இருக்கும் விறைப்பான பிள்ளைகளிடம் இந்த நரம்பிற்கான வருத்தங்கள் சாதாரணமாகக் காணப்படுகின்ற வீட்டில் அதிக அழுத்தங்கள் இருக்கலாம். சில வேளைகளில் பிள்ளையின் தாயோ, தந்தையோ கடுமையாக இருந்து அப்பிள்ளையைத் திருத்த முற்பட்டிருக்கலாம். அல்லது மிக உயர்ந்த தரங்களில்

அவர்களை வகைப்படுத்தியிருக்கலாம், அல்லது நடனம், சங்கீதம் விளையாட்டுக்கள் போன்ற பல வகையான செயற்பாடுகளைக் கொடுத்திருக்கலாம் எதிர்க்கக்கூடிய சக்தியுள்ள பிள்ளையாயின் அநேகமாக அது உள்ளே இறுக்கப்பட்டிருக்கமாட்டாது. ஆனால் அதிகமான சந்தர்ப்பங்களில் அவ்வாறு மிக நன்றாகக் கொண்டு வரப்பட்ட பிள்ளைகள் தமது எரிச்சல்களைச் சுமந்து அதனால் இந்த நரம்பு வியாதிகளைப் பெற்றுக் கொள்கின்றன. பிள்ளையொன்றை இந் நோய்க்காக பேசவோ, திருத்தவோ, முற்படக்கூடாது. இது பிள்ளையின் கட்டுப்பாட்டினாலான செயலல்ல.

## அன்பு தேவை

பெற்றோர் தமது பிள்ளைகள் கொடூரமான தொலைக்காட்சிகளையோ சினிமாப் படங்களையோ பார்ப்பதைத் தடை செய்தல் வேண்டும். வேடிக்கைக்குரிய புத்தகங்கள் தீங்கானவையல்ல. ஏனெனில் அவை காட்டுபவை உண்மையானவை போல் தோற்றமாட்டாது. அதே விதமான கொள்கைகளே மற்றவற்றிலும் காட்டப்படல் வேண்டும்.

களவெடுக்கும் பிள்ளைகளை என்ன செய்வது? தமது பிள்ளை களவெடுத்ததை நிச்சயம் செய்யும் பெற்றோர் அதனிடமே கூறி எச்சரிக்கை செய்ய வேண்டும். அந்தப் பொருள் வந்த விதத்தைக் கேட்டறிந்து அவர் பொய் பேசுவதை இலகுவாக எடுத்துக் கொள்ளாது உரியவர்களிடம் சென்று தவறை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படமாட்டாதென்பதை தெட்டத் தெளிவாகத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

இந்நேரத்தில் வெளியில் மிகக் கிட்டிய நண்பர்களின் உறவுகள் ஏற்படுவதையும் வீட்டில் அதற்கான அனுமதியையும்ஆதரவையும் கொடுப்பதா இல்லையா என்பது பற்றிப் பெற்றோர் சிந்திக்க வேண்டும். இந்நேரத்தில் தான் அவன் ஒத்த வயதுடையவர்களுடன் ஒன்று சேர்ந்து குழுவாகும் காலம். அன்பையும் பாதுகாப்பையும் பெறாத சிறுவர் பொறுப்பற்ற தாழ்ந்த நிலையை அடைவர். இதிலுள்ள ஒரே நம்பிக்கை மனோதத்துவ ரீதியான சிகிச்சை முறையாகும். அன்பும் கருணையுமுள்ள மக்களுடன் வசித்து அவர்களுடன் பழகும் போது வாழ்வு மலரும்.

# போரும் சமாதானமும் தமிழரின் சிந்தனையும்

(சண்டே ஒப்சேவர் 16/21.10.94)

*சமாதானத்திற்கு ஒரு சமூக நிலையை ஏற்படுத்திய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவின் பாரிய அளவிலான தலைமைத்துவ தகமை நம்பிக்கையீனமற்றதாக அமைந்துள்ளது. போர் நடந்துகொண்டு இருக்கையில் சமாதானத்திற்காக முயற்சித்தல் ஒரு சுலபமான செயல் அல்ல.*

வரலாற்றில் வேரூன்றிய பதினொரு வருடப் போர் முடிவுக்கு கொண்டுவர இயலாத ஒன்று என்பதை சிந்திக்க வேண்டும். எப்படிப்பட்ட புகழ்பூத்த எதிர்பார்ப்புக்களாயினும் அதில் ஒரு சமாதானத்துக்கான தீர்வு இல்லையேல் அது வேட்டுத்துப் பாக்கியினூடாக நடந்த திருமணத்தைப் போன்றதாகும். சனாதிபதித்தேர்தல் வரையோ அதன் பின்னரோ எந்த வகையான பாரிய விபரீதங்களும் இடம் பெறா வண்ணம் சமாதான சூழ்நிலையை தாங்கி நிற்றல் இன்றியமையாதது ஆகும். எல்லாவற்றிற்கும் மேலாக சமாதானத்தின் சமூகக் கோட்பாடுகளையும் மற்றைய பயன்களையும் தாங்குதல் இன்றியமையாதது ஆகும். குளிர்ந்த மருத்துவ பரிசோதனைக்கு ஒப்பான மீள்பரிசீலனைக்கு அரசியல்வாதிகளையும் மக்களையும் கொண்டு வருதல் கடந்த காலத்தை அமைதியாக அமைப்பது ஆகும்.

சமாதானத் தீர்வு விடயத்தில் முரண்பாடானவர்கள் கூட அங்கம் வகிக்கின்றனர். வடகீழ்தாயகம், இணைப்பு, சமஷ்டிக்கிளர்ச்சிவாதம் போன்றவற்றில் ஆட்சி

நடத்திய சில சொற்களும் வாக்கியங்களும் ஒத்தியல்பானவை, இதன் காரணமாக உணர்ச்சிப் போக்கான உள்ளடக்கங்கள் ஏற்பட்டால் அந்நிலை விசையான மாறுபாடாக அமையும். பிரதமர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்காவினால் தெரிவிக்கப் பட்ட மகாண எல்லைகளை எல்லைப்படுத்தும் கருத்து வடக்கு கிழக்கு இணைப்பு என்ற சொல்லைஎல்லைப்படுத்திக்காட்டுவதாக அமைகிறது. அதே வேளையில் தமிழ்ப் பற்றுள்ளவர்களை சந்திப்பதற்கும் வழிகோலும் செயலாகவும் அமைகிறது. இவ் விடயத்தில் அவர் வெற்றி பெற்றாரா இல்லையா என்பது வேறு. ஆனால் அவர் தீர்க்க முடியாத விடயங்களை அமைதிப்படுத்த முயன்றுள்ளார். கருத்தற்ற சாதாரண பேச்சுக்களை மீண்டும் மீண்டும் தொடர்வதில் பயனில்லை என்றும் அது வெல்லமுடியாத ஒரு போரிலோ வெல்லமுடியாத ஒரு வாதத்திலோ ஒவ்வொருவனும் தன் நிலையான இடத்தை எடுத்துக் கொள்வதாக இருக்கும் என்றும் ஒவ்வொரு சொல்லிலும் தொடரிலும் கூறியுள்ளார்.

## சனநாயகம்

சனநாயகம் என்ற சொல் எதனை விளக்குகிறது என்று கூற முடியாத அளவுக்கு துர்அதிஸ்ட நிலையை இன்று அடைந்துள்ளது. அது ஒரு தொய்வுற்ற வாக்கியமாக இன்று விளங்குகிறது. அதிகாரத்தில் இருக்கின்ற அதிகாரத்தில் இல்லாத கட்சிகளுக்காக வாக்கு நிலையங்களுக்கு சென்று வாக்களிப்பதுதான் வெறும் சனநாயகமா? அப்படியாயின் தமிழர்கள் இக்கட்சியில் எங்கே வருகின்றனர்? இவை எல்லாவற்றையும் செயல்படுத்துவதனால் ஒருதொண்டமானையோ, ஒரு அஸ்ரப்பையோ அல்லது ஒரு சந்திரசேகரனையோ பெரும்பான்மை சிங்களக்கட்சியில் ஒருவருக்காகவோ அல்லது இன்னொருவருக்காகவோ சாத்தியமாக்கி சார்புபடுத்துவதாக அமையும். இது தேர்தலின் மூலம் ஆட்சி உரிமையையோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராகும் உரிமையையோ பெற்றுத்தரும். ஆனால் அது தேர்தலின் சனநாயக விதிகளை வரையறை அற்றதாக்கி விடும்.

உதாரணமாக வடபகுதியில் நடந்த பராளுமன்றத் தேர்தல் ஓர் கேலிக்கூத்தாக அமைந்தது. ஆனால் இக் கேலிக்கூத்து செல், குண்டுவீச்சோடு சனநாயகத்தின் கீழ் நடைபெறுகின்றது என்பதை காட்டியது. இப்படியான நிலையில் இது சம்பந்தமாக பணமீட்ட முற்பட்டவர்களின் நோக்கங்களை கொழும்பு பத்திரிகைகள் வெளிக்கொணர்ந்தன. பாராளுமன்றத்கில் ஒரு ஆசனத்தைக் கூடபெறாதவர்களிடம் பிரதமர் ஆய்வுரை நிகழ்த்தினார். சனநாயக வழியில் செல்வதில் விடுதலைப் புலிகளின் விருப்பமின்மை எவ்வளவு தூரத்தில்உள்ளது என்

பதை அறிய வேண்டும். புலியின் நிலையினால் குழப்பமடைய முன்பு தமிழ்மகனின் மனதை புரிந்துகொள்ளவேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக பழைய காலம் தொடக்கம் சமகாலவரை டலிகளின் தோற்றம் போன்றவையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

## தமிழ் இராச்சியம்

வரலாற்றுத் துறைகள் பற்றி ஆராய்வோம் எனின் பதினாறாம் நூற்றாண்டில் மேல்நாட்டு ஆக்கிரமிப்பாளரான போத்துக்கேயர் இத்தீவிற்குள் வந்தபோது கோட்டை, கண்டி இராச்சியங்களுடன் ஒன்றிணைந்ததன்னாதிக்கம்மிக்க தமிழ்ராச்சியமும் இங்கே அமைந்திருந்தது. அரசாட்சி செய்யும் அரசுகள் அமைந்த காலமாக இருந்த அந்நேரத்தில் சுய இயல்புள்ள அரசுகள் தோன்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. கோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய இரண்டு இராச்சியங்களும் ஆயிரத்திஐந்நூற்றி தொண்ணூற்றேழிலும், ஆயிரத்திஅறுநூற்றிபத்தொன்பதிலும் போத்துக்கேயரால் வீழ்த்தப்பட்டன. அதன் பின்னர் ஒல்லாந்தர் கரையோரப் பகுதிகளை கைப்பற்றி தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆனால்போத்துக்கேயரோ ஒல்லாந்தரோ சிங்கள, தமிழ்குடியிருப்பு பிரதேசங்களை அழிப்பதற்கு ஒருபோதும் முயற்சிக்கவில்லை,உண்மையில் ஒல்லாந்தர் முழுக் கடலோர பகுதிகளையும் யாழ்ப்பாணம், கொழும்பு, காலி என்று வகைப்படுத்தப்பட்ட தமது மூன்று பிரதேசங்களையும் தமதுஆட்சிக்குட்படுத்தினர். ஆயிரத்திஎண்ணூற்றி பதினெட்டில் வன்னிசிற்றரசின் வீழ்ச்சியின் பின்னரும் ஆதார பூர்வமான கரையோர பிரிவுகளை அவர்கள் குலைக்கவில்லை. ஒரு இணைந்த ஆட்சியை நடத்துவதற்கு கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் போன்றவற்றையும் கரையோரப் பகுதிகளையும் தனித்தனியாகவும் நிர்வகித்தனர் என்று ஆயிரத்தி எழுநூற்றி தொண்ணூற்றெண்பதில் சேர். கியுகிளெக்கோர்ன் என்பவர் பிரித்தானிய அரசுக்கு ஆதாரமான குறிப்பில்தெரிவித்துள்ளார்.

இரு வெவ்வேறான இனங்கள் நெடுங்காலந் தொட்டு இந்நாட்டை தங்களது உரிமையாக்கிக் கொண்டனர். முதலில் சிங்களவர் உள்நாட்டு பகுதிகளை வசிப்பிடமாக்கி தென்பகுதி மற்றும் மேற்கு பகுதிகளையும் தம்முடையதாக ஆக்கிக்கொண்டனர். இரண்டாவதாக மலையகத்தினர் வடக்கையும், கிழக்கையும் தமது உடமையாக்கிக் கொண்டனர். இவ்விரு இனத்தவர்களும் தமது மதம், மற்றும் பழக்கவழக்கங்களில் முழுக்க முழுக்க வேறுபட்டனர். அன்றைய தலைமை நீதியரசராக இருந்த அலெக்சாண்டர் ஜோன் குஸ்ரோன் பெரிய பிரித்தானியாவிலும், அயர்லாந்திலும் அமைந்திருந்த அரச அமைப்பு முறையை

தேசிய ... மாநகர ... யாழ்ப்பாணம் ... சேவை

ஆசிய அரச அமைப்புக்கு ஆயிரத்தி எண்ணூற்றி இருபத் தேழில் அறிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்க ளில் வாழ்ந்த மக்கள் பயிர்செய் தலை (கமத்தொழிலை) பிர தான தொழிலாகக் கொண்டு வளர்ச்சியுற்று வாழ்ந்தனர். அவர்கள் சாதி, மொழியை பேசும், எழுதும் தன்மை பழக்க வழக்கம் போன்றவற்றில் இந்தி யாவின் தென்பகுதியில் வாழ்ந்த சந்ததியினரை ஒத்திருந்தனர். எனவே எனக்குக் கிடைத்த வர லாற்று ஏடுகளின் படி சிறந்த முடிவை எய்தலாம் என நான் நினைக்கின்றேன் எனக் கூறுகின் றார்.

கோல்புறூக் ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய ஆயிரத்தி எண்ணூற்றி முப்பத்திமூன்றில் பிரித்தானிய அரசு முழு இலங் கையையும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் கொண்டுவந் தது. முன்பிருந்த சுதேசிய அரச அமைப்பை நிர்வகிக்கும் நோக்க மாகவே இதை அமைத்தனர். அரசியல் அமைப்பின்படி நிர் வாக எல்லைகளை மாற்று வதிலோ அல்லது பாதுகாப்ப திலோ எந்தவிதமான நீதித்தன் மையையும் பேணவில்லை. அவை எல்லாம் காலத்தின் தேவைக்காக தூண்டப்பட்ட இன்றி அமையாத செயலாகவே அமைந்தன.

மீண்டும் நினைவுபடுத்த வேண் டிய இன்னோர் சம்பவமும் தமிழ் வரலாற்றில் உண்டு. ஆயிரத்தித் தொளாயிரத்தி இருபதாம் ஆண்டுக்காலத்தில் சிங்களவர் களும் சேர் பொன். ராமநாதன், சேர் பொன். அருணாசலம் போன்ற தேசியத்தலைவர்களும், அரசியல் சீரமைப்புகளை பெறுவ தற்கு முனைந்து நின்றனர். இவ் வேளையில் நாட்டின் முழுவிடு தலையையும் கருத்திற்கொண்டு ஒரு இளம் மகாசபை யாழ்ப் பாணத்தில் முளைத்தெழுந்தது. அண்மை நாடான இந்தியாவின் சுதந்திரத்தாகத்தால் தூண்டப் பட்ட திரு ஹன்டி பேரின்ப நாயகம் போன்றோர் யாழ்ப்பா ணத்தில் நடந்த இளம் காங்கிர சின் வருடாந்த அமர்வுகளில் பங்குபற்றுவதற்காக இந்தியா வில் இருந்த மகாத்மாகாந்தி, கமலாதேவி, சத்தோபட்டியா, திரு. சத்தியமூர்த்தி போன் றோரை அழைத்தனர். அவர் கள் முழுமையான சுதந்திரத்திற் காக கிளர்ச்சி செய்து யாழ்ப் பாண மைதானத்தில் ஒரு மூவர் ணக் கொடியை நாட்டினர். டொனமூர் ஆணைக்குழுவின் மறுசீரமைப்பு ஆழமாக சுதந் திரத்தின் குறிக்கோளில் செல்ல வில்லை என்ற நோக்கில் தேர் தல் பகிஸ்கரிப்பை ஆரம்பித்த னர்.

ஆயிரத்தி தொளாயிரத்தி முப் பத்திநாலில் பகிஸ்கரிப்பை அகற் றும் வரைக்கும் தமிழ் பிரதிநிதித் துவ ஆசனங்கள் போட்டியின்றி இடம்பெற்றன. ஆயிரத்திதொ ளாயிரத்தி நாற்பத்தெட்டில்

நாடு சுதந்திரம் அடைந்தது. அது வரைக்கும் தமிழர் தமது எதிர் காலத்தை நிர்ணயிக்கக் கூடியஒரு தடைப்படுத்தப்படாத கடந்த காலத்தைபெற்றிருந்தனர். அத்தோடு தமது வாழ்க்கையை நிர்ணயிக்கக் கூடிய சமாதானத்தில் ஈடுபட்டு எந்நேரமும் விடுதலை வேட்கை உடையவர்களாய் இருந்தனர். மேற்கு குடியேற்ற நாட்டினரின் நானூற்றைம்பது வருடகால ஆட்சியில் தாங்கள் வாழ்ந்த பிரதேசங்களை பாதுகாப்பாக வழங்கிச்சென்றனர்.

வெளியார் ஆட்சியினால் சுதந்திரம் என்ற ஒன்று சிங்கள மக்களுக்குரியது என்று கருதப்பட்டால் அது தமிழர்களுக்கு உரிமை அற்ற ஒன்றா? ஆனால் கடந்த நாற்பத்தாறு வருடங்களாக அது எத்தகைய அர்த்தத்தையும் ஏற்படுத்தவில்லை. நியாயபூர்வமாக அரசியல் நிர்ணயப்படி வேறுபடுத்தப்பட்டு பாதிப்படைந்ததோடு அல்லாமல் நாட்டின் தொடர்ந்த அடக்குமுறைகளால் அவர்களை அடித்து நொருக்கி கொலை செய்து சுதந்திரம் அடைந்த பத்து வருடங்களுக்குள்ளேயே அகதிகள் ஆக்கியும் விட்டனர். இவை எல்லாம் பிரிவினை என்ற குரல் எழுப்பப்படுவதற்கு முன்பும், புலிகள் என்ற சந்ததியினர் தோன்றுவதற்கு முன்பும் நிகழ்ந்தவை ஆகும். நாற்பத்தாறு வருடங்களாக நடந்த துன்பமான அடிபிடிகளின் முன்னேற்ற நோக்காக சிறுபான்மையினரின்உரிமைகளை மீட்டெடுத்தல் (திரு. ஜீ.ஜீ பொன்னம்பலம்) சத்தியாக்கிரக அமைப்பில் தென்படும் ஒப்பந்தங்கள் சமஷ்டிக்கான கோரிக்கைகள் (திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்) பிரிவினைக்கான ஆணையைத் தேடுதல் போன்ற எல்லாம் கருத்தில் கொள்ளப்பட்டன. நாட்டின் அடக்கு முறை, கிளர்ச்சி அடக்குதலின் விசேட பாராளுமன்ற கட்டமைப்புக்கள், இந்திய ஆயுதப்படையினரின் தலையீடு கரந்தடிப்படையினரின் போர் என்பவை இன்றைய நிலையை இரு ஆயுதப்படையினருக்கு இடையிலும், இருகடற்படையினருக்கும் இடையிலான நேரடிப் போராக குறிப்பிட்டுள்ளது. ஓர் அமெரிக்க எழுத்தாளர் முன்பு ஒரு முறை கூறிய விதமாக இவ் நாற்பத்தாறு வருட சீரழிவின் போது சிங்கள மக்களும், சிங்களத் தலைவர்களும், எங்கு சென்றனர்? சனநாயக பாதையில்இடையூறாக தேசியமயமாக்கல் அமைந்தது. முதிர்ந்த சுயநிலை கொண்டவர்களிடம் கூட சனநாயகம் நல்ல முறையில் முளைவிட வில்லை. ஆனால் அவை நாட்டினரின் சனநாயகம் அற்ற கூடுதலான தேசியமயமாக்கலாக அமைந்தது.

நாட்டில் இனப்பிரச்சனையில்லை, பயங்கரவாதப் பிரச்சனை என்ற சனாதிபதி விஜயதுங்காவின் நிலைப்பாடு சரியா அல்லது தவறா என்று சொல்வதில் தெற்கு மக்களின் கருத்து

தமிழ்மக்களை பொறுத்தவரை காலங்கடந்த ஒன்றாகிவிட்டது. அதுஒரு இனப்பிரச்சனை அல்லாவிடினும் இந்நாட்டின் உரிமைப் பிரச்சனை ஆகும். பல தரப்பட்ட இனப்பிரச்சனைகள், பல தரப்பட்ட மொழிச்சார்புகள், சமயகோட்பாடான உட்பொருள் கொண்டு இணைந்திருக்கும் உருவம் சுருக்கமான வரலாறாக சிங்கள மக்களின் மனங்களில் பதிந்துள்ளன. இதுகுதிரை லாயத்தை விட்டு வெளியேறியபின் லாயத்தை இழுத்து மூடியதற்கு ஒப்பாக அமைகிறது. முன்பு ஒரு முறை பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் கூறியதுபோல "ஆகக் குறைந்தது ஆகபபந்தியதாகும்" எனபது போல பரதமர் திருமதி சந்துரிகா மாரணதுங்காவின் சமாதானத்துககான நல்லெண்ண நகாவும் இடர்களில் விழ்ந்ததாக அமையக்கூடும். திரு. லயனல்பெர்னான்டோவின் அந்தவட்டயத்தின் இரகசியத்தூது யாழ்ப்பாணததுக்கான இறுதி புகைவணடியாக அமைந்துவிடக் கூடும். ஆனால் அவற்றைக்கூறி ஒருவர் எல்லாவற்றையும தீயது என எண்ணும் மனப்பான்மைக்கு போய்விடக்கூடாது. இருபக்கத்திலும் மிகப்பெரிய நமபக்கைகளும், எதிர்பார்ப்புக்களும், இனப்பிரச்சினை சம்பந்தமான விடயத்தில் காணப்படுகிறது.

ஒரு சமாதானத்தீர்வு பாரிய ஒன்று மட்டுமல்ல அது ஆட்சிக்கு இயன்ற ஒன்றாக அமைய வேண்டும். மனித ஆற்றல்களின் பின்னணியில், தடையற்றசெயற்பாட்டுத்திறன்களுடன் தலைவர்களின் பங்கோடு அரசியல் நிலையை அது வடிவமைக்கின்றது. வரவு செலவுத் திட்டத்தை சமப்படுத்தும் வகையில் போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்துறையில் லாபத்தை ஈட்டுதல், பொதுநல மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தூண்டும் செயலாகும். பொருளாதார தடைகளை தளர்த்தியும் மின்சாரம் தொலைத் தொடர்பு போன்றவற்றுக்கான உறுதிமொழிகளைக் கொடுத்தும் மக்களைக் கவரலாம். இவை மக்களின் மனங்களையும், சிந்தனைகளையும் வெலலும் தந்திரங்களாகும். ஒரு உறுதியான அரசியல் தீர்வை காணபதானால் அரசாங்கம் தனது முயற்சிகளுக்கும் தடைகளுக்கும் அப்பால் சிந்திக்க வேண்டும். தமிழ்மக்களின் நோக்கங்களை எண்ணங்களை விளங்கிக் கொள்ளும் அவா இருக்க வேண்டும். அதனை டிக் என்று தட்டுவதற்கு என்ன நடந்தது? புலியின் அசாதரண தோற்றத்துக்குப் பின்னால் இருபபது என்ன?

ஆணிகளின் அதிகாரங்களைக் கொண்ட பிராந்தியத்தில் ஆசியப் பெண்கள் அரசியல் துறையில் ஈடுபட்டுள்ளனர். திருமதிகள் சிறிமாவோ பண்டாரநாயக்கா, இந்திராகாந்தி, கொறாசன் அக்கினோ, பெனாசிர்பூட்டோ, காலிட்டாசியா தற்போதைய சந்திரிகா குமாரணதுங்கா

போன்றவர்கள் அத்தகையவர் கள். இவர்கள் அரசியல் வித வைகளும் பலன்பெறுபவர்களு மாவார். அவர்களது உள்ளங் களைத் தொடும்வகையில் சமூக ஆய்வாளர் ஒருவர் ஆற்றிய உரையின் வினாவை ஒவ்வொரு வரும் அவதானிக்க வேண்டும். பெண்புலிகளாக உறைவிடங் களுக்கு அண்மையில் செயற்படும் கன்னிகள் காட்சி ரூபங்களாக அதிசயிக்கத்தக்க வகையில் தோன்றுவார்கள். இவர்கள் எவ் விதம் சமூகஅவதானிகளின் கண் காணிப்பில் இருந்து தப்புகின்ற னர். இது வெளிப்படையான தேர்ந்தேடுக்கும் ஆற்றல் நிறைந்த, சக்தி வாய்ந்த செய லாகும்.

## உந்துசக்தி (ஆற்றல்)

இப்பெண்கள் உண்மையில் காற்சட்டைகள் அணிகின்றனர் அவர்கள் வாகனங்களை செலுத் துவதுடன் சக்திவாய்ந்த ஆயு தங்களையும் பயன்படுத்துகின்ற னர். கடலில் நீந்துகின்றனர் சுழி யோடுகின்றனர். போரில் முன் னணியில் நிற்கின்றனர். அரசி யல் அதிகாரத்தை அடைகின்ற அவாவை விட்டு மாறாக தமது உயிர்களை துறக்க ஆயத்தமாக இருக்கின்றனர். அவர்கள் பாரம் பரிய தமிழ் சமூகத்தில் இருந்து மற்றையவர் அறியும் தன்மைக்கு விதிவிலக்காக சில வருடங்க ளுக்கு முன்பு தோன்றியவர்கள். எப்படி இந்த அதிசய மாற்றம் ஏற்பட்டது? அவர்களை இப்படி யான பயங்கர உத்வேகத்துக்கு கொண்டு சென்றது என்ன? தீவிர விசாரணையில் இது ஒரு முக்கியமான விடயம். ஆனால் சமூக விஞ்ஞானிகளுக்கு இது ஒரு தின்றியமையாத வேலை ஆகும். பொறுப்புள்ள இன் னொருவரின் ஆளுமையில் புகுந்து கற்பனையாக மற்றொ ருவரின் அனுபவத்தை அனுப வித்தல், புரிந்துணர்வை தேடுதல் சிங்கள மக்களினதும், அன்னைய ரினதும், சகோதரிமாரினதும், பெண்களினதும், அரசியல்வாதி களினதும் பிரதானமாக பெண் ஆகையால் பிரதம மந்திரியின தும பாரிய பொறுப்பாகும். இப்படிப்பட்ட புரிந்துணர்வில் ஒருவர் பணிந்து ஏற்கக்கூடிய சமாதானத்திற்கான திறவுகோ லும் பெறுமதி வாய்ந்த தீர்வும் அமைந்துகிடக்கின்றது.

# நாளுக்கு 2,36,000 குழந்தைகள் பிறப்பு

ஜூலை 93 முதல் ஜூன் 94 முடிய ஒருநாளைக்கு 2,36,000 குழந்தைகள் வீதம் பிறந்து உலக மக்கள் தொகையில் 86 மில்லி யன் பேர் புதிதாகச் சேர்ந்து விட்டனர். தற்போது உலக மக் கள் தொகை 5.63 பில்லியன் பேர். இந்தியாவின் மக்கள் தொகை 914 மில்லியன். மற்ற நாடுகளின் தற்போதைய மக்கள் தொகை: சீனா 1.2 பில்லியன் அமெரிக்கா 261 மில்லியன், இந்தோனேசியா 195 மிலலியன், பாகிஸ்தான் 137 மில்லியன், பங் களாதேஷ் 1.8 மில்லியன்.

356/CC

# சேர்ச்சில், ட்ருமன் ஆகியோருடன் போற்றக்கூடியவர் மார்சல்

— அல்பர்ட் ஆர் கன்ட்

(ஏசியன் வால் ஸரீற் ஜேர்னல் – 6.9.94)

நினைவுச் சின்னங்கள் தொடக்கம் இம்மையுலகு வரையான ஆண்டு நினைவு விழா நிகழ்ச்சிகள் கொண்டாடப்படும் இந்த வேளை, அமெரிக்காவின் இன்றைய வரலாற்றில் சென்ற கிழமை மிக முக்கியம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்று அதிகம் எவருக்கும் தெரியாது இடம்பெற்றது. அது தான் 55 ஆண்டுகளுக்கு முன்னர் ஜோர்ஜ் கட்லெட் மார்சல் (George Catlett Marshal) ஆளணி படைத்துறை தலைமைப் பணியாளராக வந்த நிகழ்ச்சியாகும்.

அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஆளணி படைத்துறைத் தலைமைப் பணியாளராகவும், இராசாங்கச் செயலாளராகவும், பாதுகாப்புத்துறைச் செயலாளராகவும் இருந்து வந்த ஜெனரல் மார்சல் அந்த நூற்றாண்டில்ஒரு சில பொதுப் பணியாளர்களினால் விட்டுச் செல்லப்பட்ட ஈடிணையற்ற ஒரு மரபுரிமைப் பண்பை விட்டுச் சென்றுள்ளார். இரண்டாவது உலகப் போரில் வெற்றிவாகை சூடிய படைக்கலத்தை அவர் கட்டிஎழுப்பி உருவாக்கினார். போருக்குப் பின்னர் ஐரோப்பாவை முன்பிருந்த நிலைக்கு கொண்டுவரத்தக்க பொருண்மியத் திட்டத்தை அவர் நடைமுறைப்படுத்தினார். ஜெனரல் டக்ளஸ் மக் ஆர்தரை (Gen Douglas Mac Arthur) வெளியேற்றுமாறு பரிந்

துரை செய்து பொதுமக்கள் கட்டுப்பாட்டைப் பலப்படுத்தினார். டுவைற் ஐசனோவர், (Dwight Eisenhower) வின்ஸ்ரன் சர்ச்சில் (Winston Churchill) ஹறி ட்ரூமன் (Harry Truman) போன்றவர்கள் தாங்கள் ஒரு போதும் சந்திக்காத பெரும் மன்தர் என அவரைக் கணித்தனர்.

இந்த மனிதனது தூரநோக்கும், நேர்மையும் தான் தற்கால அரசியல் மற்றும் நாட்டு நெருக்கடிகளுக்கு ஏற்ப அவற்றை மாற்றியமைக்கக் கூடியதாக இருந்ததா என்பது தெளிவில்லாதிருக்கின்றது. ஆனால் ஜெனரல் மார்சல் அவர்கள்பற்றி போரஸ்ற் போக் (Forrest Pog-ue) அவர்கள் எழுதியுள்ள சிறப்பான நான்கு பாகங்கள் கொண்ட வாழ்க்கைவரலாற்றை இன்றைய அரசியல் வாதிகள் வாசித்தல் வேண்டும்.

1939 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1 ஆம் நாளன்று ஜோர்ஜ் மார்சல் அவர்கள் ஆவண் படைத்துறைத் தலைமைப்பணியாளராகப் பதவி பெற்ற வேளை இரண்டு உண்மைகள் வெளிப்படையாகத் தோற்றின.

அன்று தான் கிட்லருடைய ஆற்றல் மிக்க படைகள் போலாந்தைக் கைப்பற்றி, நெப்பாலியனது காலத்திலிருந்து காணப்படாதளவு ஐரோப்பாக் கண்டத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய நிலையிலிருந்தன. அடுத்ததாக இரண்டு லட்சத்துக்கும் அதிகமானவர்களைக் கொண்டிராத அமெரிக்கப் படைகள் உலகில் பதினாறு நாடுகளுக்குப் பின் தங்கிய நிலையில் இருந்தன. ஆனால் ஜெனரல் மார்சல் ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் அந்தப் படையை 8.3 மில்லியன் படைவீரர்களைக் கொண்டதாகக் கட்டியெழுப்பி உலகம் ஒரு போதும் கண்டிராத மிகவும் ஆற்றல் மிகுந்த படையாக்கினார்.

இராஜாங்கச் செயலாளராகவும், பாதுகாப்புத்துறைச் செயலாளராகவுமிருந்த ஜெனரல் மார்சல் சனாதிபதி ட்ரூமனின் வலது கரமாக விளங்கினார். பொதுவுடமைவாத அச்சுறுத்தலைத் தடை செய்யும் கொள்கையை வகுப்பதில் இவரைப் போன்று எவரும் பெரும்பங்கு வகிக்கவில்லை, மார்சல் திட்டத்தை வகுத்ததற்காக அமைதி நிலவிய காலத்தில் நோபல் பரிசு பெற்ற படைத் துறையைச் சேர்ந்த முதலாவது மனிதன் இவரேயாகும்.

பலவிடயங்கள் மிகவும் அச்சுறுத்துபவைகளாக விருந்தன. அதல் தீவிரமது ஈடுபாடு முதன்மை வாய்ந்ததாகவிருந்தது. அவைகளில் பெரும் தவறுகளையும் இவர் இழைத்துள்ளார். 1941ம்

ஆண்டு பேர்ள் துறை முகம் யப்பானியர்களால் தாக்கப்படும் என்பதை இவர் எதிர்பார்த்திருக்கவில்லை. ஜெனரல் ஐசனோவருடனும் மற்றவர்களுடனும் விவாதித்த வேளை 1945ம் ஆண்டு சோவியத் யூனியன் கொண்டிருந்த நோக்கங்கள் பற்றி இவர் குறைவாக மதிப்பிட்டிருந்தார். 1948ம் ஆண்டு இஸ்ரேலை அங்கீகரிக்க வேண்டும் என்று நடைபெற்ற வாதத்தின் போது இவர் தவறான பக்கத்தில்நின்று செயற்பட்டார். ஆனால் தவறான கணிப்புக்கள் பெரிதாக விருந்தாலும் அவர் ஆற்றிய பெரும் பணியினால் இவையெல்லாம் மறைந்து போயின.

மார்சலின் தூர நோக்கும், கடமையுணர்ச்சியும் அப்போதிருந்த அரசியலைகளால் ஒருபோதும் தடையுறவில்லை. தொடக்கத்திலிருந்து வந்த பொதுமக்களின் எதிர்ப்பை வெற்றி கொண்டு, படையைக் கட்டியெழுப்ப அவர் மேற்கொண்ட பெரும் கடும் பணியை இலகுவாக மறந்துவிடலாம். போரில் ஈடுபடுவதற்கு முன்னர் பொது மக்களின் தீர்ப்பைப் பெறுவதற்காக ஒரு தேசிய வாக்கெடுப்பை நடத்தும் அரசியல் யாப்புத் திருத்தத்துக்கு மக்கள் சபை 1938ம் ஆண்டு பெரும்பான்மை வாக்கையளித்தது. 1941ம் ஆண்டு பேர்ள் துறைமுகத்தின் மீது தாக்குதல் மேற்கொள்வதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் அந்தச் சட்டத்தின் விரிவாக்கம் ஒரு வாக்கு வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. மக்கள் சபை மீது ஜெனரல் மார்சலுக்கு அமோகசெல்வாக்கு இல்லாதிருந்தால் அது மிக மோசமாகத் தோல்வி கண்டிருக்கும்.

இரண்டாம் உலகப் போரின் பின்விளைவு இன்னொரு புதிய உலக ஒழுங்குக்கு வழிகாட்டுவதாயிருந்தது. சோவியத் ஒன்றியத்தின் அச்சுறுத்தல்இருந்தபோதும் அங்கு உள் நோக்கிப் பார்ப்பதற்கான ஒரு பலமிக்க போக்கு காணப்பட்டது. ஆனால் ஜெனரல் மார்சலும் சனாதிபதி ட்ருமனும் ஐரோப்பாவை விடுவிப்பதற்காகப் பலகோடி பெறுமதியான திட்டங்களை வகுத்தது மட்டுமல்லாமல் அங்கீகரிப்பதற்காகக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த காங்கிரசையும் இணங்க வைத்தனர்.

அசாதாரண உறுதிபடைத்த மனிதரான ஜெனரல் மார்சல் திறமை வாய்ந்த உதவியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அதிகமான பொறுப்புக்களைக் கொடுத்திருந்தார். ஜெனரல்களான ஐசனோவர், ஒமர் பிராட்லி, மத்தியு றிட்ச்வே, ஜோர்ஜ் பற்றன் என்போர் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகும். எதற்கும் ஆம் என்று சொல்பவர்களை அந்தப் படைத்துறைத் தலைமைப் பணியாளருக்குப் பிடிக்கமாட்டாது. ஒரு கிழமை முடிவில் அவர் தனது உயர்ந்த உதவியாளர்களை

அழைத்து, "நான் முழுக் கிழமை யிலும் செய்தவற்றில் ஒன்றிலும் கூட நீங்கள் உடன்படாதிருக்கவில்லையே" எனத் தனது பெருத்த ஏமாற்றத்தை வெளிப்படுத்தியதை ஜெனரல் பிராட்லி ஒரு முறை நினைவு கூர்ந்தார்.

அவர் ஒரு சிறப்பான உணர்வுள்ள படைத் தலைவராகும். ஒரு படைத் தளபதி நோபல் பரிசைப் பெற்றிருக்கின்றார் எனச் சிலர்கூறினார்கள். அவர் நோபல் பரிசைப் பெற்றுக் கொண்ட போது, "போரில் ஏற்பட்ட இழப்புக்கள் பல பேரேடுகளில் மிக நேர்த்தியாக எழுதப்பட்டு என் முனனேஒழுங்காகப் பரந்து கிடக்கின்றன. அந்தப் பேரேடுகளின் கட்டங்கள் நினைவுச் சின்னங்களாகும். போரினால் ஏற்படும் இன்னொரு பெருந்துன்பத்தை தவிர்த்துக் கொள்வதற்கான சில வழி வகைகளை, முறைகளைக் காண்பதில் நான் பெரிதும் முனைந்து கொண்டிருக்கின்றேன்", எனக் கூறினார். கைத்தொழில் அதிபர்களுடனும், காங்கிரசுடனும் ஒன்றிணைந்து பணியாற்றி உலகத்திலேயே தனது படை தான் திறமாக விநியோகங்களைப் பெற்று வருகின்றதென்பதையும் அவர் உறுதிப் படுத்திக் கொண்டார்.

வேர்ஜினியாப் படைத்துறைக் கல்லூரியில் பயிற்சி பெற்ற இவர் மக்ஆர்தர் போன்றோ அல்லது ஐசனோவரைப் போன்றோ தலைமைத்துவத் தகுதியற்றிருந்தாலும் மதிப்பையும், நம்பிக்கையையும் பெறக்கூடிய ஒரு ஆற்றல் மிக்க தோற்றத்தைக் கொண்டிருந்தார். ஜோர்ஜ் மார்சல் ஒரு வித்தியாசமான மனிதர் என்பதை படைத்தளபதிகளுக்கு ஆதரவளிக்கும் சேர்ச்சில் விரைவில் புரிந்து கொண்டார். அவர் மரபு வழியான அரசியலைத் தவிர்த்து வந்தவராயினும் அவர் ஒரு திறமையான அரசியல் வாதியாகும். போர்க்காலத்தின் போது ஆற்றல் படைத்தவர்களையும், தற்பெருமை கொண்ட சேர்ச்சில், ரூஸ்வெல்ட் மற்றும் படைத்தந்திரோபாயங்களில் தங்கள் கருத்தைக் கொண்டிருக்கும் படைத்தளபதிகளையும், தனது படையினரான மக்ஆர்தர், பற்றன் போன்றவர்களையும் ஒன்று சேர்க்கும் நடுநாயகமாக அவர் விளங்கினார். இருந்தும் தனியான அதிகாரமிக்க படைத்தளபதியாக ஜோர்ஜ் மார்சல் அவர்கள் விளங்கினார்.

சுயமாக பதவியுயர்ச்சி பெறுவதை அவர் வெறுத்தார். நீர் மற்றவர்களுக்கு மதிப்புக்கொடுத்தால், பலநிலைப் பண்புகள் நிறைந்த ஒருவருக்கு என்ன கொடுக்கலாம் என்பதற்கு ஒரு முடிவே இல்லை என்பது மார்சல் அவர்கள் அடிக்கடிகுறிப்பிட்டு வரும் ஒரு கருத்தாகும். இதை அவர் கூறியிருப்பார் என்பது நிச்சயமற்றதாகவிருந்தாலும் அதை அவர் பின்பற்றி வந்தார்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

ஐரோப்பா மீதான படையெடுப்புக்காக நேச நாட்டுப் படைகளின் தலைமைத் தளபதியைத் தெரிவு செய்ய வேண்டியிருந்த நேரத்திலேயே அவரின் குறிப்பிடத்தக்க பண்பு வெளிப்பட்டது. அதிகமாக சேர்ச்சில் தொடக்கம் அமெரிக்கப் படையிலுள்ளோர் அனைவரும் ஜெனரல் மார்சல் அவர்களே அதற்குப் பொருத்தமானவர் என நினைத்தனர். அமெரிக்க சனாதிபதி ரூஸ்வெல்ட் அவர்கள் கூட அவரைச் சிபார்சு செய்யும்படி நெருக்குதல் கொடுத்தபோதும் பொதுமக்கள் கட்டுப்பாட்டில் தளராநம்பிக்கை கொண்ட ஜெனரல் மார்சல் அவர்கள் தனது சார்பில் சிறு முயற்சியேனும் மேற்கொள்ள மறுத்து விட்டார். அத்துடன் சனாதிபதி சுதந்திரமாகவே ஒரு தெரிவைச் செய்தல் வேண்டும் என்பதையும் வற்புறுத்தினார். தான் நன்றாக வாசிங்டனில் ஜெனரல் மார்சலுடன் உறங்கப் போவதாகச் சனாதிபதி ரூஸ்வெல்ட் அவர்கள் கூறினார். அதனால் ஜெனரல் ஐசனோவர் நோர்மண்டிப் படையெடுப்புக்குத் தலைமை தாங்கவேண்டி ஏற்பட்டது. அதைப் பற்றி எவ்வித வருத்தமும் தெரிவிக்காத ஜெனரல் மார்சல் தனது உதவியாளரின் வெற்றியை விமரிசையாகக் கொண்டாடினார்.

''நீங்கள் சரியான வார்த்தையைப் பிரயோகித்தாலே ''ஜெனரல் மார்சல் அடக்கமாக விருப்பார். ''மற்றெல்லோரையும் விடத்திறமாகப் படைகளையும், போரையும் நடத்தும் தனது திறமையில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்'' எனத்திரு போரஸ்ற் போக் கூறுகின்றார். 1950ம் ஆண்டுகளின் தொடக்கத்தின் வலதுசாரிக் குடியரசுக் கட்சியினராலும், ஜோய்மக்கார்தி போன்றவர்களாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டபோது அதை எதிர்த்துப் பேசுவதற்குப் போதிய துணிவு அற்றவராக அவர் காணப்பட்டார்.

ஜெனரல் மார்சல் இன்றிருந்திருந்தால் தனது செயல்களில் இலகுவாக வெற்றி பெற்றிருப்பாரா? சந்தேகமே இல்லை என்னும் திரு.போக் இந்தக் காலத்தின் போது ''சிறப்புற விளங்கும் கணத்தில் ஏற்படுகின்ற உணர்வுகளுக்கான தொலைக்காட்சியின் விருப்பார்வங்களையும், தேர்தலில் எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருப்பதையும் பொதுச் சேவை பற்றி எதிரான பறை சாற்றல்களையும் இகழ்ச்சி சய்திருப்பார்'' எனக்கவலைப்படுகின்றார்.

அவர்கள் அரசியல்வாதிகளாகவோ அல்லது படைத்தலைவர்களாகவோ அல்லது விளையாட்டு வீரர்களாகவோ யாராகவிருந்தாலும், நாங்கள்பழக்கப்பட்டது போன்று அவர்களைச் செய்யாதிர்கள் என அமெரிக்கர்களுக்கு

[library stamp]

எடுத்துரைக்கக் கூடிய ஒரு தடுக்க முடியாத தூண்டுதல் அங்கு இருந்துவருகின்றது. அந்த மன நிலைக்கேற்ப 1988 ஆம் ஆண்டு அமெரிக்க அரசியல் பற்றி ''பெரிய மனிதர்கள் ஏன் சனாதிபதியாகத் தெரிவு செய்யப் படுவதில்லை'' என்னும் தலைப்பில் பிறைஸ் பிரபு அவர்கள் எழுதிய பிரசித்தி பெற்ற கட்டுரையை நினைவு கூர்வது நல்லதாகும். அடுத்த 60 ஆண்டுகளில் அமெரிக்காரெடிரூஸ்வெல்ட் வூட்றோ வில்சன், பிராங்ளின் ரூஸ்வெல்ட், ஹரிட்ருமன் போன்ற சனாதிபதிகளைத் தெரிவு செய்தது.

அதேவேளை ஜோர்ஜ் மார்சல் அவர்களும் அங்கு அடிவானத்தில் இருக்கின்றார். அவர் அப்படியே இருக்கின்றார் என நம்புவோமாக.

## சூரியனைக் காண முடியாது

*குளிர் காலத்தின்போது துருவப் பகுதிகள் மிகக் குளிர்ந்து இருக்கும். அங்கு சிலமாதங்கள் சூரியனைத் தொடர்ந்து காண முடியாது. அப்போது வறண்ட குளிர் காற்று அந்தப் பகுதியிலிருந்து தெற்கு பகுதிநோக்கி வீசத்துவங்கும். ஆகையால் தென்பகுதிகளில் வானிலை, வெப்பநிலை மற்றும் பகல்பொழுதின் அளவும்மாறுபடத் துவங்குகின்றன. பூமத்திய ரேகையை ஒட்டிய வெப்பமண்டல பிரதேசங்களில் நிலவும் வெப்ப நிலையில் அதிக மாறுதல் ஏற்படுவதில்லை. ஆனால் மழைபொழிவின் காரணமாக சிலபகுதிகள் ஈரமிக்கதாகவும் மற்றவை வறண்டும் காணப்படும்.*

## பூமியின் சுழற்சி

*பூமி சுழல்வதால் வானில் உள்ளவை நகருவது போல தோற்றமளிக்கின்றன. பூமியானது வடக்குத்தெற்கு அச்சில் சிறிதுசாய்ந்து மேற்கிலிருந்து கிழக்காகச் சுழல்கின்றது. இந்த அச்சில் உள்ளவற்றை நாம் எப்பொழுதும் காணலாம். ஆனால் கிழக்கு மேற்காக உள்ளவற்றை நாம் ஒரு நாளில் பாதிநேரம் தான் காண இயலும். எடுத்துக் காட்டாக வடதிசையிலுள்ள துருவ நட்சத்திரம் அதிகம் நகருவதில்லை, மாறாக கிழக்கில் தோன்றும் வியாழன், வெள்ளி போன்ற கோள்கள் வேகமாக நகருவதைக் காணலாம்.*

PUBLIC LIBRARY
JAFFNA.

# சமாதானத் தீர்வென்ற வாக்குறுதி வேற்றுமைகளைத் தீர்க்குமா?

— ராம் மாணிக்கலிங்கம்
(சண்டே ரைம்ஸ் – 16.10.1994)

இலங்கையின் நீண்டகாலப் பிரச்சனைக்கு சமாதானத் தீர்வென்பதற்கும் சண்டை தொடாவதற்கும் இவ்வளவு தூரம் வேறுபாடுகள் முன்னர் எப்போதும் இருந்ததில்லை. நாட்டில் நன்மை ஏற்பட்டுச் சமாதானம் நிலவும் என்ற நம்பிக்கை பொதுவாக உருவாகியுள்ளது. இருந்தும் வன்செயல்கள் நீடிக்கின்றன.

மக்கள் முன்னணி சமாதானத்தை முன்வைத்துப் பதவிக்கு வந்தது. எந்த விதத்திலும் (சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு) போரை நிறுத்துவோம் எனவாக் குறுதியும் தந்தது. புலிகளும் அரசியல் தீர்வொன்றிற்கு விருப்பம் தெரிவித்து போர் நிறுத்தம் செய்துள்ளனர்

மக்கள் முன்னணி அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தங்கள் தங்கள் பகுதிப் பேச்சாளர்களை நியமித்து ஐப்பசிமாதம் 13, 14ம் நாள்களில் பேச்சுக்கள் நடத்த உத்தேசித்தும் இருந்தனர். அதே நேரத்தில்புலிகள் புரட்டாதி 19ம் நாள் சாகரவர்த்தனா என்ற கப்பலைத் தாக்கினார்கள். புரட்டாதி மாதம் 25ம் நாள் அரசாங்கப் படையினர் ''ஒப்பரேசன் ஜெயகந்த என்னும்போர் நடவடிக்கையைச் செயல்படுத்தினர். புரட்டாதிமாதம் 28ம் நாள் பன்னிரெண்டு படையினர்

110424

கிழக்கு மாகாணத்தில் கொல்லப் பட்டனர்.

சமாதான வாக்குறுதிக்கும் சண்டைக்கும் இடையில் உள்ள தூரம் காலவரையின்றித் தொடர முடியாது. இதற்கு இரண்டில்ஒரு வழிகளில் தீர்வு காணவேண்டும். சண்டை கூடிக்கொண்டு போவது சமாதானத்திற்கான சாத்தியக் கூற்றை இல்லாமல்செய்யும். அல்லது சமாதான வாக்குறுதி சண்டையின் தீவிரத்தை குறைக்கலாம். மக்கள் முன்னணி அரசாங்கம் அல்லது புலிகள் ஆகிய இரண்டில் ஒரு பகுதியினர் அடுத்த சில வாரங்களில் எந்தப் பக்கம் எதைச் செய்தாலும் வரக்கூடிய விளைவுகளில் அரசாங்கமோ புலிகளோ செல்வாக்கைப் பெறுவர்.

## சண்டைக்குச் சார்பானவர்கள்

தமிழராக இருந்தாலும் சரி சிங்களவர்களாக இருந்தாலும் சரி சண்டை தொடர வேண்டும் என்று நினைப்பவர்கள் இந்தச் சிக்கல் தீவிரமாகவேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் மற்றப் பகுதியினால் ஏற்படும் எந்த ஒரு தாக்குதலையும் வரவேற்கிறார்கள். அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சமாதானம் என்பது ஒருமாயை என்றும்சமாதான உடன்பாட்டை ஒரு போதும் அடைய முடியாதென்றுக் கட்டிக்காட்டிக் கொள்வார்கள்.

நுகேகொடைச் சந்தியில் நடைபெற்ற எம். ஈ. பியின் கூட்டம் சிங்களத்தீவிர வாதிகளின் இந்த நிலைப்பாட்டை சுருக்கமாகஎடுத்துக் காட்டியுள்ளது. ஜனாதிபதி ஒழுங்கு முறையான தேர்தல் பிரசாரத்தில் எம். ஈ. பி. தனது நிலைப்பாட்டை இனப் பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நடவடிக்கைகளைத் தாக்கிக் காட்டியுள்ளனர். எம். ஈ. பியின் திருமுனை வாதம் என்னவென்றால் தமிழ்ப் பிரச்சனை எதுவுமில்லை பயங்கரவாதப் பிரச்சனை தான் உள்ளது. மேலும் பயங்கரவாதிகளுடன் ஒரு போதும் எந்த விதமான பேச்சு வார்த்தைகளும் வைக்கக் கூடாது என்பது தான் என்றுகூறினார்கள். இதன் உட்கருத்து என்னவென்றால் சண்டையே செய்யுங்கள் சமாதானம் தேவையில்லை என்பதாகும்.

தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வியின் பின் எம். ஈ. பி. யினர் அரசியலில் இருந்து ஓரம் கட்டப்பட்டு விட்டனர். ஆனால் இருபகுதியினரினதும் தாக்குதல்கள் குறையாமல் தொடர்ந்தால் அரசியலில் இவர்களின் கை ஓங்கிவிடும். இருபக்கத்துத்தீவிரவாதிகளையும் தங்கள் இராணுவத் தாக்குதலைப் பயன்படுத்தி சமாதானத் தீர்விற்கு குந்தகம் செய்ய விரும்புவதை அரசாங்கம்அனுமதிக்கக்கூடாது. இதனால்தான் உடனடியாக தீவிரமான நடவடிக்கை எடுத்து மனிதாபிமானத்துடன் இந்தச் சிக்கலுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

## சமாதானத்திற்குச் சார்பானவர்கள்

சண்டை முடிவிற்கு வர வேண்டும் என விரும்புகிறவர்கள் உடனடியாகப் போரை நிறுத்திச் சிக்கலுக்குத் தீர்வுகாண விரும்புகிறார்கள். அவர்களுடைய எண்ணம் நேர்மையானது. அவர்களுடைய நோக்கம் போற்றக் கூடியது. ஆனால் சமாதானம் அற்ப ஆயுள்உடையதும், முறியக்கூடியதுமான போர்நிறுத்தத்தினால் பெறக்கூடிய ஒன்றல்ல. அது நிரந்தரத் தீர்வை நோக்கி கஷ்டமான பேச்சு வார்த்தைகள் மூலமாகத்தான் பெறவேண்டிய ஒன்றாகும். குண்டுகள் பாய்ந்து கொண்டிருந்தாலும் சரி அதனால் பாதிக்கப்படாது சமாதானப் பேச்சுக்கள் மூலம் சமாதானத்தை அடைய வேண்டும்.

எனவே போரை எதிர்ப்பவர்களும் சமாதானத்திற்காக அவசியத் தீர்வு காணவேண்டும் என்பவர்களும் தேசிய நம்பிக்கையைப் பலப்படுத்தக் கூடிய யதார்த்தமான ஒழுங்குகளைச் செய்து இராணுவ நடவடிக்கைகள் ஆற்றதாக்கி குடியியல் சமுதாயக் குழுக்களின் பங்குபற்றல்களைக் கூட்டி சமாதானத்திற்கான அரசியல் சூழ்நிலையை உருவாக்க வேண்டும.

போருக்கு எதிராக 29ஆம் நாள் முன்னணியினர் நுகேகொடைச் சந்தியில் நடத்திய கூட்டம் இந்த நிலைகளைத் தெளிவுபடுத்துவதில் அர்த்த புஷ்டியுள்ள வழிகளை நோக்கிச் சென்றது. இச்சிக்கல் பற்றிய பேச்சு வார்த்தைகளில் மூன்று விடயங்கள் பின்னிப் பிணைந்துள்ளதாக வாசுதேவ நாணயக்காரா வாதிட்டார்.

முதலாவது தமிழ்மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் (கவரும் சக்தி) உண்டாக்குவது, இரண்டாவது அதிகாரப் பரவல் பற்றிய தமிழருடைய நியாயமான கோரிக்கைகளில் கவனம் செலுத்துதல் மூன்றாவது புலிகளின விடயத்தைக் கையாளல் என்பனவாகும். திரித்திருக்கும் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்து பேச்சுவார்த்தை நடத்தினால் தான் நிரந்தர சமாதானத்தை அடைய முடியும். வாசுதேவ நாணயக்காரவின் வரவேற்கக் கூடிய சக்தி வாய்ந்த பேச்சு, வாய்ப் பேச்சளவில் அல்லாமல் போரை நிறுத்துவதற்குரிய அமைதியான ஆழமான கொள்கைகளைக் கொண்டுள்ளது.

## அமைதியின் தோல்வி

'சாகரவர்த்தனா' தாக்கப்பட்டது மக்கள் முன்னணி அரசாங்கத்திற்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் ஒரு அதிர்ச்சியாகத் தான் இருந்தது. பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்தின் ஈடுபாட்டைக் கூட்டுவதைத் தவிர

இத்தாக்குதலுக்கு உடனடியாக அரசினால் வேறு பதில்கள் கொடுக்கப்படவில்லை என்பது ஆச்சரியப் படுவதற்குரிய விடயம் அல்ல. இந்த வலியுறுத்தல் முயற்சி வரவேற்கக் கூடியது. ஆனால் தொடர்ந்து வந்த புலிகளின் கூற்றுப்படி அரசாங்கம் ஒருயுத்த நிறுத்தம் கொண்டு வரவேண்டும் என்பதற்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டது என்பதற்கு இது போதிய பிரதிபலிப்பைத் தரவில்லை.

இந்த அமைதிவழியிலான திகில் இல்லாது போர் நிறுத்தத்திற்கான வழி இவ்வாறு சிக்கலைக் கூட்டுவதனாலல்ல அதற்குச் சரி மாறான நடவடிக்கைகள் எடுப்பதினாலாகுமென அரசாங்கம் வெட்ட வெளிச்சமாகப் புலிகளுக்குக் கூறவேண்டும்.

அரசாங்கம் இந்தச் சிக்கலைக் குறைப்பதற்குரிய புலிகள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பகிரங்கமாகக் கூறியிருத்தல் வேண்டும். போர் நடவடிக்கைகளைக் குறைத்து மனிதாபிமானத்துடன் அரசியல் பேச்சுவார்த்தைகளையும் நடத்தி எல்லோருடைய நன்மைக்காகவும் சண்டையை முடிவிற்குக் கொண்டு வரவேண்டும் என்று அரசாங்கம் விடயத்தை தெளிவாக்கியிருக்க வேண்டும்.

## யுத்த நிறுத்தம்

வட அயர்லாந்தில் அயர்லாந்துக்குடியரசுப்படை (ஐ ஆர். எ) எப்படி ஒருபக்கமாக போர்நிறுத்தத்தைக்கையாண்டு சமாதானத்திற்கான தங்களுடைய நிலைகளை வெளிப்படையாகக் காட்டினார்களோ அப்படிப் புலிகளும் உறுதியான நடவடிக்கைகள் எடுத்து தங்கள் நிலைகளைக் காட்டிக்கொள்ளலாம். புலிகள் ஒருபக்கமாக தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தலாம். பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய தாக்குதல்களைத் தவிர்க்கலாம், சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்து வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மக்களைச் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கலாம். இப்படியான நடவடிக்கைகளை எடுத்தால் புலிகள் அரசாங்கத்திடம் பொறுப்பைக் கொடுப்பர் மாத்திரமன்றி புலிகள் வன்செயலைக் கைவிட்டால் ஒரு தீர்வு வரும் என்று சொல்பவர்களுடைய அபிப்பிராயத்தையும் மாற்றுவதாக இருக்கும்.

## மக்கள் முன்னணி

### அரசாங்கம்

எப்படி புலிகள் ஒரு பக்கமாகச் சார்பாக இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளைக் குறைக்கிறார்களோ அரசாங்கமும் அப்படிச் செய்யலாம். அரசாங்கம் ஒருபக்கமாக தாக்குதல் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தத் தீர்மானிக்கலாம். அத்துடன் குண்டு போடுதல் எறிகணைத் தாக்குதல் நிறுத்தல் பொது மக்களைப் பாதிக்கக்

கூடிய இடங்களை தாக்குதல் போன்றவற்றை நிறுத்தலாம். வடக்குக் கிழக்கிலுள்ள பொது மக்களின் வேதனைகளையும் துன்பங்களையும் இலகுவாக்குவதற்கு அரசாங்கம் ஒரு பக்கமாகப் பலவிதமான நடவடிக்கைகளை எடுக்கலாம். வடக்கிற்கும் கிழக்கிற்கும் உள்ளூர் வெளியூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் மருத்துவ மனிதாபிமான உதவிகளைத் தொடங்குவதற்கு வசதி செய்யலாம். இன்னும் மேலாக பொருளாதாரத் தடையைத் தளர்த்தி உணவு உடை போன்ற அடிப்படைத் தேவைகளையும் துவிச்சக்கர வண்டி வானொலி தொலைக்காட்சி போன்ற உற்பத்திப் பொருட்களையும் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கலாம்.

இருபக்கமும் மக்களின் அடிப்படைத் தேவைகளையும் அவர்களின் தாராளமான போக்குவரத்துக்களையும் ஏற்றுக் கொண்டால் அரசாங்கம் வவுனியாவிற்கு அப்பால் உள்ள புகையிரதப் பாதையைத் திருத்தும் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இருபகுதியினரும் ஆயுதங்களுடன் பிரவேசிப்பதைத் தடுக்கும் சமாதான வலயங்களை உருவாக்கலாம். ஒரு நிறுவனத்தையோ ஒரு வட்டாரத்தையோ எல்லையாகக் கொண்டு ஆயுதபாணிகளான இருபகுதியினரையும் செல்லக்கூடாத இடங்களாகத் தடைசெய்யலாம்.

உதாரணமாக வைத்தியசாலைகள் பள்ளிக்கூடங்கள் முதலிய இடங்களில் படை முகாம்களைக் கட்டவோ அல்லது இருபகுதியினரையும் ஆயுதபாணிகளாக இவ்விடங்களுக்குள் நுழையவோ அனுமதியற்ற பிரதேசங்களாகப் பிரகடனப் படுத்தலாம். இதே போல் உள்ளூர் பிரதேசங்கள் கிராமசபை நகரசபை பிரதேச சபை எல்லைகளும் ஆயுதபாணிகளாக இருபகுதியினரும் பிரவேசிப்பதை தடை செய்யும் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தலாம். இவற்றைப் பொது ஜன நிறுவனங்களோ அல்லது அனைத்துலக நிறுவனங்களோ கண்காணிக்கலாம்.

யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தைக்குத் தேவை என்ற நிபந்தனையை வலியுறுத்தாமல் இருப்பது ஒரு நல்ல விடயமாகும். பேச்சுவார்த்தை நடக்கும் காலத்தில் உறுதியான நிலைமையை உருவாக்க இந்நிபந்தனையை ஏற்காமல் இருக்கும் அரசாங்கத்தின் தீர்மானமும் ஒரு நல்ல விடயமாகும். இருந்தும் அரசாங்கம் போர் நிறுத்தம் கோருவதற்குக் கூறிய இரண்டு காரணங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். ஒன்று பாதுகாப்பிற்கான உத்தரவாதம் இரண்டாவது பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலையை உருவாக்குவது. தமிழர்கள் தங்களுடைய துயரங்களுக்கு விரைவான முடிவையே விரும்புகிறார்கள்.

இந்த நடவடிக்கைகள் மக்கள் முன்னணி அரசாங்கத்திற்கும் தமிழ்மக்களுக்குமிடையிலும் அதேபோல் புலிகளுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலும் நம்பிக்கையை உருவாக்க பெருமளவு பயன்படும். அத்துடன் இருபக்கத்தினருக்கும் குறைந்த அளவு பாதகாப்புடன் எவ்வித தாக்கமும் இல்லாத பேச்சு வார்த்தைக்குரிய சூழலை உருவாக்கும். ஆனால் இந்த நடவடிக்கைகளில் மிகவும் சக்திவாய்ந்தது என்ன வென்றால் மற்றப் பகுதி என்ன செய்கிறார்கள் என்பதைச் சிந்திக்காமல் ஒருதலைப்பட்சமாக இந்த நடவடிக்கையை எடுப்பதாகும். இந்த நடவடிக்கைகளில் யார்முந்துவார்களோ?

இதை எழுதியவர் தற்போது மசாசுசெற் தொழிநுட்பக் கல்லூரியில் அரசியல் விஞ்ஞானப் பகுதி விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். வடக்குத் தெற்கிலுள்ள இருபக்கத்து அரசியல்வாதிகளுடன் சேர்ந்து படையினரை எதிர்த்தமைக்காக 1986 – 1988 வரையான காலப் பகுதியில் சிறை வைக்கப்பட்டிருந்தார். பின் 1987 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அளிக்கப்பட்ட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார்.

# ஒக்சிஜனை வெளிவிடுகிறது

மரம் சுவாசிக்கும் போது காற்றிலுள்ள ஒக்சிஜனை எடுத்துக்கொண்டு கார்பன்–டை–ஒக்சைடை வெளிவிடும். மரத்தின் பச்சை இலைகள் பகலில் ஒளிச்சேர்க்கை நடத்துகின்றன. ஒளிச்சேர்க்கையின் போது கார்பன்–டை–ஒக்சைடை உள் எடுத்துக்கொண்டு ஒக்சிஜனை வெளிவிடும். சுவாசத்துக்கு தேவையான ஒக்சிஜனைவிட அதிகமான அளவு ஒக்சிஜனை ஒளிச்சேர்க்கையின் போதுமரம் வெளிவிடுவதால் பகலில் மரத்தின் கீழ் படுத்து பயனடையலாம்.

இரவில் ஒளிச்சேர்க்கை நடக்காது; சுவாசித்தல் மட்டும் நடக்கும். அதனால் இரவில் மரத்தின் கீழ் படுத்தால் ஒக்சிஜன் பற்றாமையால் எமக்கு மூச்சுத்திணறும். உடம்பு வலிக்கும் இல்லாதபேயை இதனோடு சம்மந்தப்படுத்திப் பேசுவதை நீங்கள் கேட்டிருப்பீர்களே!

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# மகாநாட்டு அறையிலிருந்த ஈழக்கொடி

**ம**காநாட்டு அறையில் தமிழீழக்கொடி வைக்கப்பட்டிருந்தது பற்றி 16.9.94 ஞாயிறு ஐலண்ட் பத்திரிகையின் ஆசிரியர் தலைப்பில் வெளியான கட்டுரையைப் பார்த்த போது வேடிக்கையாக இருந்தது. இந்த ஈழக்கொடி தூதுக் குழுவினருக்கான மேசையில் வைக்கபபடவில்லை உண்மையில் அது அறையின் மூலையில் ஒரு ஆதாரத்தின் மேலதான் வைக்கப்பட்டிருந்தது.

அரசாங்கத் தூதுக்குழுவினர் இது தேவையற்ற விஷயம் என்பதால் உண்மையில் அதைத்தவிர்த்துக் கொண்டனர். உங்களைப் போன்று பேச்சளவில் சமாதானம் பற்றிக்கூறிக்கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னரே சிறு தவறுகளை எல்லாம் பெரிதுபடுத்திக் காட்டும் நீங்கள் தூதுக் குழுவினர் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள்? மகாநாட்டு அறையிலிருந்து அது அகற்றப்படும் வரை தூதுக்குழுவினர் பிடிவாதமாக வெளியேஇருத்தல் வேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்களா? இது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு முன்னரே அதற்கு முட்டுக்கட்டை போடுவது போலல்லவா இருக்கும்.

இவ்வாறான சிற்சில விஷயங்களை எல்லாம் கருத்தில் கொள்வதனால் விடுதலைப் புலிகளின் காவல் துறையினர் திரண்டிருந்த சனத்திரளைக் கட்டுப்படுத்தியதையும், விடுதலைப் புலிகளின் படையணியினர் சிலர் ஆயுதம் தாங்கித் தூதுக் குழுவினருக்குப்

பாதுகாப்பு வழங்கியதையும் நீங்கள் கவனத்தில் எடுக்கவில்லையா?

இவைகள் தனி நாட்டுக்கான அம்சங்களல்லவா? இவற்றை எல்லாம் இந்த நாட்டவர் அனைவரும் ஏன் முழுஉலகமுமே கண்டுள்ளார்கள்.

இலங்கையின் ஆயுதப் படையினரும் விமானப் படையினரும் யாழ்ப்பாணத்திலுள்ள கட்டிடங்களுக்கும்வீடுகளுக்கும் சேதத்தை உண்டாக்கியிருப்பதையும் இலங்கையின் மக்களில் ஒரு பகுதியினருக்கு இழைக்கப்பட்ட தீங்குகளையும் தொலைக்காட்சிச் சேவையில் நீங்கள் கூடக்கண்டிருப்பீர்கள். சாதாரணமான சிங்கள மக்களோ இவற்றைக் கண்டுஅதிர்ச்சி அடைந்திருப்பர். இவ்வாறு நடைபெற்றுள்ளதா என ஆச்சரியமும் திகிலும் அடைந்திருப்பர். பல வருடங்களாக நடந்து வரும் இக் கொடுமைகளை நிறுத்துங்கள் அம் மக்களை வாழ விடுங்கள் என்று ஒரு ஆசிரியர் தலைப்பிலாவது நீங்கள் எழுதியுள்ளீர்களா? உங்களுடைய பார்வையில் வட பகுதியிலுள்ள மக்களெல்லோருமே புலிகளாகத் தான் தோற்றுவர். அவர்கள் எல்லோருக்கும் தண்டனை வழங்க வேண்டுமென்பதே உங்கள் கருத்தாக இருக்கும்.

என்றோ ஒரு நாள் வடமாகாணம் ஆயுதப் படையினரின் கைகளுக்கு வரும்என்னும் மயக்கத்தில் சிலர் இருக்கின்றனர் இந்த மயக்கம் உங்களைப் போன்ற சிலருக்கும் ஆயுதப் படையிலுள்ள சிலருக்கும் மட்டும் தான் இருக்கின்றது. ஆனால் பொறுப்புள்ள மக்கள் சிலர் நிலைமையை நன்கு உணர்ந்து வருவதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றார்கள். இந்நிலை தேசத்திற்கு நன்மை பயக்கும் ஒன்றாகும்.

## பத்திரிகை ஆசிரியரின் குறிப்பு

நாங்கள் திரு. துரைராஜாவின் கடிதத்தைக் கண்டு அவரைப் போலவே வியப்படைந்தோம். அக்கடிதம் முழுமையாக இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஞாயிற்றுக் கிழமை வெளியான பத்திரிகையில் வெளிவந்த படத்தில் காணப்பட்டது போலவே தமிழீழக் கொடியும் அதன் ஆதாரமும் பேச்சு வார்த்தைகள் நடந்த இரு மேசைகளுக்கிடையே காணப்பட்டன. எழுத்தாளர் கூறுவது போல மூலையில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

திரு. துரைராஜா போன்றவருக்கு இது ஒரு சிறு விடயமாக இருக்கலாம். ஆனால் ஒன்றுபட்ட இலங்கை என்ற கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருப்பவர்களுக்கு ஒரு பிரிவினைவாதக் கொடியையோ அல்லது பொய்மையான ஒரு பிரதேசத்தையோ ஏற்க முடியாது. அநுபவமிக்க பேச்சாளரொருவர் அங்கிருந்தி

ருந்தால் புலிகளின் குறும்புத்தன மான விளையாட்டுக்களையும் அவர்களின் மரியாதை அணி வகுப்புக்களையும் ஏற்றிருக்க மாட்டார், அகற்றும்படியே கோரியிருப்பார். இவற்றைத் திரு துரைராஜா ஒரு தன்னாட்சிக்கான அறிகுறிகள் என்கிறார்.

திரு. துரைராஜா ஜலனட் பத்திரிகைகளைத் தொடர்ந்து வாசித்து வந்திருந்தால் யாழ்ப்பாண மக்களுக்காக அநுதாபப்பட்டு எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கங்களையும் கட்டுரைகளையும் பார்த்திருப்பார். யுத்த அழிவுகளுக்கான பொறுப்பை எவர் மீதும் சுமத்த முடியாது.

நாங்கள் சமாதானத்தை விரும்புகின்றோம். ஆனால் அதை என்ன விலை கொடுத்தோ நாட்டின் தனித்துவத்தை விற்றோ பெறப் போவதில்லை.

நாங்கள் அனைத்திலங்கையில் சகல இனத்தவரும் எல்லா வித உரிமைகளும் பெற்று வாழவேண்டுமென்றே விரும்புகின்றோம். ஆனால் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக் கூறிக் கொண்டு ஆயுத முனையில் அவர்களை வைத்திருக்கும் குழுவினருக்கு நாங்கள் பலியாக மாட்டோம்.

# கனவு ஏன் ஏற்படுகிறது?

கனவு ஏற்படுவதற்கு அறிவியல் பூர்வமான வரையறை ஒன்றும் இதுவரை சொல்லப்படவில்லை. பல அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர்.

ஒருவனது கடந்த கால அனுபவத்தின் அடிப் படையிலேயே கனவு அமைகிறது.

தன்னை அறியாமல் உள் மனத்தின் ஆழத்திலே புதைந்து கிடக்கும் சில ஆவல்களின் உருவகக் காட்சியே கனவு.

கூடும் அசதியினாலோ, உடல் நிலை பாதிப்பானாலோ கனவு ஏற்படுகிறது.

பகலில் ஏற்படும் பலவித உணர்ச்சிகள், செயல்கள் முறையில் பதிவு செய்யப்பட்டு இரவு தூக்கத்தில் கனவு என்ற வடிகாலின் மூலம் இவற்றிற்குத் தீர்வு காணப்படுகிறது.

சில அறிஞர்கள் கனவுகள் எதிர்காலத்தில் நடக்க சாத்தியமாக இருப்பனவற்றை உள்ளுணர்வால் உணர்த்துகிறது எனக்கருதுகிறார்கள்.

# விடுதலைப் புலிகள் தமிழருக்கு தன்னாட்சி அதிகாரங்களை நாடுகின்றனர்

— பிரபாத் சகாபந்து
(ஐலன்ட் 30.10.94)

*ஞாயிறு இரவு இடம் பெற்ற கொலைச்கு சில மணித்தியாலங்களுக்கு முன்பு எம்மைக காண வந்த விடுதலைப் புலிகளிடம் தமிழ் ஈழத்துக்குப் பதிலாக எதை ஏற்றுக் கொள்ளுவீர்கள் என வினாவியபோது "தமிழ் மக்களுக்கான தன்னாட்சி அதிகாரங்கள்'' எனப் பதிலளித்தனர். அத்துடன் சமஷ்டி அமைப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும் கூறினார்கள் ஆனால் அதற்கு தன் ஆட்சி அதிகாரங்கள் இருக்கவேண்டும் என அழுததிக் கூறினர். ஏனெனில் தனைாட்சியின்றி எந்தத் தீர்வும் பயனுடையதாக அமையாது என அவர்கள் கருதியிருக்கலாம்.*

காமினி திசநாயக்காவின் கொலை பற்றிய செய்தியை அறிந்த பொழுது நாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தோம். விடியற்காலை 5.45 மணியள வில் சுபாஸ் உணவகத்தின் சொந் தக்காரர் எங்கள் அறைக்த வந்து "காமினி கொலை செய்யப்பட்டுள்ளார்'' எனக் கூறினார் அவர் இந்திய வானொலி அறி வித்ததைக் கேட்ட பின்னரே அவ்வாறு கூறினார்.

முதலில் நாங்கள் திகைப் படைந்தோம். பின்பு சிறீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்

KOHA-JPL

செய்தியில் இந்தச் சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டது. இதே நாளில் (24ம் நாள்) இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெற இருந்தன. ஆனால் பேச்சுவார்த்தைக்குத் தூதுக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வரமாட்டார்கள் என்பதைப் பின்பு அறிந்தோம்.

இந்த அறிவித்தலின் பின் யாழ்ப்பாணத்தில் தங்கி இருப்பது தேவையற்றதாகி இருந்தது. அத்துடன் கொழும்புடன் தொடர்பு கொள்வதற்கும் முடியாதிருந்ததினால் உலகத் தொடர்புகள் அற்றவைகளாகவே இருந்தோம்.

7 மணியளவில் விடுதலைப்புலிகள் இருவர் எங்களிடம் வந்து காமினியின் கொலை பற்றி அதிகார பூர்வமாக எவ்வித அறிவித்தலும் தங்களுக்கு வரவில்லையென்றும் இக்கொலை பற்றி எவ்வித கருத்தும் இன்னும் கூறுவதற்கில்லையெனவும் நாம் வற்புறுத்திக் கேட்டபொழுது சொன்னார்கள்.

எங்களில் 17பேர் இருந்தோம். நாங்கள் நீண்ட தூரம் பயணம் செய்ய இருந்ததால் காலை உணவை ஏற்கனவே கேட்டிருந்தோம். எங்களுடைய காலை உணவுக்குப் பின் விடுதலைப் புலிகள் திரும்பவந்து காமினியின் கொலை பற்றிக் கதைப்பதற்கு விருப்பம் தெரிவித்தனர்.

''விடுதலைப் புலிகள் தான் இந்தக்கொலைக்குக்காரணமா?'' என குறிப்புகளற்று எங்களில் ஒருவர் கேட்டார். அதற்கு உடனடியாக ''இல்லை எங்களுடைய தலைமைப் பீடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இதைச் செய்யவில்லை எனக் கூறியுள்ளனர்'' என அரசியல் பிரிவைச் சேர்ந்த அவர்களில் ஒருவர் கூறினார். நடந்தது நடந்து முடிந்து விட்டது அதனால் ஏற்படும் விளைவுகள் என்னவாக இருக்கும் எனச் சிந்தித்தோம். இக் கொலையை யார்தான் செய்தாலும் விடுதலைப் புலிகள் தான் குற்றம் சுமத்தப்படுவர் என நாம் சொன்னோம். அத்துடன் இந்தக் கொலைச் சம்பவம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எந்த அளவுக்கு பாதிப்பை உண்டாக்கும் எனக் கேட்டோம். இந்த கேள்விக்கு பதிலளிக்கத் தயாராக இல்லை என விடுதலைப்புலி அங்கத்தவர்கள் கூறினர். ஆனால் சந்தேகமும் நம்பிக்கையற்ற தன்மையும் சமாதானப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை குளப்பக்கூடியதாக அமையலாம் எனக்கருத்துத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகளுக்கு முதல் நாள் எங்கள் விடுதியில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதே விடுதலைப்புலிகளுடன் நீண்ட நேர உரையாடலில் பங்கு பற்றினோம்.

திங்கட்கிழமை அட்டவணைப் படுத்தப்பட்ட பேச்சுவார்த்தை

நடைபெற்றபின் விடுதலைப் புலிகள் எம்மை அவர்களின் அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத்துடனும், அரசியல் துறை அங்கததவர்களுடனும் சந்திப்பதற்கான ஒழுங்குகள் செய்வதாகக் கூறினார்கள். ஆனால் அந்த சந்தர்ப்பம் எமக்கு ஒரு பொழுதும் கிடைக்கவில்லை.

ஆகவே நாம் மற்றைய அரசியல் துறை அங்கத்தவாகளுடன் உரையாடியதை எண்ணி மன நிறைவு அடைய வேண்டியதாக இருந்தது.

ஞாயிற்றுக்கிழமை இரவு காமினியின் படுகொலைக்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்பு எங்களை சந்திக்கவந்த விடுதலைப் புலிகளிடம் உங்களுடைய ஈழக் கோரிக்கையான தமிழர்களின தன்னாட்சிக்குப் பதிலாக என்ன மாற்றுததிட்டத்தை ஏற்றுக்கொள்வீர்கள் எனக் கேட்டோம். அதற்குச் சமஷ்டி அமைப்பை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் ஆனால் தன் ஆட்சி உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அழுத்தமாகக்கூறினார்கள். தன்னாட்சி முறையின்றி எந்தத் தீர்வும் பயனளிக்காது என அவர்கள் எண்ணியிருக்கலாம்.

அத்தகைய தன்னாட்சி அதிகாரங்களோடு கூடிய ஒரு அமைப்பை அரசாங்கம் ஏதோ ஒரு சந்தர்ப்பவசமாகச் சமமதித்தால் அத்தகைய அமைப்பின் கீழ் மற்றைய தமிழ் அரசியல் கட்சிகளினதும், போராளிக்குழுக்களினதும் நிலைப்பாடு எப்படி இருக்கும் என்ற கேள்விக்கு பதில் தருகையில் இந்த தமிழ் போராட்டக் குழுக்களுக்கும், தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் வடக்கு மாகாணத்தைப் பொறுத்த அளவில் எவ்வித மக்கள் ஆதரவும் இல்லை எனத் தெரிவித்தனர்.

ஆனால் ஈழப்போர் ஆரம்பித்த காலங்களில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் இயக்கம் ஒரு பலம் வாய்ந்த இயக்கமாக இருக்கவில்லை. அன்று வேறு பல அமைப்புக்கள் விடுதலைப் புலிகள இயக்கத்தை விட அரசியல் ரீதியாகவும், இராணுவரீதியாகவும் பலம் வாய்நதவைகளாக இருந்தன. அதாவது எந்த ஒரு இராணுவ அமைப்பும் எப்பொழுதும் நிரந்தரமான அதிகாரத்தில் இருக்கும் என்பதற்கான உறுதிப்பாடு இல்லை. அத்தகைய அமைப்பொன்று எவ்வளவு சக்தியுடன் இருந்தாலும் கூட இன்று இராணுவ அரசியல் ரீதிகளில் மற்றவர்களில் தங்க வேண்டியுள்ளது. ஆனபடியால் இன்றும் அதிகாரத்தில் உள்ள விடுதலைப் புலிகள் நாளையும் இதே அதிகாரத்தோடு விளங்குவர் என்பதற்கு என்ன உறுதிப்பாடு இருக்கின்றது.

இன்றைய நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டு வேறு சில

அமைப்புக்கள் வடமாகாணத்தில் ஆதிக்கத்துடன் தோன்றினால்? எனக் கேட்டபோது

விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்கள் இக் கேள்விகளுக்கு சிரித்து சமாளித்து பதிலளிக்காது இருந்தனர்.

மறுசீரமைத்தல், புனர்நிர்மாணம் போன்ற கேள்விகளை பரிசீலனை செய்யும் பொழுது ஏற்றுக் கொள்ளப்படும் மறுசீரமைப்பு வடக்கில் யாருடைய நிர்வாகத்தின் கீழ் வரும்? விடுதலைப் புலிகள் தங்களின் சொந்த நிர்வாகக் கட்டமைப்பு உள்ளதென்று கூறும்போது இந்த மறுசீரமைப்பு வேலைகளை அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ்நடைபெறுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிப்பார்களா? அல்லாவிடின் அரசாங்கம் இந்த மறுசீரமைப்பு வேலைகளை விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் நடைபெறுவதற்கு அனுமதிப்பார்களா? அரசாங்கம் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் மறுசீரமைத்தல் வேலைகளை அனுமதிப்பதனால் அது அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் பெரிய பின்னடைவாகும். விடுதலைப் புலிகளின் கருத்துப்படி இந்த விடயங்களைப் பற்றி தீர்க்கமான முடிவுகள் இனி எடுக்கப்படவேண்டும் என்கிறார்கள்.

இந்தக் கேள்விகளையும் விடுதலைப் புலிகள் அளித்த பதில்களையும் விட யாழ்ப்பாண மக்களுக்குச் சமாதானம் தேவையாகவுள்ளது என்பது வெளிப்படையாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாண நகரத்தினுள் பொதுமக்களுடன் பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

யாழ்ப்பாண மக்களைப் பொறுத்த வரையில் இன்று அங்கே நடைபெற்று வருகின்ற போர் அவர்களின் அன்றாட வாழ்க்கையுடன் பங்கு கொண்டுள்ளது. ஆனாலும் அவர்கள் சமாதானத்தைக் காண முடியுமென்ற நம்பிக்கையோடு இருக்கின்றார்கள். பொருண்மியத் தடை ஓரளவில் நீக்கப்பட்டு பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு வருவதையிட்டு அவர்கள்மகிழ்ச்சியடைகிறார்கள் ஆனாலும் பொருட்களின் விலைகள் இன்னும் அவ்வாறாகவே இருப்பதைத் தெரிவித்தார்கள்.

இந்த நிலைப்பாட்டைத் தவிர்க்கவேண்டும் என்றால் யாழ்ப்பாணத்திற்கு தரை வழியாக பாதையொன்றைத் திறந்துவிட வேண்டும் அதன் பிரகாரம் பிரயாணத்தினால் ஏற்படும்செலவுகளும் குறைக்கப்பட்டுத் தரகர்களின் கூலிகளையும் இல்லாது தவிர்க்கலாம் என்னும் தீர்வை அவர்கள் கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

சமாதானம் பேச்சுவார்த்தைகள் தொடங்கியதையிட்டு பொதுமக்கள் சந்தோசப்படுகிறார்கள். மக்களில் சிலர் எம்முடன் சுதந்

திரமாகக் கதைத் நம் சந்தர்ப்பம் கிடைத்தது

நாங்கள் மக்களுடன் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுது சில விடுதலைப் புலிகளும் மக்களுடன் இருந்து எங்கள் பேட்டியை தொலைக் காட்சி மூலம் எடுத்தார்கள். தொலைக் காட்சி சாதனங்கள், படம் பிடிக்கும் கருவிகளைக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் தமது தொழிலில் கை தேர்ந்தவர்களாவர். அவர்கள் தாங்கள் என்ன செய்வதென்பதைஅறிவர். அதனால் நாங்கள் மக்களுடன் கதைக்கும் பொழுது மிகவும் அவதானமாகவும் சிந்தித்தும் செயலாற்ற வேண்டியுள்ளது.

நாங்கள் விஜயம் செய்த பொழுது பல சந்தர்ப்பங்களில் தொலைக் காட்சிப் படங்களும் புகைப படங்களும் எடுக்கப்பட்டன. நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இறுதிநாள் வெளியேறும் பொழுது தனித்தனியாகவும் படமெடுக்க எத்தனித்தார்கள் நாம் அதை ஆட்சேபித்தோம். ஆனாலும் அவர்கள் செவிசாய்க்கவில்லை. எப்படி என்றாலும் அவர்கள் யாழ்ப்பாணத்தில் காணப்படும் விடுதலைப் புலிகளேயாவர்.

நாம் திரும்பி வரும்பொழுது கொழும்பில் நடந்த காமினியின் கொலைபற்றி அவர்களின் பிரதிபலிப்பை அறியக் கூடியதாக இருந்தது. பலர் அந்தச் செய்தியைக் கேட்ட பொழுது திகைப்புடன் காணப்பட்டனர்.

# ஒரு விநாடிக்கு 4 குழந்தைகள்

ஐக்கிய நாடுகளின் சனச் செறிவு மகாநாடு கெய்ரோவில் (எகிப்து) நடந்தது எட்டு நாட்கள், 8மணித்தியாலங்கள் 45 நிமிடங்களுள் உலகில் முப்பது இலட்சத்து ஐம்பதாயிரம் குழந்தைகள் பிறந்துள்ளனர். அதாவது விநாடிக்கு சராசரி 4 குழந்தைகளாகும்.

இதே நேரத்தில் பதினொரு இலட்சத்து அறுபத்தேழாயிரம் மக்கள் இறந்துள்ளனர் கூட்டிக் கழித்தால் பதினெட்டு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரம் பேர் உலகத் தொகையோடு கூடியிருக்கின்றனர்.

நாளுக்கு நாள் இந்தச் சனப் பெருக்கம் மாறுபடுவதாக பிறப்பு இறப்பு கணிப்புக் கருவி மூலம் இந்த மகாநாட்டை நடத்திய குழு கண்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் கணிப்புப் படி இன்றைய உலக சனத் தொகை 5.6 பில்லியன் ஆகும். 1998 இல் 6 பில்லியன் ஆகலாம் என்றும் கணிக்கப்பட்டுளளது.

இலங்கைப் படுகொலை

# சமாதானப் பேச்சை முறிக்கச் சதி!

*இலங்கைக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டி யிட்ட எதிர்க்கட்சித் தலைவர் திசநாயகா படு கொலை செய்யப்பட்டது தமிழ் நாட்டைக்கூட உலுக்கி யிருக்கிறது! காரணம்!*

''ராஜீவ் காந்தியைக் கொன் றது போலவே திசநாயகாவை விடுதலைப் புலிகள் கொன்று விட்டார்கள்'' என்று செய்தி பரப்பப்பட்டதுதான்!!

இலங்கை அரசியலில் தொடர்ந்து படுகொலைகள் நடந்து வருகின்றன. ஒருவர் மீது ஒருவர் பழி சொல்லுகி றார்கள். இந்த அம்சத்தை அடியோடு மறைத்துவிட்டு, எடுத்த எடுப்பிலேயே புலிகள் மீது பழி போடுவது ஏன்?

## வெடிகுண்டுப் பெண்

குண்டு வெடித்த சற்றுத் தொலைவில் ஒரு பெண்ணின் தலை தனியே கிடந்தது. உடனே, அவள் பெண்புலி! அவள்தான் இடுப்பில் குண்டைக் கட்டிக்கொண்டு வந்தாள்'' என்கிறார்கள்.

ஆனால் அந்தப் பெண் ஒரு அரசாங்க ஊழியர் ''கிராம சேவகி'' என்பது பிறகு தெரிய வந்தது!

குண்டு வெடித்து செத்தவர் களில், கால் இழந்த ஒருவரும் உண்டு. உடனே, ''அவர்தான் வெடிகுண்டை மடியில் கட்டிக் கொண்டு வந்தவர். இப்படி நொண்டிகளை அனுப்புவதே புலிகளின் வேலை'' என்றார்கள்.

அதன்பின் ஒரு புகைப்படம் அகப்பட்டது. அந்தப்படத்தில் ஒரு பெண் தலைகுனிந்து நிற்கிறாள். உடனே, ''அந்தப் பெண் தான் வெடிகுண்டைக் கட்டிக்கொண்டு வந்தாள்! அவள் ஒரு பெண் புலி என்று அறிவித்தார்கள்!!

**இராணுவம்**

இத்தனையும் சொல்லுவது யார்?

இராணுவ அதிகாரிகள்!

எந்த இராணுவ அதிகாரிகள்?

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக் கூடாது என்று கூறும் இராணுவ அதிகாரிகள்!

பிரதமர் சந்திரிக்கா புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவதை எதிர்க்கும் இராணுவத் தளபதிகள்!

''சமாதானப் பேச்சு நடத்துவதை இராணுவத்தளபதிகள் எதிர்க்கிறார்கள்!'' என்று பிரதமர் சந்திரிக்கா பகிரங்கமாகவே குற்றம் சாட்டினார்!

அதற்கு அடுத்த சில நாளில் தான் இந்தப் படுகொலை நடந்தது!

சமாதானப் பேச்சை முறிப்பதற்காக இந்தக் கொலை ஏன் நடந்திருக்கக் கூடாது?

சமாதானப் பேச்சு வெற்றி பெற்றால், குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரதமர் சந்திரிக்கா எளிதாக வெற்றி பெற்றுவிடுவார்; எனவே, சமாதானப் பேச்சை எப்படியாவது முறியடிக்க வேண்டும் என்ற நோக்கிலும் இந்தக் கொலை நடந்திருக்கலாம் அல்லவா?

எனவே-

காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லம் மஞ்சள் என்பது போல, புலிகள் மீது பழியைப் போட்டுப் படுகொலையை மூடி மறைத்து விடாமல், உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும்!

## குளிர் மாதம்

குளிர் காலத்தின் துவக்கம் தான் மார்கழி மாதமாகும். பூமியின் வடகோளப் பகுதியில் உள்ளோருக்கு டிசம்பர், பிப்ரவரி மாதங்கள் குளிர்காலங்களாகும். குளிர்காலத்தின் துவக்கம் டிசம்பர் 21-22 தேதிகளில் ஆரம்பமாகிறது.

# சூரிய அருப்பால் மாசற்ற மின்னாற்றலை வழங்க முடியும்

— சிசில் விக்கிரமநாயக்கா
(டெய்லி நியூஸ் 27.10.84)

*நாங்கள் சுவாசிக்கும் காற்றைப் போல தற்போதைய வாழ்க்கை நிலைக்கு மின்சக்தியும அத்தியாவசியமாகிறது. ஆனால் அதில் ஒரு குறைபாடும் உண்டு. மனித இனம் பலவழிகளில் ஈடுபட்டு மின்சாரம் பெறும் பொழுது சுற்றாடல் மாசடைகிறது. சுற்றாடல் மனித வாழ்விற்கு முக்கியமானது.*

பல தசாப்தங்களாக மனிதன் மின் சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அலைந்து திரிந்த அதே நேரத்தில் சூரியன் வழமை போல் பயன்படுத்துபவரின்றி வானில் பிரகாசமாகி ஒளிருகிறான். சூரியனிலிருந்து கிடைக்கும் மின்சாரம் தொடர்ச்சியானதாகும்.

இந்த நாட்டின் ஒருபகுதியினர் வரையறையில்லாத இந்த வலுவை உணர்ந்து அதைத் துரிதமாக ஒரு லாபகரமான செயலாக்கியுள்ளார்கள். அவர்கள் விரைவில் சூரிய சக்தியைப் பாவிக்கும்படி ஒரு பிரச்சாரத்தை நடத்த இருக்கிறார்கள். மேற்கத்தய நாடுகளில் செல்வாக்கு உள்ளவர்களுடன் எங்களுடைய நாட்டிலுள்ள கிராமப்புறத்தில் நாளாந்தச் சீவனம் நடத்துபவர்களை ஒப்பிடும், அல்லது வளர்ந்துவரும் மூன்றாம் உலகநாடுகள் இந்த எழுச்சியின் ஆரம்பத்தை விளங்கிக் கொள்வர். அண்மைய வருடங்களில் உலகின் சனத்தொகைப் பெருக்கத்தைப் பற்றி ஒவ்வொருவரும் அறிவார்கள். இலங்கை

இதற்கு விதிவிலக்கல்ல இச்சனத்தொகைப் பெருக்கம் உலகளாவிய ரீதியில் நான்கு எச்சரிக்கைகளைக்கொண்டு வந்திருக்கிறது. அவையாவன முதலாவது பெரிய அளவிலான வறுமையுடன் உலகின் பலபாகங்களிலும் தரம் குறைந்த வாழ்க்கை நிலை காணப்படுதல். இங்கே கொழும்புத் தலைநகரில் சிறுகுடிசைகளின்வீட்டுக் கதவையோ ஜன்னலையோ திறந்தால் அடுத்த வீட்டைப் பார்க்கக் கூடியநிலை இருக்கின்றது. இரண்டாவதாக எந்த சக்தியற்ற மனிதனால் வாழ முடியாதோ அந்தச் சக்திகளின் தேவை அதிகரித்துள்ளது. மூன்றாவது சனப்பெருக்கத்தின் காரணமாக இயற்கை அளவிற்கு மிஞ்சிச் சூறையாடப்பட்டு இயற்கை வளங்கள் அழிந்து போய்விடும் நிலை. நாலாவது அதாவது எங்கள் இயற்கைவளங்கள் அழிந்து போகும் நிலை என்பனவாகும்.

எவ்வளவு இலங்கையர்கள் வளர்ச்சி அடைந்த நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளார்கள் என்னும் கேள்விக்கு விடை தேவையில்லை உண்மையாக அதிகமாக தஞ்சம் புகுவோர் இந்தநாட்டை அரசியல் காரணங்களுக்காக விட்டுச் செல்லவில்லை அவர்கள் ஒங்கு பொருளாதார நிலை குன்றிய காரணத்தாலேயே சென்றுள்ளனர். இதை மாற்றியமைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படாவிடின் இது சகாரபோன்று பாலைவனமாகமாறும் நிலை உருவாகும் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். இது காலத்திற்கேற்ற கேள்வி மட்டுமேயாகும்.

அடுத்தது சக்தி எங்களுடைய வாழ்க்கையில் என்ன பங்கை வகிக்கிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம். விஞ்ஞானிகள் கூறுவது போல் எரிபொருள் காரணமாக காற்று மாசடைகிறது. இருந்தும் செந்தக ஒக்சைட்டுக்கள் (Sulphur oxide), நைதரசன் ஒக்சைட்டுக்கள் (Nitrogen di oxi(e) போன்ற சில மாசுள்ள பொருட்களைக் கட்டுப்படுத்த சில வழிவகைகள் உண்டு சூழலில் உள்ள மேலதிக கரிய மில வாயுவைக் (Carbon dioxide) கட்டுப்படுத்தக் கூடிய ஊடக (தண்மாற்றம் அடையாமல் கட்டுப்படுத்தக் கூடிய) மாற்றிகளில்லை. அத்துடன் இயற்கையாகவே கரியமில வாயுவைக் கட்டுப்படுத்தும் வனம் (காடு) போன்றவை அழிக்கப்படுவதால் தான் கூடியளவு கரியமில வாயு உண்டாக்கப்பட்டு வளிமண்டலம் மாசடைகின்றது.

இந்நிலையில் எந்தவிதமான மாசையும் காற்றினில் ஏற்படுத்தாத துப்பரவான சக்தியே எங்களுக்குத் தேவை.

இதில் ஒன்றுதான் அணுமின் நிலையத்திலிருந்து பெறப்படும் மின்சக்தியாகும். ஆனால் அணுமின் நிலையத்தில் இருந்துபெறப்

படும் சக்தி வறியவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஒன்றல்ல. 3 ஆம் உலக நாடுகளுக்கு அவசியமாகத் தேவைபபடுவது உலகெங்கணுமுள்ள மக்கள் பாதுகாப்பாகப் பாவிக்கக்கூடிய ஆற்றல் மிக்க மின்நிலையங்களாகும்.

இன்று இலங்கைக்குத் தேவைப்படுவது எனனவென்றால் சூழலுக்குப் பாதுகாப்பாகவும், தொடர்ச்சியாகவும், சுலபமாகவும், தாராளமாகவும், எங்கள் வசதிக்கேற்ப கிடைக்கக் கூடிய ஒரு சக்தியாகும்.

அப்படிப்பட்ட சக்தி பற்றிப் பேசக் கூடிய வளம் எங்கள் மத்தியில் உள்ளது. ஒவ்வொரு நாளும் நாங்கள் எழுந்ததும் சூரியனைக் காண்கிறோம். நாள் முழுவதும் அதன் வெப்பத்தை (சக்தியை) உணர்ந்து கொள்கிறோம். பின் மேற்கில் மறைவதைக் காண்கிறோம். வானத்தில் தேவையான அளவு சக்தியுள்ளது. எங்களுக்குப் பாவிக்கத்தக்கவாறு அதை மாற்ற முடிந்தால்போதும்.

இதைத்தான் சூரிய அடுப்போ அல்லது வளிமண்டல ஆற்றல் கோபுரமோ (எ. பி. ரி.) செய்கிறது.

சூரிய அடுப்பு எவரும் அறிந்த மூன்று பௌதீக அடிப்படைகளை இணைக்கின்றது. இவை கண்ணாடிக் கூரையின் பயன், புகைபோக்கிகளின் பயன், பொறிகள் என்பனவாகும். தொழில் நுட்பவியலின்படி இது மிகவும் இலகுவானதும் எங்கள் நாட்டில் தேர்ந்தெடுப்பதற்கு உகந்ததாகவும் உள்ளது. உள்ளூர் தொழிலாளர்களுடன் குறைந்த செலவில் நிர்மாணித்து இதைச் செயற்படுத்தலாம்.

சூரிய சத்தியைப் பெறுவதற்கு சூரிய அடுப்பைப் பாவிக்கும் பொழுது பெரிய வெற்று நிலப்பரப்போ அல்லது பாலைவனமோ தேவையில்லை.

## சூரிய அடுப்பு என்றால் என்ன?

இது ஒரு உயர்ந்த சீமெந்துக் குழாயினாலான அமைப்பாகும். இச் சீமெந்துக் குளாயின் அடித்தளத்தில் நீண்ட விட்டமும் சமாந்தரமுமான கண்ணாடியிலான கூரை ஒன்று இருக்கும். இது கூரைக்குக் கீழ் உள்ள காற்றை வெப்பமாக்கிறது. இந்த வெப்பமாக்கப்பட்ட காற்று புகைக்குழாயின் ஊடாக மேலே செல்லும் பொழுது குழாய்க்குள் உள்ள பொறிகளை அது இயங்கச்செய்கிறது. பொறி இயக்கம் ஏற்பட்டவுடன் மின் சாரம் உற்பத்தியாகின்றது. இது மிகவும் இலகுவானதாகத் தோன்றுகின்றது அல்லவா? உண்மையில் இது இலகுவானது தான்.

இந்த இலேசான இயக்கத்தை விட மேலும் பல நன்மைகள்

உண்டு. சூரிய ஒளிவாங்கி வெப்பத்தை பரவச் செய்வது மட்டுமல்லாது மேகம் இருண்ட நேரத்தில் ஒளியையும் பரப்புகின்றது.

இந்தச் சூரிய அடுப்பில் இயங்கும் பொறி ரி.ரி பிறப்பாக்கிப் பகுதியாகும். (Turbine Trans-mission Generator) இந்தத்தாக்கத்திற்கு ஈடு கொடுக்கக் கூடிய விதத்தில் பொறி உபகரணங்கள் நீடித்து நிலைக்கக் கூடியவையாக அமைக்கப்பட்டுள்ளன. சூரியசக்தியைப் பாவிக்கும் வேறு வழி வகைகளைக் காட்டிலும் சூரிய அடுப்பு வசதியுள்ளதாகவும், பழையற்றதாகவும், நீடித்து நிலைக்கக்கூடியதாகவும் இருக்கின்றது

தொழிற் புரட்சி தொடங்கிய 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் உலகச் சூழலில் பலவிதமான மாற்றங்கள் வந்துள்ளன. தொழில் மயமாக்கப்பட்டதிலிருந்து நிலக்கரிப் பாவனைக்கு வந்தது. நிலக்கரிப் பாவனையைத் தொடர்ந்து எண்ணெய்ப் பாவனையும் அதன் காரணமாகக் கூடியளவு கரியமிலவாயுவும் வெளிவரத் தொடங்கியுள்ளன. இதனால் பூமியின் வெப்பம் படிப்படியாக அதிகரித்து விட்டது.

உலகளாவியரீதியில் இலங்கையிலுங்கூட போதியளவு உதாரணங்கள் உண்டு. இதன் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பதற்கு மக்களின் முயற்சிக்கு எதிராக இந்த மாசடைதல் குறையாமல் கூடிக் கொண்டே செல்கின்றது.

அண்மையில் கல்கிசையில் ஒரு விழாவின போது புனித தோமஸ கல்லூரியை முகத்துவாரத்தில் இருந்து கல் சைக்கு மாறற ம்வஸைடுய என்ற எணணம ஞாபகப்படுத்தப்பட்டது. இதற்கு நிலக்கரித்தூசியினால் பளஸைாகளின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது.

இரண்டாவது உலகப் போர் முடியும் வரை கொலியோஸ் (Colliers) என்றழைக்கப்படும் நிலக்கரிக்கப்பல்கள அடிக்கடி கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து போவதுண்டு. அந்தக் காலத்தில் நிலக்கரி ஒரு முக்கிய எரிபொருளாக இருந்தது. புகையிரதங்கள் கரியில்தான் ஓடின. மின் நிலையங்கள் கூடக் கரியில் தான் இயங்கின. அந்த நேரத்தில் பாரந்தூக்கிகள் குறைவாக இருந்தமையால் கரி கப்பலில் இருந்து மனிதர்களால் பாஜ் வள்ளங்களுக்கு இறக்கப்பட்டு கரைக்குக் கொண்டு செல்லப்பட்டன என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கரியமிலவாயு வெப்பத்தை உறுஞ்சும் மூலக் கூறுகளைக் கொண்டுள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் கரியில் இருந்து எண்ணெய்க்கு மாற்றப்பட்டிருந்தும் கரியமில வாயுவின்

அளவு 25/. அதிகரித்திருந்தாக நம்பப்படுகின்றது. இது சூரியனால் சூழலில் ஏற்பட்டிருக்கும் வெப்பத்தின் அளவைத் தாங்கி அதைச் சமநிலைப்படுத்தும் பூமியின் சக்திக்கு எச்சரிக்கையாக உள்ளது.

படிப்படியாகக் காடுகளை அழித்து எரிக்கும் போது ஏற்படும் உயிரியல் இரசாயன மாற்றத்தினால் வெளிவரும் மீதேனும் (METHANE) கரியமில வாயுவும் சூழல் மாசடைவதற்குரிய மற்றுமொரு காரணமாகும். நிலத்தை மூடியிருக்கும் இலைகள் அகற்றப்படுவதாலும் காடுகள் அழிக்கப்படுவதாலும் தரை வெப்பமாகிக் கரியமில வாயுவும் மீதேனும் உண்டாக வழிவகுக்கின்றது.

அதிகளவில் இத்துப்போயிருக்கும் மரக்கட்டைகளாலும் கொப்புகளாலும் கறையான்கள் அதிகம் உண்டாகி அவையும் கூடியளவு மீதேனை உண்டாக்குகின்றன.

சமுத்திரங்கள் ஓரளவு கரியமில வாயுவை உறுஞ்சுவதாக நாம்கேள்விப்படுகிறோம். சமுத்திரங்களால் ஓரளவு கரியமில வாயுவைத்தான் உறிஞ்ச முடியும். சமுத்திரம் வெப்பமடைந்ததும் முன்னைய கதியில் உறிஞ்சப்படுவது தடைப்படுகின்றது. இது ஒரு புரியாத நிலையாக இருக்கின்றது. ஏனெனில் தரையில் இருப்பதைப் போல் சமுத்திரத்தல் 50 மடங்கு கரியமில வாயு காணப்படுகின்றது. வாயுமண்டலத்தில் காணப்படும் கரியமில வாயுவின் செறிவு கூட்டுப்படுத்தப்படுகின்றது? ஒளித்தொகுப்பு முறை மூலம் தாவரங்களும் மரங்களும் பெருந்தொகையான கரியமிலவாயுவை உறுஞ்சுகின்றன என அறிகிறோம். காடுகளை அழித்து விடுவதால் எங்களின் தேவைக்கு அதிகமான கரியமில வாயுச் செறிவு வளிமண்டலத்தில் ஏற்படுகின்றது.

காட்டு மறைப்பை அகற்றுவதால் மற்ற விடையங்களுடன் வளிமண்டலத்திலிருந்து கரியமில வாயுவை உறுஞ்சும் ஆற்றலும் அழிந்துவிடுகிறது.

1992 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கரியமில வாயுவின் செறிவு ஒரு மில்லியனுக்கு 355 பகுதிகளாக இருந்தது. இன்று அது ஒரு மில்லியனுக்கு ·00 பகுதிகளாக அதிகரித்துள்ளது. வளிமண்டலத்தில் உள்ள இந்த மேலதிக கரியமில வாயு வெப்பத்தை அதிகரிக்கச் செய்து அதன் காரணமாகக் காலநிலை மாற்றம் ஏற்படும் அபாயம் தோன்றுகின்றது.

பூமியின் கால நிலையில் மாற்றம் உண்டாவதால் முக்கியமாக மனித இனத்திற்கு நேருக்கு நேராக அதனுடைய தாக்கம் உண்டாகிறது. ஆனால் இதைச் சாதாரண மனிதன் ஏற்றுப் புரிந்து கொள்வதாக இல்லை. வாழ்வில் வசதியாக இருப்பவர்கள் பற்றி ஒன்றும் கூறத்தேவையில்லை.

மனித உடல் பல மூலகங்களினால் ஆனது என்று கூறப்படுகின்றது. அதாவது காபன் 23% நைதரசன் 2.6% கல்சியம் 1.1% பொஸ்பரசும் சிறிய அளவிலான 36 வரையிலான சிறுசிறு மூலகங்களும் காணப்படுகின்றன. ஆனால் கிட்டத்தட்ட மனித உடலில் சுமார் 70%தில் 60 வீதமான பிராணவாயுவும், 10 வீதமான ஐதரசன் வாயுவும், ஒன்றாகச்சேர்ந்து நிகரற்ற மூலக்கூறான நீரை உண்டாக்குகின்றன.

மனிதன் உயிர் வாழ்வதற்கு நன்நீர் அவசியம். பூமியில் உள்ள நீர் 2.5% நன்நீராக உள்ளது. அதிகமான நன்நீர் ஆட்டிக்கா, அர்தராட்டிக்கா பகுதிகளில் டனிச்சட்டிகளாக உறைந்துள்ளன. மிகுதிநீர் ஆறு, குளம், நீர் நிலைகளில் 0.1 வீதத்தில் காணப்படுகின்றது.

மனிதன் தான்வாழும் பூமியை அசுத்தப்படுத்துவதனால் வெப்பம் அதிகரிக்கிறது. வெப்பம்அதிகரிப்பதினால் ஆவியாதலும், கலரசல்களின் அடியிலிருக்கும் படிவமும் வெப்பமடைகின்றன. அது மீண்டும் வளிமண்டலத்தில் நீராவியாகி அதிகரிக்கின்றது. அது தொழி சாலைகளின் தாக்கத்தை அதிகரிப்பதனால் அதன் நடைமுறை இன்னமும் வேகமடைகின்றது. சுற்றாடல் மாசடைவதால் என்ன நடக்கும் என்பதற்கு எத்தியோப்பியாவில் காணப்படும் துக்ககரமான சம்பவம் சிறந்த உதாரணமாகும். இங்கு 4 வீதமாக இருந்த காட்டு நிலம் அரைநூற்றாண்டுக் காலத்திற்குள் ஒரு வீதமாகக் குறைந்து விட்டது. அந்த நாட்டின் மழை வீழ்ச்சி தற்போது குறைந்து விட்டது. இந்த நாட்டில் பெரும்பாலான நிலப்பரப்பு பாலைவனமாக இல்லா விட்டாலும் கட்டாந்தரையாக மாறிவிட்டன.

இலங்கையிலும் அப்படியான ஒரு நிலை உருவாகிக் கொண்டே வருகிறது. இதை நாங்கள் நிறுத்தா விட்டால் இலங்கையும் ஒரு கட்டாந்தரையாக மாறி விடும். இன்று ஆக 10 வீதமான காடுகளே எங்கள் நாட்டில் உள்ளன. இன்றுஅதுவும் விரைவாகக் குறைந்துகொண்டே போகின்றது. வெற்றிகரமாக பணத்தை மிச்சம் பிடிப்பதாகக் கூறிக் கொண்டு அந்தச் சிறிய காட்டு வளத்தையும் அழிக்கப்பார்க்கிறார்கள். இப்படித் திட்டமிடுபவர்கள் பணத்தால் வாங்கமுடியாத சில விடயங்கள் இந்த உலகில் இருப்பதாக எண்ணுவதில்லை.

இலங்கை விவசாய நாடாக இருப்பதை விட தொழில் மயமான நாடாக இருக்கவேண்டும் எனச் சிந்திப்பதால் சூழல் மாசடையும் தன்மை இன்னமும்கூடிக்

கொண்டே போகும். எங்களுடைய தொழிற்சாலைகள் இரசாயனங்களின் மாசை வாவிகள் குளங்களில் கக்குவதால் அது எங்களிடம் இருக்கும் சிறந்த நன்னீரையும் மாசடையச் செய்யும். இலங்கையின் தலைசிறந்த அரசர்களில்ஒருவரான மகாபராக்கிரம பாகு "ஒரு துளி மழை நீராவது மனிதனுக்குப் பிரயோசனமாக இருக்கவேண்டுமே தவிர கடலுக்குச் செல்லக்கூடாது" என்று கூறியதற்கு மாறாக நாம் நடந்து கொள்கிறோம். இந்த விடயத்திலாவது பின்நோக்கி பராக்கிரம பாகுவின் காலத்தைப்பார்ப்போமாக!

## நிலா மூளையை பாதிக்குமா?

நிலாவொளியில் நீண்டநாட்கள் படுத்துறங்கினால் மூளை பாதிக்கப்படுமென்ற கருத்து தொன்றுதொட்டு இருந்து வருகின்றது, பிற நாகரிகங்களிலும் இக் கருத்து நிலவுகின்றது. கிரேக்க மொழியில் நிலவுக்கு Lunar என்று சொல்வர். இதன் அடிப்படையிலேயே பைத் யம் பிடித்தவர்களை Lunatic என்று அழைக்கும் மரபு உண்டாகி இருக்கலாம் என்கிறார்கள்.

நிலவிற்கு அகஒளி கிடையாது; சூரிய ஒளியையே பிரதிபலிக்கின்றது. இன்றும் கிராமங்களில் திறந்த வெளியில் படுத்துறங்கும் பழக்கம்இருக்கிறது நிலாவொளியில் படுத்துறங்கினால் மூளை பாதிக்குமென இதுவரை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

## விஷ ஜந்துக்களுக்கு விஷம் உண்டாவது எப்படி?

பொதுவாக விஷம் என்று சொல்லக்கூடிய நச்சுத் தன்மை வாய்ந்த திரவம் அவ்வுயிர்களின் உடலில் உள்ள ஒருவித சுரப்பிகளின் மூலம சுரக்கப்படுகின்றது.

பாம்புகளில், அதன் மேல்தாடையில் பின் பக்கத்தில் உள்ள விஷச் சுரப்பியில் இருந்து சுரக்கிறது. இச்சுரப்பி உமிழ்நீர் சுரப்பியை ஒத்தது. விஷம் – வெண்மஞ்சள் நிறமாக உள்ள திரவம். இத திரவத்தில் அதிகளவு ஆல்புமின் என்ற புரதப்பொருள் காணப்படுகின்றது. விஷஜந்துக்களான பாம்பு, நட்டுவாக்காலி, சிலந்தி போன்றவற்றில் விஷம் (Poison) உள்ளது. இவை கடித்தால் அல்லது குத்தினால் விஷம் உடலில் பரவி மரணத்தையும் ஏற்படுத்தும்.

# உடற்பயிற்சியினால் ஆரோக்கியமான வாழ்வைப் பெறுங்கள்

— கலாநிதி பாலித குணவர்த்தனா
(ஐலண்ட் 26.10.94

*நல்ல சுகாதாரத்தைப் பேணுவதற்குத் தேகப்பயிற்சியின் முக்கியத்துவம் பற்றி மனிதவரலாறு சான்று பகர்கின்றது. இனம் பால் போன்றவை எப்படி இருப்பினும் "இஸ்கேக் இருதய நோய்" போன்ற நோய்கள் குறித்தகாலத்திற்கு முன்பு மனிதவாழ்வில் எல்லாத்துறையிலும் இடம்பெறுகின்றது.*

ஆதிகால மனிதன் பிரதானமாக வேடுவனாக இருந்தான். பின்னர் வாழ்க்கைப் படிகளில் பயிர்ச் செய்கைகளிலும், விவசாயத்திலும் படிப்படியாக முன்னேறினான் என கடந்த நாலாயிரம் வருட கால வரலாறுகளில் பதியப்பட்டுள்ளது. இது பொருண்மிய மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கிழக்கு மேற்கு ஆதிநாகரீகத்தின் கம்பீரமான விவசாயத்தைஉறுதி செய்கிறது. அப்படிப்பட்ட வாழ்வின் பெறுபேற்றினால் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே முயற்சி மிக்க வாழ்வினால் பாரிய நீர்ப்பாசனம் தொழில் நுட்பரீதியான விடயங்கள் என்பன வெவ்வேறான காலகட்டங்களில் பூர்த்தியடைந்து ஆதிகால நாகரீகத்தின் ஆதாரபூர்வ அதிசயமாக இடம்பெறுகிறது. எனினும் அன்றைய மக்கள் வாழ்க்கையை பல துறைகளிலும் செல்வாக்குடையதாக்க உடற்பயிற்சிகளையும், விளையாட்டுக்களையும்

விருத்தி செய்தனர். பண்டைய கிரேக்கர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே " ஒலிம்பிக்" விளையாட்டுக்களையும் விருத்தி செய்தனர். கிட்டத் தட்ட நூறு வருடங்களுக்கு முன்பு தான் அது மறுமலர்ச்சிப் படுத்தப்பட்டது.

இப்படிப்பட்ட சிறந்த நாகரீகம்சுகதேகிகளின்றி நூற்றாண்டு காலமோ அதற்குக் கூடுதலாகவோ நிலைபெற்றிருக்க முடியாது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற் புரட்சி அதிக அசைவற்ற துறைகளை பெருக்கிக் கொண்டது. இதனால் மனித வேலையின் சுமைகளை இயந்திர சாதனங்கள் எடுத்துக் கொண்டன. இந் நூற்றாண்டின் கடைசிக் காற்பங்கு காலத்தில் இது தெளிவாகிறது.

தொழில், வாழ்க்கை முறை போன்ற கால மாற்றங்களுடனான நெஞ்சுப்பைச் சுவரின் தசைக்குக் குருதி வழங்கும் நாடி (CORONARY ARJERY -EASE) (இதை அமெரிக்கா பெரிய,C' என அழைக்கின்றது), சிறுநீரக மெலிட்டஸ் (DIABE -TES MELLITUS), இரத்த அமுக்கநோய்கள் Hytperension) போன்ற நோய்களின் அதிகரிப்பு யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டவைகளாகும். நல்ல முறையில் காரணங்காட்டப்பட்ட இவற்றின் சில கண்டு பிடிப்புக்கள் நீண்ட வாழ்வின் எதிர்பார்ப்பு வழமையான தேகப்பயாசாப் பற்றாக்குறையே காரணம் எனக் காட்டின.

எப்படியாயினும் வைத்தியத் தொழிலில் இவை சிறிது காலததை எடுத்தன. இங்கேயே இருதய நோய் மூன்றில் ஒருபங்கு முதியவர்களின் இறப்பிற்குக் காரணமானது. பொது மக்கள் வாழ்வில் இது உடற் பயிற்சியின் முக்கியத்துவத்தை உணரவைத்தது. இக் கைத் தொழில் மயமாக்கல் உலகெங்கணும் ஏன் இலங்கையிலும் கூட சாப்பாடு, உடற் பயிற்சிகள் போன்றவற்றில் மிகச் சிறந்த கவனத்தினால் கட்டுப்படுத்த இயலும் என எடுத்துக்காட்டியுள்ளன. கடந்த இருதசாப்தங்களிலும் மேற்கு நாட்டு மக்கள் ஒழுங்கான உடற்பயிற்சி அசைவினால் உடலைக் குலுக்குதல் ஏறோபிக்ஸ் (Aerobics) அந்தரத்தில் எழும்பிப் பாய்தல் போன்றவற்றை மேற்கொள்ளுகின்றனர். இவற்றை விருத்தியாக்குவதற்காக இக்காலகட்டத்திலும் அநேக ஒன்றுகூடல் நிலையங்களுக்கு (Club) ஐரோப்ப அமெரிக்க ஈடுபாடுடையவர்கள் பாய்ந்தடித்து வருகின்றனர். இச்செயலமைப்பு ஆசியாவையும் இன்று பற்றிக் கொண்டுள்ளது.

கொழுப்பு நன்கு ஊறிய உணவுகளை உட்கொள்ளல், புகைத்தலினால் வரும் அழுத்தங்கள் பரம்பரையின் திடசித்தமின்மை என்பன மேலதிகக் காரணிகள் ஆகும். இவை எல்லாம் ஒரு பகுதி ஐ. எச். டி இடம்பெயர்வின் தொடக்கமாகும். நவீன

போக்குவரத்துச் சாதனங்கள், தொழில் தொடர்பான அமைப்புக்கள், நாட்டின் பெரும்மியத்தை படிப்படியாக தொழில் மயமான ஒன்றுக்கு இட்டுச் செல்லல் என்பன எல்லாம் நகராத உயிர்வாழ்வு முறைகள் ஆகும். இதன் பிரதிபலன் சமப்படுத்தலே எனலாம். இதற்கான ஆதரவு உயர்ந்த அமைவில் ஐ.எச்.டி போன்றவற்றில் வருவதும், மற்றும் ஒழுங்கீனங்களை நகர்ப்புறங்கள் தெரிவிப்பதும், ஒத்திசைவான கிராமப்புற சனத்தொகையின் பெரும்மிய நெருக்கடியை இன்றும் கமத்தொழிலும், விவசாயமும் நெருக்குவது என்பன ஆகும்.

கடும் சுகவீனமானவர்களைத் தவிர்ந்த மற்றையவர்களுக்கு ஒழுங்கான உடற்பயிற்சி நன்மை அளிப்பதாக அமையும். உடற்பயிற்சி ஒவ்வொருவரின் தராதரங்களுக்கும் ஏற்ப பல்வேறுவிதங்களில் வெவ்வேறாக உள்ளன. உடற்பயிற்சி ஈடுபாடு ஒரு உவகை ஊட்டக்கூடிய செயலாக அமைய வேண்டும். உடலிற்கோ, உள்ளத்திற்கோ, ஆபத்து தொல்லை இல்லாத நீண்டதிட ஆற்றல் கொண்டதாக அமைய வேண்டும். ஆற்றலை உட்படுத்திய முறைகளில் இருந்து பிரவேசம் ஆகும் வெவ்வேறான உடற்பயிற்சிகளின் செயற்பாடுகள் தகர்த்தல், இடித்தல் கூடுதலான ஓய்வு நேரங்களில் உலாவுதல் போன்றவை எல்லாம் போதுமான உடற்பயிற்சியின் இணைப்பு விடயங்கள் ஆகும். இவை உடலையும், உள்ளத்தையும், நல்ல முறையில் அமைப்பதற்கு உதவும். இவை எல்லாம் மனிதனின் வயது, தொழில் ஆகிய உடற்பயிற்சியின் முக்கிய வெளிக்காட்டல்கள் ஆகும்.

இவ் ஆதார விளைவுகள் பன்முக தொழில் விளைவுகள் மூலமாக சமப்படுத்தப்பட்டுள்ளன. உயிர் வாழ்வுக்காகவும், உடம்பின் பெறுபேற்றிற்காகவும் இரசாயன மாற்றங்களை மாற்றமைப்புக்களைத் தவிர்ந்த ஏனைய நோய்களை எல்லாம் இவை கட்டுப்படுத்துவதாகும். அதிகரிக்கும் உடற்பயிற்சிக்கு ஏற்ற விதமாக உடலின் ஆற்றல் அமைய வேண்டும். 'கிளைக்கோஜின்' என்ற பொருள் சக்தியைக் கல்லீரலில் சேகரித்து வைப்பதுடன் தோலின் சவ்வுப் பகுதிகளில் கொழுப்பையும் சேகரித்துவைப்பதாகும். கூடுதலாக அதிகரிக்கப்பட்ட உடற்பயிற்சியின் காரணமாக உடன் தேவைகளுக்காக குளுக்கோஸ் பயன்படுத்தப் படலாம். எப்படியும் அதனைத் தாங்குவதற்கும், நீண்ட செயற்பாட்டிற்குமாக மனித உடம்பு கிளைக்கோஜின் கொழுப்பு போன்றவைகளைச் சேகரித்து வைக்கின்றது. ஒழுங்கான உடற்பயிற்சிகளில் ஈடுபடும் ஒருவர் கூடுதலான ஆற்றலை செலவழிக்கின்றார். அவர் உட்கொள்

ளும் உணவின் பரிமாணத்தின் அளவு போதுமாயின் இவை மாறாக அந்த நாளின் முடிவாக மிதமிஞ்சிய உடம்பின் ஆற்றலைச் சேமித்து வைக்க உதவும் இல்லையேல் இவை நீண்ட தொடரில் கூடிய பருமனுக்கும் மற்றும் அதிகரிக்கத் தொடங்கும் மட்டங்களுக்கும் (Lipid) அது தொடர்பான தொல்லைகளுக்கும் இடமுண்டாக்கும். அதிகரித்த மட்ட உயர்வுகளால், இருதயத்தாக்கம், இரத்த அமுக்க நோய் ஏற்படுதல் போன்றன ஏற்படும் என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒழுங்கான உடற்பயிற்சிகள் இரத்தத்தில் உள்ள தாவர சீனி மட்டத்தை (glucose) உடம்பின் உயிரணுக்களில் பிரவேசிப்பதற்கு விருத்தியாக்கி உதவுகின்றன. ஆகவே நீரழிவு மிலிற்றல் கறு கறுப்பான மெலிந்த உடம்புடையவர்களைக் காட்டிலும் நடமாட்டம் இல்லாத பருத்த உடம்புடையவர்களையே கூடியளவு பாதுகாக்கக் கூடியதாகும்.

இருதய இரத்தோட்ட வழி அமைப்பு இருதயத்தையும், இரத்த தாங்கிகளையும் கொண்ட அமைப்பாகும். இருதயம் என்பது இரத்தத்தையும் அதில் அடங்கி உள்ள பிராண வாயுவையும், சீனி போன்ற சத்துப் பிரிவுகளையும் உடம்பின் பிரதான பகுதிகளான மூளை, சிறுநாளங்கள் மற்றும் உடல் உறுப்புக்களுக்கு பிரயோகிக்கும் அமுக்கி ஆகும். ஒரு சோடி இரத்தத்தாங்கிகள் பிராணவாயு குறைந்த இரத்தத்தை திரும்பவும் நுரையீரல்களுக்கு கொண்டு சென்று அங்கு பிராணவாயு ஊட்டப்பட்டு இருதயத்தின் மற்றைய பகுதிகளுக்குச் செலுத்துகின்றன ஒவ்வொரு இருதயத் துடிப்புடன் அதாவது நாளொன்றுக்கு பல ஆயிரம் முறைகள் நடைபெறுகின்றது (சாதாரண இருதயத் துடிப்பு வீதம் நிமிடத்துக்கு (70 - 80)

தோலின் நுண்ணிழை ஓய்வாயிருப்பதினால் உயிர் மாறுபாட்டுக்குரிய செயற்பாடும் இருதயத்தினதும் மற்றைய உடம்பின் பாகங்களிலும் அடிப்படை மட்டத்திலே தான் இருக்கும். உடம்பின் செயற்பாட்டுக் காலங்களில் இருதயப் பகுதியின் அமுக்கும் ஆற்றலும், இருதயத்தின் விகிதமும் அதிகரிக்கின்றன. இதன் காரணமாக அதிகரித்த இரத்தத்தின் செறிவும்கூடிய பிராணவாயுவின் அதிகரிப்பான கொடுப்பனவும் மற்றும் போசாக்கு பகுதிகளுக்கும் தோலின் மெல்லிழைகளுக்கும் கொண்டு சென்று கூடிய தேவைகளை செயல்புரியும் தசை நார்களுக்கும் உறுப்புப் பகுதிகளுக்கும் தோல் இழைகளுக்கும், இருதய தசைப் பகுதிகளுக்கும் செலுத்துகின்றது. இவை நுண் இழைகளுக்கான இரத்த பாய்ச்சலை அதிகரிக்கின்றது. இத்தொழிபாட்டுக் காலத்தின் ஒரு பகுதியில் மெல்லிழைகள் பல்

வேறு பதார்த்தங்களைத் தயாரிப்பதற்கு ''லுமென்'' இரத்த தாங்கிகளின் அளவையும் பரிமாணத்தையும் அதிகரிக்கின்றன.

நுரையீரல்களும் இவ்விடயத்தில் இச் செயற்பாட்டுக்கு உதவுகின்றது. ஒரு ஆரோக்கியமான மனிதனின் இருதயம் சுவாசித்தலில் பாரிய ஒதுக்கீடு உடையதாக அதாவது அத்தியாவசியமானதாக அமைகிறது. இவ்வகையான இருதய சுவாசப்போக்குவரத்துத் துறையின் ஒதுக்கீடு பெரும்ளவில் சகிப்பு ஆற்றலை தீர்மானிக்கிறது. மற்றும் தனிப்பட்ட செயற்பாட்டு மட்டத்தையும் தீர்மானிக்கின்ற சிக்கலான ஆக்கத்திற்கும் ஆக்கமின்மைக்கும் உதவுகின்றது. இதற்குக் கூடுதலாக இருதயப் பகுதி, நரம்புப்பகுதி (நார்ப் பகுதிகள், மூட்டுக்கள்) போன்றவற்றையும் உடற்பயிற்சி மூலம் இயங்க வைக்கலாம்.

உடம்பு கட்டமைப்பு உடையதாக இருப்பது மிகவும் இன்றியமையாதது. இதற்கு உடற்பயிற்சி, கிறிக்கெட், மற்றும் இது போன்ற விளையாட்டுக்கள் இன்றியமையாதனவாகும்.

ஒரு குறிப்பிட்ட விளையாட்டில் உயர் நிலையை அடையும் தனிப்பட்ட ஒருவருக்கு ஒரு கஷ்டமானதும் நன்கு திட்டமிடப்பட்டதுமான பயிற்சி அவசியம். இவை உடம்பின் செயற்பாடுகளை அதிகரிப்பதுடன் இருதய, சுவாசப் பகுதிகளின் அமைப்புக்களையும் செயற்படுத்துகின்றன. வேகமானபிராணவாயுவை பெறுவதற்கும் செயல் உறுப்புக்களைப் பேணுவதற்கும் விசேடமாக செயற்படும் எலும்பு, இருதய தசைநார்ப் பகுதிகள் என்பவற்றுக்கும் விசேடமாக செயற்படுதல் அவசியமாகும். ஏனெனில் நாகரிக உலகில் விளையாட்டாளன் மேல் இவ் இன்றியமையாத தேவைகள் திணிக்கப்பட்டுள்ளன விளையாட்டை ஓர் உத்தியோகமாகவும், விளையாட்டுத் துறையின் உத்தியோகமாகவும் கொள்ளலாம். விளையாட்டில் சிறந்த போட்டியாளராக திகழ வேண்டும் என்பதால் மற்றைய தொழில்களில் ஈடுபடுவதற்கு நேரம் போதாமல் போகிறது, அதி உயர்ந்த செயற்பாட்டை மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட ஒருவர் உடம்பைத் திடமாக வைத்திருப்பதற்கும் தொடரும் பயிற்சிகள் உதவும்.

எனவே இது அளப்பரிய தாக்கத்தை விளையாட்டாளனுக்கு ஏற்படுத்துகிறது. அத்தோடு பணம், நேரம், ஆற்றல் மற்றும் சகிப்புத்தன்மை போன்றவற்றையும் ஏற்படுத்துகின்றது. விளையாட்டுத்துறை நீண்டபாதையில் இச்சுற்றாடலை ஒரு நட்சத்திரமாக்கும் என்பதில் ஐயமில்லை எனலாம்.

ஒழுங்கான உடற்பயிற்சி மட்டும் ஒரு விளையாட்டுத் துறையினனுக்கு அதி விசேட விளை

யாட்டு வீரன் என்ற தகுதியை கொடுக்க போதுமானதல்ல. மற்றும் உடம்பின் தொடர்புகள், வயது, உயரம் இன்னும் கூடுதலான தசைநார் இழைகள் உடற்பயிற்சியில் தொடர்புபடும் தசைநார்கள், செயற்பாட்டுநிலையை மட்டுப்படுத்துவதை தீர்மானிக்கின்றன. எலும்புப் பகுதியின் தசைநார்கள், உடம்பு என்பன சிவந்த, வெண்மையான தசைநார்களை வெவ்வேறு அமைப்புக்களில் பலமக்களிலும் கொண்டுள்ளது. சிவப்பு வெள்ளை தசைநார்கள் இழைகள் என்பன ஒரு தசைப்பகுதியில் அமைந்துள்ளன. இதனால் ஒரு உடற் பயிற்சியாளன் ஒரு சிறந்த ஆத்ம நேயப்பாடுடையவராகவோ அல்லது நீண்ட தூர ஓட்டப் பந்தயக்காரனாகவோ வரக்கூடும். ஆனால் ஒருவர் இரண்டிலும் சரிசமமாக சிறப்படைவது இயலாதது ஆகும்.

உடம்பிற்கு இவ் ஆதாரங்களுடன் ஒழுங்கான உடற்பயிற்சியும் பெறப்பட்டால் (நன் முறையான ஒழுங்குபடுத்தப்பட்ட உடற்பயிற்சி) அது நன்மைபயக்கும்.

ஒழுங்கான உடற்பயிற்சி உடம்பிற்கும், உள்ளத்திற்கும் சுறுசுறுப்பைக் கொடுக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்வில் மேலோங்குவதற்கான ஆதாரமாகவும் இருக்கும்.

## ஆண் குரலைவிட பெண் குரல் மாறுபடுவதேன்?

குரல்வளை தசை, குரல் நாண், நுரையீரல் ஆகியவற்றின் ஒன்றிணைந்த செயல்பாட்டால் நாம் பேசுகின்றோம். குரல்நாண்களை அசைக்கும் போது குரல் வளையிலுள்ள துவாரத்தின் அளவு வேறுபடுகிறது. நுரையீரலிலிருந்து காற்றை அத்துவாரத்தின் வழியாக வெளிப்படுத்தும் போது சத்தம் வருகிறது. குரல்வளையின் அளவைப் பொறுத்து அதிர்வெண் அமைகிறது. பெண்களின் குரல் நாண்கள் குட்டையாக இருப்பதால் பெண்குரலின் ஸ்தாயி உயர்ந்திருக்கும். சிறுவர், சிறுமியரின் குரல்நாண்கள் சிறுவயதில் சம அளவில் குட்டையாக இருக்கும். சிறுவர்கள் 5 வயதை எட்டும்போது குரல் நாண் திடீரென்று நீண்டு வளர்ச்சியடைகிறது அப்போது அவர்களின்குரல் ஆண் குரலை ஒத்திருக்கும். இதற்கு மகரக்கட்டு என்று பெயர்.

PUBLIC LIBRARY
JAFFNA.
110424

# தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைகளில் எவ்விதப் பொய்த் தோற்றங்களும் இல்லை

எமது நாட்டின் புதிய பிரதமர் அல்லது சனாதிபதி வரிசைகளில் வந்தவர்களிலிருந்தும் உலக நாடுகளின் புதிய பிரதமர்களின் வரிசையில் வந்தவர்களிலிருந்தும் எமது தற்போதைய புதிய பிரதமர் திருமதி சந்திரிகா குமாரதுங்கா வேறுபட்டவர் ஆவர். திருமதி குமாரதுங்கா வெளிப்படையான பேச்சையும் தன்னிச்சையான செயற்பாட்டையும் கொண்டவராகும். இவரது இத்தகைய குணங்கள் பலராலும் பாராட்டப்படக் கூடியனவாகும.

அரசியல் வாதிகள் வழமையாகப் பேசும் கருத்தற்ற பேச்சுக்களையும், மறைமுகமான நடவடிக்கைகளையும், வெறுக்கும் இவர் பராட்டுக்குரியவராவார். இவரை அண்மையில் பேட்டி கானவந் பரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (பிபிஸி) அதிகாரியொருவர் கூட இவர் அளித்த பதில்களால் அதிர்ச்சியுற்றவர் போல் காணப்பட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவது சம்பந்தமான அவர்களின் நேர்மையான நோக்குகள் பற்றிப் பேட்டி காண வந்தவர், அடுத்தடுத்து ஐந்து கேள்விகளுக்கும் குறையாது கேட்டபடியே இருந்தார்.

அவருடைய கேள்விகள் அவரது மனதில் தோன்றியிருந்த சந்தேகங்களினால் எழுந்திருக்கலாம் அல்லது அவ்வாறு இல்லாமலும் இருந்திருக்கலாம். ஆனால் அக் கேள்விகள் த.ஈ.வி.பு.களின் சமாதானப் பொறுப்புகளைப் பற்றிச் சிறீலங்கா மக்கள் கொண்டிருந்த சந்தேகமான அபிப்பிராயங்களைப் பிரதி பலித்துள்ளன.

பிரதமரின் பேச்சுக்கள் சிறீலங்கா ஆயுதப் படையினரின் பக்கம் திரும்பியது. வானொலி மூலம் பேட்டியை அவதானித்துக் கொண்டும், தினசரிகள் மூலம் அப்பேட்டிகளை வாசித்தும் அறிந்த சிறீலங்காவின் மக்கள் பலர் பிபிசியில் பேட்டி கண்டவரை விட அதிக அதிர்ச்சி அடைந்திருப்பர். தமது நிர்வாகத்திலுள்ள நிறுவனங்களை இவ்வாறு கண்டிக்கும் ஒரு சில தலைவர்களே சிறீலங்காவில் காணப்பட்டனர்.

சிறீலங்காவின் ஆயுதப் படையினரைப் பற்றித்தான் கூற வேண்டுமென அநேகமாகப் பிரதமர் எண்ணியிருக்கலாம். ஆனால் அவர் எவற்றைப்பற்றிக் கதைக்கவில்லை என்பதைத் தான் நாம் முதலில் அவதானிக்க வேண்டும். வடபகுதியின் பொருளாதாரத் தடைகளில் ஒரு சிலவற்றையாவது நீக்குவதற்கு விரும்பாத அதிகாரிகளும் இருக்கின்றனர். ஒரு சிலர் பல விதமான கடத்தல் ஒழுங்கீனங்களில்கூட அகப்பட்டிருக்கின்றனர். சிலர் அவ்வாறான தடைகளை விதிப்பதின் மூலம் அதனூடாகப் பொருள் சம்பாதிக்கும் குறிக்கோளுடன் அதன் பின்னணியில் இருக்கின்றனர். ஆனால் அவற்றைப் பற்றியெல்லாம் பிரதமர் கூறவில்லை.

மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருந்த இராணுவத்தினருக்கிடையேயான இலஞ்ச ஊழல் நடவடிக்கைகள் கூட சில காலங்களுக்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. ஆயுதப்படையினருக்கு மட்டமான ஆயுத உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. சில இராணுவ அதிகாரிகளும் பாதுகாப்பு நிறுவனத்தில் ஓய்வுபெற்ற சிலரும் இக் கொள்வனவுகளில் தரகுப் பணங்களைப் பெற்றனர் என நம்பப்பட்டது. அவர்கள் யுத்தத்தின் மூலம் நன்மை அடைந்தவர்களாவர். இராணுவ அதிகாரிகளுக்கு உதவும் அவர்கள் பெரிய வரவு செலவுத்திட்டத்திற்கு ஏற்றவாறு பெருமளவிலான படையினரை வைத்திருக்க உதவுகின்றனர். யுத்தம் நீடிப்பதை அவர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்றனர். ஆனால் பிரதமந்திரி இந்த விடயங்களைப் பற்றிக்கூடக் கூறவில்லை.

யுத்தச் சூழ்நிலையில் அதன் தன்மைக்கு ஏற்ப மாறுபடக் கூடிய கருத்துக்களையே பிரதமர் கூறியுள்ளார். சிறீலங்கா ஆயுதப் படையினரைப் பற்றிக் கூறும்

போது தளங்களிலிருந்து யுத்தம் புரியும்சிப்பாய்களுக்கும் கொழும்பில் பொழுது போக்காக மேசைகளிலிருந்து பணிபுரியும் அதிகாரிகளுக்கிடையேயான வேறுபாடுகளையே அவர் தெரிவித்திருந்தார். ஆயுதப் படையினரின் தலைமைப்பீடத்தை மட்டுப்படுத்தாமல் விமர்சிக்கும் போது நிச்சயமாக அவர்கள் யுத்தம் புரிவதற்கிருக்கின்றனரா அல்லது சமாதானத்திற்காக இருக்கின்றவரா என்பதைக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

காலஞ்சென்ற ஜெனரல் கொப்பேகடுவவே, இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு தேவையில்லையென அடிக்கடி பிரசித்தமாகக் கூறிவந்தார். தற்போது சேவைபுரியும் நான்கு தளபதிகளில் எவரேனும் அவ்வாறான பிரச்சனையைப் பற்றித் தெரிவிப்பதற்கோ தமது கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கோ முயற்சிக்கவில்லை. செய்தி வெளியீடுகளிலாவது தாங்கள் இராணுவ நடவடிக்கைகளில் பேரவாக்கொண்டிருப்பதாகவும் சமாதானத்திற்கெதிரான யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாகத் தன்னும் கூறவில்லை.

## பாதுகாவலர்கள்

சிறீலங்காவின் நடவடிக்கைகளைப் பற்றிப் புதிதாக அறிந்துவரும் இளைஞர்கள் கூடத் தரப்படுத்தப்படாது இரணுவத்தினர் மேல் குற்றஞ் சுமத்துவது புத்திசாலித்தனமான செயலல்ல என்றும் அது ஆபத்தைத் தரக்கூடியதென்றும் நன்கு அறிவர். நாங்கள் எவவளவு தூரம் சமாதானத்திலும் தீவிரமற்ற போராட்டத்திற்கான தீர்வுகளிலும் விருப்பும் நம்பிக்கையும் கொண்டுள்ள போதிலும் மிக உண்மையான விடயம் என்னவெனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை எல்லாம் தடுத்திருப்பது அவர்களின் பண்புமிக்க செயற்பாடுகளோ சர்வதேச அபிப்பிராயங்களோ அல்ல. ஆனால் சிறீலங்காவின் தென் பகுதிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையேயான செயற்பாடுகளைத் தடுத்து வைத்திருப்பது சிறீலங்கா ஆயுதப்படையினர் மாத்திரமேயாகும். சிறீலங்கா இராணுவத்தினரை முக்கியமற்றவர்கள் எனத் தெரிவிப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு குறிப்பிடத்தக்க விடயங்களிலும் அரசு அவர்களுடன் ஆலோசனை செய்தல் வேண்டும். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைப் பற்றியும் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

துர்அதிஷ்ட வசமாக பி.பி.சியினால் சிறீலங்கா இராணுவத்தினர் பற்றிய திருமதி. குமாரதுங்காவின் விமர்சனங்கள் அவை உண்மையில் இருந்ததை விடச் சற்றுக் கடுமையானதாகப் பிரபல வெளியீடுகளிலெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கலாம். சிறீலங்கா இராணுவத்தினர் சமாதானத்திற்குப் பெருந்தடையாக

இருக்கின்றனர் என்பதனாலல்ல ஆனால் உண்மையில் அவர்களைக் கண்டிக்கவேண்டிய விடயங்கள் இன்னும் பல உள்ளன. எங்களுடைய அரசாங்கங்களை வழிநடத்திய அரசியல் வாதிகளினால் இவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்பட்டும், கண்டிக்கப்பட்டும் வந்துள்ளனர். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளோ எந்த அரசியல் வாதிகளினாலும் ஆதரிக்கப்பட்டோ, கண்டிக்கப்பட்டோ வருவதில்லை என்பதனால் அவர்களின் கட்டமைப்பின் எஜமானர்கள் அவர்களேயாவர்.

பி. பி. சியின் பேட்டியின் பின்னர் குறிப்பிடத்தக்க அளவில் பூசல்கள் இருந்தபோதிலும் பிரதமமந்திரியின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஒரு தீர்வு காணவேண்டுமென்ற நம்பிக்கையும், உறுதியும் அவரிடம் இருக்கும்வரை அது பற்றி அவரைக் கேட்பது மிகவும் கடினமான விடயமாகும். அவ்வாறு அவர்களுக்கு ஆதரவைத் தெரிவித்து வரும் அவர் ''சமாதானத்திற்கான படையினர்'' என அவர்கள் மேல் விருப்புக் கொண்டுள்ளார். இந்த எண்ணம் உண்மையில் நியாயப்படுத்தப்படுமா என்பது நல்ல ஒரு கேள்வியாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களைக் கொடுத்த பின்னரும் அது அவ்வாறி நக்கவில்லை என்பதை சனாதிபதி பிரேமதாசா கண்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளிலும், தன்னிலும் நம்பிக்கை இழந்த சனாதிபதி பிரேமதாசாவின் தவறான கருத்துக்களால் நூற்றுக் கணக்கான சிறீலங்கா ஆயுதப் படையினர் தமது உயிர்களை அர்ப்பணிக்க நேரிட்டது.

பேச்சுவார்த்தை மேசையில் தனித்துவமாக இருந்த தமிழீழக் கொடியே வடக்கை உண்மையில் யார் ஆட்சி செய்கின்றனர் என்பதை நினைவு படுத்துகின்றது. பேச்சுவார்தை மேசையில் வைக்கப்பட்ட அந்தக்கொடி தவறுதலாக வைக்கப்பட்ட ஒன்றல்ல. கடந்த ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தவாறு இது முக்யத்துவமற்ற ஒருவிடயமல்ல, தமிழீழ விடுதலைப் புலிகளின் நீண்டகாலக் குறிக்கோளுடன் நெருங்கிய தொடர்புடைய ஒன்றாகவே அதைப் பார்த்தல் வேண்டும்.

## வேறுபட்ட குறிக்கோள்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்போது அவர்களுடைய பிரதான குறிக்கோள் என்னவென்பதை மனதில் கொண்டிருப்பது மிக முக்கியமானதாகும். உடன்பாடொன்றிற்குவந்து அதன் மூலம் அவர்கள் ஆயுதங்களை வைக்க உடன்பட்டால் இன்நேரத்திலாவது தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தை நிச்சயமாக விரும்பிச் செய்கின்றனர் எனக்கூறமுடியாது. அல்லது அதை உபயோகமான செயல் எனவும் கூறமுடியாது. பாலஸ்

KOHA
JPL/04
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



தீன விடுதலை முன்னணியோ அல்லது ஐரிஷ்குடியரசு இராணுவத்தினரைப் போலவோ அன்றி தமிழீழ விடுதலைப் புலிகள் உண்மையில் பிரதேசமொன்றைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளனர்.

வடபகுதி சென்றுகொண்டிருந்த உணவுக்கப்பல் காரணமின்றி மூழ்கடிக்கப்பட்டதும் அதைத் தொடர்ந்து கடற்படை ரோந்துக்கப்பல் மீதான தமிழீழவிடுதலைப் புலிகளின் வெற்றிகரமான தாக்குதலும் நல்லெண்ணத்திற்கான சமிக்ஞைகளைக் கொண்டவையெனக் கூறுவது கடினமானதாகும். அவற்றின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் குறிக்கோளான தமிழீழத்தை இராணுவத் தீர்வின் மூலம் பெற்றுக்கொள்வதில் மாற்றம் எதுவுமில்லை என்பதேயாகும். அவர்கள் வெற்றிகரமாக வடபகுதி இராணுவ முகாம்களுக்கான நிலத்தொடர்புகளைத் துண்டித்துள்ளனர். பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் நடக்காவிட்டாலும் கடல் தொடர்புகளைத் துண்டிப்பதற்கான முயற்சியில் அவர்கள் தற்போது மெதுவாக ஈடுபட்டுள்ளனர். ஆனால் நிச்சயமாக இந்த முயற்சியிலும் அவர்கள் வெற்றியீட்டிக் கொள்வர்.

உண்மையாகத் தமிழீழவிடுதலைப்புலிகள் தலைமைப்பீடம் தமிழீழத்திற்குப் பதிலாக மாறுபட்ட ஒரு சூழலை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளது. ஆனால் அவர்களுடைய மனதிலுள்ள ''மாறுபட்ட சூழல்'' என்பதன் கருத்து அரசு (அதிகமான சிங்கள மக்கள்) அதைப்பற்றி மனதில் கருதியிருப்பதை அல்ல. இது பற்றிய மனத்தோற்றங்கள் ஏதாவது இருந்து அதனால் நம்பிக்கைத் துரோகம் இழைத்ததாகக் கூறுதல் அவசிய மற்றதாகும்.

தமிழீழத்திற்கான இன்றைய சமர் பொதுவாகத் தமிழர்களுக்கெதிராக 40 ஆண்டுகளுக்கும்மேலான காலத்தில் அரசாங்கங்களினால் வேறுபாடுகள் காணப்பட்டதும் 10 ஆண்டுகள் யுத்தம் நடைபெற்றதுமான படிமானங்களேயாகும். இந்தத் தாய் நாட்டிற்காக ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்ததுடன் தொடர்ந்தும் செயல்பட்டுவருகின்றனர்.

புதிய அரசு ஒன்றினால் இரு மாதங்களாக நல்லெண்ணம் காட்டப்பட்டு ஒருதனித் தலைவரில் நம்பிக்கை கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முக்கிய குறிக்கோளை மாற்றுவார்கள் எனக் கருதுவது முற்றிலும் நியாய மற்றதும் நம்பமுடியாததுமாகும்.

KOHA JPL

க நேர்மையாகத் தமிழீழவிடுத லைப் புலிகளுடன் பேச்சுவார்த் தைகளில் ஈடுபட முயற்சிப்பது ரியானதாகும். பி. பி. ஸீயின் பட்டியின் போது திருமதி. குமா துங்க பேச்சுவார்த்தை பற்றிய னது கருத்துக்களைத் தொகுத் துக் கூறும் போது "தமிழீழ விடுதலைப் புலிகளைப்போல் மக்கள் ஆதரவுடைய" கொரிலா இயக்கங்களே நிலைத்திருக்கும். மக்கள் ஆதரவின்றி எவராலும் நிலைத்திருக்க முடியாது. அவர் கள் மக்களில் இருந்து தம்மை விரோதித்துக்கொண்டால் நீண் டகாலம் வெற்றிகரமாக இருக்க முடியாது." எனக்கூறியுள்ளார்.

பிரதமர் திருமதி குமாரதுங் காவின் நேர்மை தமிழீழவிடுத லைப் புலிகளின் குறிக்கோளை மாற்றககூடியதாக இருந்து அதி லுள்ள இடை நிலையிலுள்ளவர் களை தமக்குச் சாதமாக வலுப் படுத்தக் கூடிய ஒன்றாக இருக் கலாம். ஆனால் மீண்டும் ஒன் றுபடும் சிறீலங்காவின் சனாதி பதியாக வரும் குறிக்கோளில் அவர் தொடர்ந்து வெற்றிபெற வேண்டுமானால் தமிழீழ விடுத லைப் புலிகளின் குறிக்கோளான பிரிவினைவாதத்தை அவர் மன தில் கொண்டு அதற்கேற்ப செயல்படல் வேண்டும்.

## சூரிய ஒளி பரவுதல்

சூரிய ஒளியானது காற்று மண்டலத்திலுள்ள மூலக் கூறுக ளில் பட்டுச்சிதறி நம்மை வந்தடை வதால் எல்லாத் திசைகளிலும் வெளிச்சம் பரவி இருக்கிறது. ஒளியின் திசையில் சிதறும் ஒளி யில் சிவப்பு நிறம் அதிகமாகவும் செங்கோணத் திசையில் சிதறும் ஒளியில் நீலநிறம் அதிகமாகவும் இருக்கும் என்பது கோட்பாடு. காலையிலும் மாலையிலும் கீழ் வானத்தை நோக்கும் போது சித றும ஒளி 30° கோணத்திற்கும் குறைவாக இருப்பதால் சூரியன் உதிக்கும் போதும் மறையும் போதும் அங்கு மஞ்சள் கலந்த ஒளி தோன்றுகிறது.

## சூரியகாந்திப் பூ திசை திரும்புவது ஏன்?

35G1CC

தாவரங்கள் பொதுவாக சூரிய ஒளியை நோக்கி வளர்ந்து செல்கிறது. சூரியகாந்திப்பூ சூரிய ஒளியை நோக்கித் திசை திரும்பு கிறது. இந்த இயக்கத்திற்கு Phototropism என்று பெயர். இந்த இயக்கத்திற்கு சூரிய ஒளி உணர்வு அவசியமாகிறது. சூரிய காந்திப்பூ இந்த ஒளி உணர்வின் மூலமாக திசை திரும்புகிறது. இதற்கு உறார்மோன்களும் கார ணமாக இருக்கலாம் என்று நம் பப்படுகிறது.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.